கோதைத் தீவு

வழங்கும் பகுதி

வ. ரா.

புத்தக நிலையம்

தெப்பக்குளம் :: திருச்சி.

முதற்பதிப்பு : பிப்ரவரி 1945.

சகல உரிமையும்
புத்தக நிலையத்தாருக்கே.

விலை ரூ. 2-0-0.

முகவுரை

கோதைத்தீவு, நீண்ட கால முயற்சி. நான் இளைஞனா யிருக்கையில், ஆண்பிள்ளைகள் நடத்தும் குடும்ப தர்பாரைக் கண்டு, மனம் புழுங்குவேன். இந்தத் தர்பாரை நாடகமாக எழுதலாமா என்று ஒரு நண்பரைக் கேட்டேன். 'இளைஞர்கள் யாவரும் பெண்களுக்குப் பரிந்து பேசுவது இயற்கை. இதே ஆத்திர உணர்ச்சி, உன் உள்ளத்தில் இருபது வருஷத்துக்குமேல், குறையாமல் குலையாமல் தங்கி யிருக்குமானால், நீ ஆண்களைப் பற்றி இகழ்ந்தும் எழுதலாம்' என்று அந்த நண்பர் எனக்கு யோசனை சொன்னார்.

அவர் சொன்னது ஒரு வகையில் உண்மையெனக் கொண்டு, இருபது வருஷம் பொறுத்திருந்தேன். என் ஆத்திரம் தணிந்த பாடில்லை. நம்மவர்களின் வாழ்க்கை எல்லாத் துறைகளிலும் பாழாகிக் கொண்டு வருவதைப் பார்க்க, என் மனம் பொறுக்கவில்லை.

பெரும் பான்மையான வீடுகளில், இல் வாழ்க்கை நடைபெறவில்லை. எலி - பூனை சண்டைதான்; அல்லது செக்கில் பூட்டின மாடுகளைப்போல, உயிரற்ற வாழ்வு வாழ்ந்து வருகிறார்கள். நாட்டை இழந்து விட்டார்கள். வீடும் நரகமாய்ப் போய் விட்டால், வேறு வேதனையும் வேண்டுமா? வீட்டை நரகமாக்கி வருவது ஆண்பிள்ளை என்பது நான் கண்ணால் பார்த்து வரும் உண்மையாகும்.

நமது நாட்டில், பெண் அடிமையாகப் பிறக்கிறாள்; வளர்கிறாள்; வாழ்கிறாள்; இறக்கிறாள். அவளுக்குச் சொத்து உரிமை கிடையாது. அவளுக்கு, (இளமையிலேயே தாலியை இழந்தாலும்) மறு விவாக பாத்தியம் கிடையாது. மேல் படிப்பு படித்து, உயர்ந்த உத்தியோகங்களுக்கு அவர்கள் வர முடியாது. எனவே, அவர்கள், ஆண்பிள்ளையின் லக்ஷியத்தில் பங்கு எடுத்துக் கொள்ளவேண்டும் என்று எதிர்பார்ப்பது நியாய மாகாது; புத்திசாலித்தனமும் ஆகாது.

வாய் விட்டுச் சொல்ல சந்தர்ப்பமும் தைரியமும் உண்டாகுமாகில், பெண்கள் என்ன சொல்லுவார்கள் என்பதையும் என்ன செய்வார்கள் என்பதையும், கோதைத்தீவு என்ற கற்பனையின் மூலமாக, என் சகோதர ஆண் மகன்களுக்கு எடுத்துக் காண்பிக்க எத்தனித்திருக்கிறேன். இதை வெறும் கற்பனை என்றும் மதித்துவிடக் கூடாது. ஆங்காங்கே, பெண்கள் துண்டு துண்டாக நின்று, தங்களுக்குள் 'அரசல் பொரசலாக' பேசிக்கொண் டிருப்பதைத் தான், நான் உருவம் கொடுத்து எழுதியிருக்கிறேன்.

ஆணோடு, பெண் 'சரிநிகர் சமானமாக' வாழ்ந்திருந்தால், இந்த நாட்டின் ஆட்சி நம்மவர்களின் கையை விட்டுப் போயிருக்காது. கல்வி, மேம்பாடு அடைந்து, மக்களுக்குள் அறிவு பரவிக் கிடக்கும். கவிதை, ஊற்றுப்பெருக்கு எடுத்து, நம்மவர்களை உய்வித்திருக்கும். நம்மவர்கள் விதி என்று மண்டையில் அடித்துக் கொள்ளமாட்டார்கள். விதியை மதியால் வெல்லலாம் என்று மார்பு விரியப் பேசுவார்கள். அடிமைக்கு வாழ்வு ஏது? இன்பம் ஏது? கடவுள் ஏது? எல்லாம் பாவனைகள் தான்.

பெண் ஆசை கூடாது என்று எந்தப் பாபி எந்த நேரத்தில் வாய் திறந்தானோ, தெரியவில்லை. அவன் மகா பாபியாகத்தான் இருக்க வேண்டும். பிரபஞ்சத்தின் மாண்பையும் விசித்திரத்தையும் உணர முடியாத ஒருவன், ஆரம்பித்த கூச்சல் இது. ஆண்தான், படைப்பில் சர்வாதிகாரி போல எண்ணிக் காரியம் செய்து வந்தான். முக்தியா? ஆணுக்குத் தான். சொத்தா? சுதந்திரமா? அது பெண்ணுக்கு எதற்காக? அதிகாரமா? அது ஆணின் ஏகபோகம். இப்படி எண்ணி வாழ்ந்த நம் நாட்டு ஆண்கள், அடிமைகளாக வாழ்கின்றார்களே, அவர்கள் கோதைத் தீவைப் படித்தாகிலும் யோசனை செய்ய மாட்டார்களா என்ற ஆசையுடன்தான், இதை நான் எழுதினேன். சில முட்டாள்கள் நினைக்கக் கூடியதைப் போல, ஆணுக்கும் பெண்ணுக்கும் சண்டை மூட்ட அல்ல.

நுங்கம்பாக்கம்
சென்னை.

வ. ரா

சமர்ப்பணம்

படாடோப மில்லாமல் பரந்த நோக்கத்துடன் தம்
தொழிலின் மூலமாக ஜன சமூகத்துக்கு
பேருபகாரம் செய்து வரும்
என் நண்பர்
டாக்டர் வி. டி. தேசிகாச்சாரியார்
அவர்களுக்கு
இந்நூல்
அன்புடன் சமர்ப்பிக்கப்பட்டது.

பொருளடக்கம்

எண்			பக்கம்
1.	தோன்றினான்	...	1
2.	தூக்கத்துக்கு மருந்து	...	5
3.	கணபதிராயன் சொன்ன கதை	...	11
4.	துரோகத்தின் விதை	...	16
5.	துரோகத்துக்கு பெருமை	...	21
6.	அர்த்தமாகாத நடத்தைகள்	...	26
7.	சிறுமைப் படுத்தினவைகள்	...	32
8.	எங்கள் கூட்டு வாழ்க்கை	...	40
9.	கூச்சல்பட்டி	...	48
10.	கை விலங்கு	...	53
11.	சந்திப்பு	...	58
12.	வேடிக்கை	...	65
13.	நாரிபுரி வர்ணனை	...	68
14.	(தொடர்ச்சி)	...	74
15.	களிப்பு	...	80
16.	ஆண்டாள் பெருநாள்	...	86
17.	குற்றவாளி யார்	...	97
18.	சாவித்திரியின் சாகஸம்	...	111

கோதைத் தீவு

அத்தியாயம் - 1.

தோன்றினான்

'எதற்காக, என்னை நீ இங்கே அழைத்தாய்' என்று அதட்டுவதைப் போல, ஒரு குரல் என்னைக் கேட்டது.

'நானாவது அழைக்கவாவது? கைது செய்யப்பட்டு, சிறைக்குள்ளே வந்த இருபது நாட்களாக எனக்கு தூக்கமே வரவில்லை. பகலும் இரவும் ஒன்று போல கழிவதாயிருந்தால், மனிதன் உயிர் வாழ முடியுமா' என்று அந்தக் குரலுக்கு பதில் சொல்லுவது போல, எனக்குள்ளாகவே சொல்லிக் கொண்டேன்.

'சிறை என்பது சிங்காதனம் என்று மயக்கம் கொண்டு, நீ சிறைக்குள் வந்தாயா' என்று அந்தக் குரல் கேட்டது.

'நானாக சிறையை விரும்பி, அதற்குள் வரவில்லை. என்னை இங்கே கொண்டு வந்து தள்ளியிருக்கிறார்கள். என்னைக் கொண்டு வந்து வைத்தவர்களிடம் போய்க் கேள், நீ கேட்க வேண்டியதையெல்லாம்' என்று நான் முடுக்காகவே பதில் சொன்னேன்.

குரல் : இந்த மாதிரி வாய்ப்பதட்டமாக, எதையாவது வெளியே பேசியிருப்பாய். அதற்காகத் தான், ஸர்க்கார், உன்னை உள்ளே தள்ளியிருக்கிறார்கள். வாய்ப்பதட்டமெல்லாம், பேச்சு சுதந்திரம் என்று எண்ணிக் கொண்டிருப்பவர்களுக்கு சிறைதான் சரியான வாசஸ்தலம்.

நான் : நீயும் ஸர்க்காரின் ஆள்மாதிரி பேசுகிறாயே? நீ யார், அப்பா?

குரல் : நீ வருந்தி அழைத்த ஆள்.

நான்: நான் யாரையும் வருந்தி அழைத்ததாக, எனக்கு ஞாபகம் இல்லையே!

குரல்: உனக்கு ஏன் இருக்கும்? சென்ற இருபது நாட்களாக, விழிப்பும் இல்லாமல் தூக்கமும் இல்லாமல், நீ தான் மயக்கத்தில் ஆழ்ந்து கிடக்கிருயே! 'கணபதி ராயன், அவன் இரு காலைப் பிடித்திடுவோம்' என்று நீ சற்று முன் பாடினது, உனக்கு நினைவு இல்லையா?

நான்: தூக்கம் வராமல், நான் பாரதியாரின் பாடலைப் பாடிக் கொண்டிருந்தேன். நீ சற்று முன் குறிப்பிட்ட பாட்டையும் பாடினேன். எனக்கு நினைவு இருக்கிறது.

குரல்: நீ காலைப் பிடித்துக் கொள்ளப் போவதாகச் சொன்னுயே, அந்தக் கணபதி ராயன் நான் தான்.

நான்: நீ எதற்காக வந்தாய்? நான் ஏதோ அலுப்புக்கு ஆற்ற மாட்டாமல் பாடிக் கொண்டிருந்தேன்.

குரல்: அதற்காகத் தான் நான் வந்தேன். வீணுகப் பேச்சை வளர்க்கவேண்டாம். உனக்கு என்ன வேண்டும்? சொல்லு.

நான்: தூக்கம் வரவேண்டும். அவ்வளவு தான், என்னுடைய இப் போதைய ஆசை.

குரல்: லக்ஷியம் ஒன்றை மனதில் வைத்துக் கொண்டு, அதற்காக பாடுபட நினைப்பவர்களுக்கு தூக்கமே வராது. நோயால் தூக்கம் வராவிட்டால், அதற்கு மாற்றுத் தேட வேண்டியது தான். உலகம் முன்னேற வேண்டும் என்று ஆசை கொண்டு, அதற்காக பாடுபடுபவர்களுக்கு தூக்கம் வராமல் இருப்பது இயற்கைதான். நீ, இந்த இனத்தில் சேர்ந்தவன் என்பது தானே உன் எண்ணம்?

நான்: உன் கிண்டல் ஒன்றும் எனக்கு இப்பொழுது தேவையில்லை. தூக்கம் வருவதற்கும் தூக்கம் வந்தாலும் என் லக்ஷியம் கெடாமலிருப்பதற்கும் ஏதாவது உன்னுல் வழி செய்ய முடியுமானுல், செய். இலலாவிட்டால், நீ வந்த வழியைப் பார்த்துக கொண்டு போகலாம்.

குரல்: உத்தரவு ரொம்ப கண்டிப்பாக இருக்கிறதே! போகமாட்டேன் என்று சொன்னுல்—?

நான் : இருந்து, தொலைந்து போ. இரவிலே, சிறை அறையிலே, தனியாக இருக்கும் எனக்கு துணை கிடைத்தது என்று எண்ணிக் கொள்ளுகிறேன்.

நான் இந்தப்பதிலை சொன்னதும், கோடை இடி இடித்ததைப் போல, அந்தக் குரல் சிரித்தது. எனக்கு அந்த நிமிஷம் வந்த கோபம் இவ்வளவு அவ்வளவு என்று சொல்லி முடியாது. 'அழையாமல் வந்த விருந்தாளி அதிகாரம் செய்வதைப் போல் இருக்கிறது, இந்தக் குரல்.செய்கிற வித்தை. நான் ஏதோ பொறுக்க முடியாத, விசித்திரமான தவறைச் செய்து விட்டது போல, இந்தக் குரல் என்னைப் பார்த்து நையாண்டி செய்து சிரிக்கிறதே? அடிமை தேசத்திலே, இப்படித்தான் எலலாம் தலை கீழ்ப் பாடமாக நடக்கும் போலிருக்கிறது' என்று எண்ணிக் கொண்டு, 'எதற்காக நீ சிரிக்கிறாய்' என்று அந்தக் குரலை கேட்டேன்,

குரல் : நீ 'பல்டி' அடித்ததை பார்த்து, எனக்கு சிரிப்பு வந்தது. ரஸிக்கிறாப் போல ஒன்று நேர்ந்தாலும், அதை அனுபவிக்காமல் இருக்க வேண்டும் என்கிறாயா ?

நான் : நான் என்ன 'பல்டி' அடித்தேன்?

குரல் : நிற்காதே, போ என்று என்னை வெருட்டினாய். போக மாட்டேன் என்றால் என்ன செய்வாய் என்று கேட்டேன். அந்த சமயத்தில், என்னை கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளிவிடுவாயோ என்று பயந்து கொண்டிருந்தேன். அப்படி யொன்றும் செய்யாமல், 'தொலைந்து போ. இங்கேயே எனக்குத் துணையாக இரு' என்று அடங்கி ஒடுங்கி, பதில் சொன்னாய். இந்த 'பல்டி' யை கண்டு, நான் சிரிக்காமல் என்ன செய்கிறது?

நான் செய்த தவறின் விசித்திரம் அப்பொழுது தான் எனக்கு முழுதும் புலப்பட்டது. என்னுடைய பதில், நான் படாடோபமாக பேசினதற்கு அனுசரணையானதல்ல. படாடோபமாகப் பேசிவிட்டு, பதுங்குகிறது தர்க்க சாஸ்திரத்துக்கு விரோதமல்லவா? அதை கண்டு, அந்தக் குரல் சிரித்தது மிகுதியும் பொருத்த முள்ளதுதான். என்ன, அசடுவழிய, காரியம் செயதேன்! நம்முடைய ஜனங்கள் எல்லாரும் என்னைப் போலவே அசடு வழிகிறார்கள் என்று வருத்தப்பட்டேன்.

குரல்: எதற்காக வருத்தப்படுகிருய்? தவறு நேரு வது சகஜம். நேர்ந்தால், நேர்ந்த வகையை தெரிந்து கொள். அதற்காக வருத்தப்பட்டுக் கொண்டிருக்காதே. வருத்தப்பட்டுக் கொண்டிருந்தால், மேலே, வேலை ஓடாது.

நான்: நீ சொல்லுவது உண்மை. அதை ஏற்றுக் கொள்ளுகிறேன். எனக்கு தூக்கம் வரவில்லையே! அதற்கு என்ன செய்கிறது?

குரல்: தூக்கத்தை நீயாக வருவித்துக் கொள்ள வேண்டும். அல்லது நான் ஏதாவது சொல்லுகிறேன். அதை நீ கேட்டால், சுவாரஸ்யத்தாலோ அல்லது அலுப் புத் தட்டியோ, நீ தூங்கிப் போய் விடுவாய்.

நான: சரி! அப்படியே செய்கிறேன். என்ருலே தூக்கத்தை வருவித்துக் கொள்ள முடியாது. நீ சொல்லு வதை நான் கேட்டுக் கொண்டிருக்கிறேன். நீ யார்? உன் வரலாறு என்ன? இவைகளை முதலில் சொல்லு.

குரல்: எனக்கு கணபதிராயன் என்று பெயர். நான் சிருஷ்டி ஆரம்பமான கால முதல் இருக்கிறேன். ஆனல், எனக்கு இந்தப் பெயர் கொடுத்தவர் பாரதியார்.

நான்: பாரதியார் என்கிருயே? நீ யாரைக் குறிப் பிடுகிருய்?

குரல்: பாரதியார் என்பவர், ஒருவரே ஒருவர். பார திப் பட்டமதாங்கிய பலர் இருக்கலாம். நான் குறிப்பிடும் பாரதியார், உலக மகாகவி. உன்னுடைய உள்ளத்தில் எப் பொழுதும் வீற்றிருப்பவர். சந்தேகமில்லாமல் சொல்லி விடுகிறேன். தமிழர்களின் குல தெய்வத்தைப் போலவும் உலகின் இஷ்ட தெய்வத்தைப் போலவும் விளங்குகிற சுப்ரமணிய பாரதியாரைத் தான் நான் குறிப்பிடுகிறேன்.

நான்: பரம சந்தோஷம். நீ இனி எதைச் சொன்ன லும் கேட்கத் தயாராக இருக்கிறேன்.

குரல்: இன்றைக்கு, உனக்கு, இப்பொழுது தூக்கம் வந்துவிட்டது. நாளைக்கு, இப்பொழுது வந்தது போலவே வருகிறேன். அழகாக தூங்கு.

கடைசியாக, கணபதிராயன் சொன்னது, என் காதில் சரியாக விழவில்லை. நான் தூங்கிப் போய் விட்டேன்.

அத்தியாயம் - 2.

தூக்கத்துக்கு மருந்து

மறுநாள் இரவு பத்து மணி இருக்கும். சொன்ன சொல் தவறாமல், கணபதி ராயன் வந்து தோன்றினான். 'ராமா! நீ விழித்துக்கொண்டிருக்கிறாயா' என்று அவன், புன் சிரிப்பு சிரித்துக்கொண்டே, என்னைக் கேட்டான்.

பக்கத்து அறையில் குரட்டைவிட்டு தூங்குகிற சத்தம் என் காதில் விழுந்தது. 'நீ சொல்லுகிற தூக்கம், கணபதி ராயா, பக்கத்து அறையிலே, சங்கீதத்தோடு, நர்த்தனம் செய்கிறது' என்று நானும் சிரித்துக்கொண்டே சொன்னேன்.

கணபதி ராயன்: நல்லவேளை! அப்பா! அத்தி பூத்தது போல, ஒரு தரமாவது, உன்னிடமிருந்து சிரிப்பை வரவழைக்க முடிந்ததே! அழகாக சிரிக்கத் தெரிந்தவர்கள் தீர்க்க ஆயுளோடு இருப்பார்கள். தன்மயக்கத்துக்கும் அவர்களுக்கும் வெகுதூரம்.

நான்: எனக்கு இந்த தத்துவமெல்லாம் வேண்டாம். எனக்கு இப்பொழுது தேவையாக இருப்பது தூக்கத்துக்கு மருந்து. அதற்கு வழி கண்டு பிடித்துக்கொண்டு வந்திருக்கிறாயா?

கணபதி ராயன்: என்னமோ பார்ப்போம். உனக்கு என் வரலாறு தெரியவேண்டும் என்றாயே? அது மறந்து போய் விட்டதா?

நான்: தூக்கத்துக்கு அந்த மருந்தைத்தான் நீ கொண்டு வந்திருப்பாய் என்று எனக்குத் தெரியும்.

கணபதி ராயன். அது பயன்படாதோ?

நான்: பயன்படுமா, பயன்படாதா என்று முன் கூட்டியே, எப்படி சொல்லமுடியும்? கதையை நீ சொல்லிக் கொண்டே வந்தால், விஷயம் தெரிந்துபோகிறது.

'நல்லது; அப்படியே ஆகட்டும். நடந்ததைச் சொல்லுவதுதானே வரலாறு? அதற்கு வர்ணனையும் கற்பனையும் தேவை இல்லையே? கதையின் சுவாரஸ்யம், நான் சொல்லி

வருவதில் இல்லை என்றால், என் வாழ்க்கை சுவாரஸ்யமில்லை என்றுதான் அர்த்தம். குரூபி ஒருவன், படத்தில் அழகாக விழவேண்டும் என்று ஆசைப்பட்டால், அது முடிந்த காரியமா? தத்ரூபமாக விழத்தான் முடியும். என் வரலாறை உன்னிடம், எதையும் ஒளிக்காமல் சொல்லுகிறேன். அது போதுமா, இல்லையா' என்று கணபதி ராயன் என்னைக் கேட்டான்.

எனக்கு, இதைக் கேட்டதும் அடங்காமல் சிரிப்பு வந்தது. 'ஒன்றையாவது ஒளிக்காமல, தங்கள் தற்சரிதத்தைச் சொன்ன மகான்கள் இந்த உலகில் இருந்ததே இல்லை. ஒருக்கால், காந்தி இந்த விதிக்கு விலக்காக இருக்கலாம். எதையும் மறைக்காமல் சொல்லுகிறேன் என்று செய்துகொண்ட சபதம் வீணைகப் போய்விடும். இதற்காகத்தான், நான் சிரித்தேன். நீ சொல்லப்போகும் வரலாறைப் பற்றி, அல்ல' என்றேன்.

ஒளிக்காமல், மறைக்காமல் என்றால் சொல்ல முடியும் என்று கணபதி ராயன் உறுமினான். மறுபடியும் நான் சிரித்தேன். 'கணபதி ராயா! எந்த வகையிலும், இம்மியளவும் தவறு செய்யாத சுகப்பிரம்மத்தைக் காட்டிலும் நீ உயர்ந்தவனாக இருக்கவேண்டும்' என்றேன்.

'தப்பிதம் செய்தால், அதை மறைத்தோ அல்லது மறுத்தோ சொல்லவேண்டும் என்பது சட்டமா அல்லது சம்பிரதாயமா' என்று கணபதி ராயன், ஆத்திரத்தோடு கேட்டான்.

'அப்படிச் செய்வது சட்டமும் அல்ல, சம்பிரதாயமும் அல்ல. அப்படிச் செய்வது இயற்கை. குற்றமோ, பாபமோ செய்யாத மகான் என்று தங்களை விளம்பரப்படுத்திக் கொள்ளத்தான் ஒவ்வொருவரும் ஆசைப்படுவார்கள். தவறை ஒப்புக்கொண்டால் நல்லவர் என்றும் புத்திசாலி என்றும் பெரியவர் என்றும் பட்டமும் புகழும்கிடைக்குமா? நம்மைப்போல அவனும் ஒரு ஆள் என்றுதானே சாதாரணமானவர்கள் எண்ணுவார்கள்? உதாரணமாக, ஒன்று சொல்லுகிறேன். அதைக் கேட்பாயா' என்றேன்.

'கண்டிப்பாகக் கேட்கிறேன்' என்றான் அவன்.

'நீ யாரிடமாவது அடிபட்டிருந்தாய் என்று வைத்துக் கொள். அந்த அவமானத்தை வெளியே சொல்ல உனக்கு தைரியம் வருமா? எந்த வழியிலும் சரிப்படாமல் போய், திருடினாலொழிய பணம் கிடைக்காது என்ற நிர்ப்பந்த மான நிலைமையில், நீ திருடியிருந்தால், அதை பகிரங்க மாகச் சொல்ல, நீ வெட்கப்பட மாட்டாயா? உனக்கு ஸ்திரீ சபலம் அதிகமாக இருந்திருந்தால், அதை நீ அடி யோடு மறைக்க எத்தனிக்க மாட்டாயா? நான் மேலே சொன்னதையெல்லாம் வெளியே சொல்லிவிட்டு, பெரிய மனிதன் என்ற பட்டம் வாங்க முடியுமா? அதனாலேதான், தற் சரிதங்களில், இந்த அம்சங்களில், உண்மையை யாரும் சொல்லுவதில்லை. ஆகவே, தற் சரிதத்தில், பிறர் எழுதும் அல்லது சொல்லும் வரலாறைக் காட்டிலும் அதிகமாக உண்மை இருக்கும் என்று நம்புவதற்கிடமில்லை. எனவே, எதையும் ஒளிக்காமல் சொல்லுகிறேன் என்று நீ சொன்ன வுடனே, எனக்குச் சிரிப்பு வந்தது' என்றேன்.

'எப்படியாவது நீ சிரித்தால், நல்லதுதான். பக்தி என்றும் சோகம் என்றும் சொல்லிக்கொண்டு, எப்பொழு தும் புலம்பலிலேயே வீழ்ந்து கிடந்த இந்த தேசத்திலே, சிரிப்புக்கு பஞ்சம் வந்துவிட்டது. சிறிய பையன்கள் சிரித் தால், பெரியவர்கள் திட்டுவார்கள். சிரிப்பு பொறுப் பில்லாத்தனத்துக்கு அடையாளம் என்று அவர்கள் நினைத் துக்கொண்டிருந்தார்கள். சிரிப்பு, பூரிப்புக்கு சின்னம் என்பது அவர்களுக்கு அர்த்தமாகவில்லை. நீ நன்றாகச் சிரி. விழுந்து விழுந்து சிரி. அதனாலே, நன்மைதான் ஏற்படும்' என்று கணபதி ராயன் சொன்னான்.

'கணபதி ராயா! நீ சாமர்த்தியசாலி. நான் கேட்ட தற்கு பதில் சொல்லாமல், என்னைத் தட்டிக்கொடுத்து, எனது நாட்டாரை திட்டிக் கெடுக்கப் பார்க்கிறாயே? மழுப் பாமல் பதில் சொல்' என்று நான் அவனைக் கேட்டேன்.

'மன்னிப்பாயாக! நீ சொன்னது அவ்வளவும் உண்மை. தற் சரிதங்களில், உள்ளதை உரைப்பதைக் காட்டிலும் மறைப்பதுதான் அதிகம். அந்த மாதிரி, என் வரலாறை நான் சொல்லப் போவதில்லை. உண்மையை உள்ளபடியே சொன்னால்தான், என் மனதிலிருக்கிற பாரம்

குறையும். தோழன் என்ற முறையில், உன்னிடம் ஒளிக்காமல் என்னால் எதையும் சொல்ல முடியும்' என்றான்.

'நான் வக்கீலுமல்ல; வைத்தியனுமல்ல என்னிடத்தில் சொன்ன எதுவும் ரகசியமாக இருக்காது. நீ இப்பொழுது சொல்லுவதையெல்லாம், நான் பகிரங்கப்படுத்தினாலும் படுத்துவேன். ஏதோ நம்பிக்கை மோசம் செய்துவிட்டதாக, நீ என்பேரில் அப்பொழுது ஆத்திரப்படக்கூடாது' என்றேன்.

'ராமா! நீ புத்திசாலி என்று நினைத்தேன். சங்கதி வேறுவிதமாக அல்லவா இப்பொழுது தோன்றுகிறது? எதுவும் தன் மட்டில் இருந்தால்தான் ரகசியம். இரண்டாம் பேருக்குத் தெரிய நேரிட்டால், அது ரகசியமாகவே இருக்காது. இது உலகம் அறிந்த ரகசியம். ஆகவே, நான் சொல்லுவதை பகிரங்கப்படுத்துவேன் என்று நீ சொன்னதில், எனக்கு சிறிதும் உடல் நடுக்கம் ஏற்படவில்லை. நான் சொல்லுவதை, புஸ்தகமாக அச்சடித்தாலும் எனக்கு யாதொரு பாதகமும் நேராது. ஆனால் ஒரு எச்சரிக்கை. அந்தப் புஸ்தகம் விலையாகாது' என்று சொல்லி கணபதி ராயன் சிரித்தான்.

'என்னமோ, நீ ஆர்ப்பாட்டம் செய்வதைப் பார்த்தால், உன் வரலாறு சிதம்பர ரகசியத்தைப் போல, ஒன்றுமில்லாமல் போய்விடும் போலிருக்கிறதே! ஏன் கொட்டிக் கொட்டி அளக்கிறாய்? சொலல ஆரம்பிக்கிறதுதானே' என்றேன்.

'உனக்கு ஒரு ரகசியம், ராமா! தெரியாது போலிருக்கிறது. சாதம், பட்டினி கிடக்கிறவனுக்கு போடணும். மருந்து, நோயாளிக்கு கொடுக்கணும். கதை, சிரத்தையோடு கேட்கிறவனுக்குத்தான் சொல்லணும்' என்றான் கணபதி ராயன்.

'நீயும் வைதீகத்திலே விழுந்துவிட்டாயா? நம்பினவருக்குத்தான் உண்மை விளங்கும் என்று வைதீகர்கள் சொல்லுகிறார்கள். உண்மை விளங்கினால்தான் நம்பிக்கை ஏற்படும். இதுதான் இயற்கையாக நேரக்கூடியது. நம்பின பிறகு, உண்மை விளங்கினால் என்ன, விளங்காவிட்டால் என்ன? கதை இனிப்பாயிருந்தால், யாரும் சிரத்தை

யுடன் கேட்பார்கள். சுவாரஸ்யமாகச் சொல்லாத எதையும் யாரும் கவனமாகக் கேட்கவே மாட்டார்கள். இந்த ரகசியம் உனக்கு தெரியாது போலிருக்கிறது' என்று சிரித்துக்கொண்டே நான் சொன்னேன்.

'வார்த்தைக்கு வார்த்தை, கக்ஷி பேசுகிறேன் என்று நினைக்காதே. குழந்தை, ஆகாரத்தின் சுவை அறிந்தா சாப்பிடுகிறது? எளிதிலே ஜீரணமாகக்கூடிய ஆனல் புஷ்டியான ஆகாரமாகப் பார்த்து, தாய் கட்டாயப்படுத்தி, குழந்தைக்கு ஊட்டுவாள். உன்னைக் குழந்தை என்று நான் சொல்ல வரவில்லை. உடனே ஆத்திரம் பொங்கி வழியாதே' என்றான் கணபதி ராயன்.

'பின்னே, எதற்காக அந்த உபமானத்தை சொன்னுய்? விகடத்துக்காகவா' என்று கேட்டேன்.

கணபதி ராயன் சொன்னுன்: 'கதையில் சுவாரஸ்யம் இருக்கவேண்டும், இல்லாவிட்டால் யாரும் கேட்க மாட்டார்கள் என்ருயே, அதற்காக அந்த உபமானத்தைச் சொன்னேன். கதை சுவாரஸ்யம் என்பது விநோதமான சங்கதி. கேட்பவர்களின் ருசியையும் சக்தியையும் தன்மையையும் பொருத்தது கதையின் சுவாரஸ்யம். அதிருஷ்ட வசத்தால், ஒருவன் குபேர சம்பத்தை அடைந்தான் என்ற முடிவை, கதையாகச் சொன்னுல், வீணர்கள் எல்லாரும் குதூகல மடைவார்கள்; குழந்தைகள் சந்தோஷப் படுவார்கள். அதையே கேட்டால், புத்திசாலிகளும் பல வான்களும் எரிச்சல் அடைவார்கள். கஷ்டப்படாமல் சுகம் கிடைத்தது, முயற்சி இல்லாமல் பலன் கிடைத்தது என்று சொன்னுல், சோம்பலுக்கு வாழைப்பழம் தோலோடு சாப்பிடுகிறவர்கள், மனசிலே குதூகலமடைவார்கள். காம விகாரங்களை கதையில் வர்ணித்து சொன்னுல், நாக்கை நொட்டை விட்டுக்கொண்டு கேட்கிறபிரபுக்கள் இருக்கிருர்கள். துப்பறியும் கதைகள் சிலருக்கு பிடிக்கும். பக்திரஸம் நிறைந்த கதைகளைக்கேட்டு, சிலர் பரவசப்படுவார்கள் புரட்சிக் கலவரக்கதைகளைக் கேட்க ஆசைப்படுகிறவர்களும் இருக்கிருர்கள். ஆகவே, பொதுவான ஒரு ருசி, கதையைப்பற்றி இருப்பதாக நீ எண்ணிக் கொள்ளாதே''

கணபதிராயன், இப்படி நீளமான பிரசங்கம் செய்தது எனக்குப்பிடிக்கவில்லை. என்னை, அவன் பச்சைக் குழந்தை என்று எண்ணிவிட்டான் போலும்!

நான்: கணபதி ராயா! உன் வாழ்க்கை வரலாறு ருசிகரமாக இருக்காது என்பதை முன்கூட்டியே குறிப்பிட்டு விட்டாய். என்னை சிறுபிள்ளையைப்போல எண்ணி, நீ நீளமான பிரசங்கம் செய்ததற்கு, அதுதான் அர்த்தம். தாமதம் இல்லாமல், உன் வரலாற்றைச் சொன்னால், கேட்கிறேன். நீ வளைத்து வளைத்துச் சொல்லிக்கொண்டே போவதைக் கேட்க, நான் தயாராயில்லை,

கணபதிராயன்: ராமா! கோபப்படாதே. கோபப்பட்டு, இந்த உலகில், எந்தக் காரியமும் ஆகிறதில்லை. நீ கோபப்படுகிறதற்கு என்ன அர்த்தம் தெரியுமா? நான் இங்கே இருக்கவேண்டாம்என்று சொல்லுவதைப் போலத்தான்.

கணபதி ராயன், இந்தமாதிரி பேசினது எனக்கு இனிக்கவேயில்லை. எனக்குப் பயங் காட்டுவதைப் போல இருந்தது. ஆனபோதிலும், கணபதிராயன் பேரில் எனக்கு உண்டாயிருந்த பிரியத்தினால், அவனிடத்தில் கோபம் கொள்ளவும் எனக்கு மனமில்லை. ஆகவே, அவன் என்ன சொன்னாலும், அதைக்கேட்டுக் கொண்டிருப்பதென்று தீர்மானித்து, ஒன்றுமே பேசாமல் இருந்தேன்.

கணபதிராயன்: ராமா! ஏன் மௌனம் சாதிக்கிறாய்? வாய்திறந்து ஏதாவது பேசேன்?

நான்: நீ பேசுவதை நான் கேட்டுக்கொண்டிருக்கிறேன். பேசுவதில் எவ்வளவு சாமர்த்தியம் தேவையோ, அவ்வளவு திறமை, கேட்டுக்கொண்டிருப்பதிலும் வேண்டும். மேலும், தூக்கம் வராதகாலத்தில், எனக்குப்பொழுது போக வேண்டாமா?

இப்படி நான் சொல்லிக்கொண்டே இருக்கையில், அலுப்பினாலோ என்னமோ, கொட்டாவி வந்தது. 'சபாஷ்! ராமா! இதற்காகத்தான் காத்துக்கொண்டிருந்தேன். போய்வருகிறேன். நாளைக்கு—' என்று அவன் முடிப்பதற்குள், நான் தூங்கிப்போய் விட்டேன்.

அத்தியாயம் - 3

கணபதிராயன் சொன்ன கதை

தூங்கினேன் என்றால், சாதாரண தூக்கமல்ல. மறு நாள் காலமே பொழுது விடிந்தும்கூட, என் தூக்கம் கலைய வில்லை. சிறை வார்டர் என் அறைகதவை திறக்கும் சத்தம் கேட்டு விழித்துக்கொண்டேன். பகீரதன் கங்கை கொண்டு வந்ததைப்போல, எனக்கு தூக்கத்தை கொண்டுவந்து கொடுத்த கணபதி ராயனை மனப்பூர்வமாக வாழ்த்தி னேன். பகல் முழுவதும், எனக்கு கணபதிராயனுடைய நினைவுதான். சொன்னபடி அவன் வருவானா அல்லது ஏய்த்துவிடுவானா என்று எனக்குள்ளாகவே யோசித்துக் கொண்டிருந்தேன்.

ஆகார வசதிகள் அதிகமாக இல்லாத சிறையிலே, ஆதாரமில்லாத வதந்திகளும் அரட்டைகளும் தான் 'உணவுப் பொருள்கள்.' ரப்பர்டயர்கள் காற்று அடிப்ப தனால் பெருத்துப்போவதைப்போல, சிறையிலே, இந்த வம் பளப்புகளைக் கொண்டு, உடம்பை உப்பிக்கொள்ளலாம். ஆனாலும் தினமும் ஒரே மாதிரியான வம்பளப்பு எடுபடுமா? ஒரே 'ஸெட்டு' முகங்களைப் பார்த்துக்கொண்டிருப்பதால், வெறுப்புத்தட்டி விடாதா ? பகல் பொழுதை எப்படியோ போக்கிவிடலாம். இரவுதான் ரொம்பவும் கஷ்டம். ஏனென்றால், சிறையில இரவு, மாலை ஐந்தரை மணிக்கே ஆரம்பமாகி, கைதிகள் தங்கள் அறைக்குள் போக வேண்டும். கதவுகளை பூட்டிவிடுவார்கள். காலை ஆறுமணி வரையிலும் அறைக்குள்ளே இருப்பதென்றால், அது சகஜ மாக முடிந்த காரியமா ?

எனவே, கணபதி ராயனை இரவில் நான் ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்ததில் ஆச்சரியமே இல்லை.

'என்ன ! ராமா ! எனக்காக, நீ ஆவலுடன் காத்துக் கொண்டிருக்கிறாப்போல தோன்றுகிறதே' என்று சொல்லிக்கொண்டே, கணபதி ராயன் தோன்றினான். 'ஆம்' என்று சொல்லிவிட்டு, 'நேற்றிரவு நல்ல தூக்கம் உனக்கு வந்தனம்' என்றேன். 'சரி ! உன் வரலாற்றை சொல்லு. கேட்க ஆவலுடன் இருக்கிறேன்' என்று அடுத்

தாற்போல சொன்னேன். 'நல்லது; அப்படியே ஆகட்டும். என்று கணபதி ராயன் கதையைத்துவக்கினன் •

கணபதிராயன் சொன்னன்: 'ஜன்ம ஜன்மாந்திரமாக, நான் இந்த தேசத்திலே தான் பிறந்தேன், வளர்ந்தேன், வாழ்ந்தேன், இறந்தேன். இந்தமாதிரி நூற்றுக் கணக்கான ஜன்மம் எடுத்திருப்பேன். காஷ்மீரம் முதல் கன்னியாகுமரி வரையிலுள்ள பிரதேசங்களில் பிறந்திருக்கிறேன். செப்பும் மொழிபதினெட்டு இருந்த போதிலும் சிந்தையில் ஒன்று உடையது இந்த தேசம். முக்தியை நாடுவதுதான், ஜன்மம் தவருமல், நான் கொண்டிருந்த லக்ஷியமாகும்'.

கணபதிராயன் சொல்லிக்கொண்டு போனது எனக்கு பிடிக்கவில்லை. 'கணபதி ராயா! உன் கதை எனக்கு வேண்டாம். ஜன்மம், முக்தி, சொர்க்கம், நரகம் என்ற வார்த்தைகளை கேட்டுக்கேட்டு, நான் அலுத்துப்போய் விட்டேன். அந்த வார்த்தைகளை, அர்த்தமில்லாமலும் அர்த்தம் தெரியாமலும் எல்லாரும் உபயோகப்படுத்துகிறார்கள். பெரிய பேச்சை பேசி, வாழ்க்கையிலே பதராய்ப் போன இந்த நாட்டின் பண்டைக்காலத்து லக்ஷியத்தைப்பற்றி யார் பேசினலும் சரி, அதைக் கேட்டால, எனக்கு உடனே மனவேதனையும தலை வலியும் உண்டாகி விடுகின்றன. பூர்வ ஜன்மம், புனர் ஜன்மம் என்று விடாமல் ஜபித்துக் கொண்டு, வீணர்களாகப் போனவர்களைப் பற்றி, என்னிடம் நீ பேசவேண்டாம்' என்றேன்.

கணபதி ராயன் சிரித்தான். சிரித்துக்கொண்டே சொன்னன்: 'ராமா! உன் சுபாவம் எனக்கு தெரிந்தது தான். எதற்காக, நீ சிறைக்குவர நேர்ந்தது என்பதும் எனக்குத் தெரியும். உன்னுடைய ஆத்திரம் ஓரளவு நியாயமானது என்றும் ஒப்புக்கொள்ளுகிறேன். அழகாக வீட்டைக்கட்டி, அதிலே குடியிருந்தால் தான், அந்த வீடு பழுதாகப்போகாமல் இருக்கும். குடியில்லாத வீடு குட்டிச் சுவராகப் போகும. இது உனக்குத் தெரியாதா......?'

'அப்படித்தான் ஆகிவிட்டது இந்த தேசம். அற்புதமான இந்த தேசத்தை படைத்துவிட்டு, அதிலே அழகாகவும் ஆனந்தமாகவும் குடியிருந்து வாழ முடியாமல், அடுத்த

உலகத்தையும் முக்தியையும் பற்றிப் பிதற்றிக்கொண்டிருந்தால், இந்த நாடு உருப்படுமா? குடியில்லாத வீடு குட்டிச்சுவராகும் என்பது அனுபவஉண்மை. அதே மாதிரி தான் தேசமும். ஒரு தேசத்தில் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்தும்., அதில் நிலையற்றவர்கள்போல தங்களை எண்ணிக் கொண்டால், அந்த தேசம், போற்றிக் காப்பாற்றுபவர்கள் இல்லாமல், பாழாகப் போவதற்கு யாரைப்போய் கேட்க வேண்டும்' என்று நான் கோபமாகச் சொன்னேன்.

'பழைய பாடத்தை திருப்பித்திருப்பி ஓதிக்கொண்டிருப்பதில் பயனில்லை' என்று கணபதிராயன் முடிக்கு முன்னமே, 'அதைத்தான் நானும் உன்னை வேண்டிக் கொள்ளுகிறேன்' என்று வெடுக்கென்று சொன்னேன்.

கணபதி ராயன் சிரித்தான். அவனுடைய சிரிப்பு, அவன் தோற்றுப் போனதற்கு அடையாளம் என்று தெரிந்து கொண்டு, நானும் சிரித்தேன்.

கணபதி ராயன் சொன்னான் : 'ராமா! நான் இரண்டு கக்ஷிக்கும் பொதுவாகத்தான்சொன்னேன். கதையைக்கேள். பிறவித்துன்பம் வேண்டாம்என்று ஒவ்வொருஜன்மத்திலும் கதறிப்பார்த்தேன். ஆனால், பிறவி என்னை விட்டுவிடுவதாகத் தோன்றவில்லை. பிறவி வேண்டாம் என்று சொல்லுவது மடமையினம் என்று முடிவுக்கு வந்தேன். பெற்ற பிறவியைப் பெருமைப்படுத்த வேண்டும் என்று தீர்மானம் கொண்டேன். பிறவியை எப்படி பெருமைப்படுத்துவது? நல்லவனாக இரு என்று சிரமமில்லாமல் சொல்லிவிடலாம். எப்படி இருந்தால் நல்லவன் என்ற வழியைக் காணுவது தான் கஷ்டமான வேலை. ராமா! தூங்குகிறாயா? நிறுத்தட்டுமா———?'

'நான் இமை கொட்டினது உண்மைதான். மேலே சொல். கவனமாகக் கேட்டுக் கொண்டுவருகிறேன்' என்றேன்.

கணபதிராயன் நான் சொன்னதை நம்பவில்லை. எனக்குத் தூக்கம் வரவில்லை என்று தெரிந்துகொண்டு, அவன் மேலே சொன்னதாவது:— 'இந்த தேசத்தில் நான் எத்தனையோ இடங்களில் பிறந்திருக்கிறேன் என்று சொன்னேனே, அது உனக்கு நினைவு இருக்கிறதா? ராமன்

காலத்திலிருந்து இந்த தேசம்தான் என்னுடைய பிறந்த நாடு. இந்த தேசம், நான் பிறந்து இறந்த தேசமானாலும், பெருமையாகவும் சுகத்துடனும் நான்வாழ்ந்ததாக சொல்ல முடியாது. நான்தான் சொன்னேனே, எனக்கு முத்தியிலும் பரலோகத்திலும் ஆசை என்று. பரலோக வெறி பிடித்து அலைந்த எனக்கு, இந்த தேசத்தைப்பற்றி கவலையே இல்லை. இதை யார் ஆண்டால் என்ன? அன்னியர்கள் ஆண்டால் என்ன? எனது முக்தி முயற்சிக்கு, எந்த ஆக்ஷியும் குறுக்கே நிற்காது என்பது என் எண்ணம். அது அப்பொழுதெல்லாம்; இப்பொழுதல்ல ... '

நான் சிரித்தேன். 'ஏன் சிரிக்கிறாய்' என்று கணபதிராயன் கேட்டான். 'நீ எவ்வளவு முட்டாள் தனமாக இப்படி எண்ணிக்கொண்டிருந்தாயோ, அப்படியே, இன்றைக்கும் கோடிக்கணக்கானவர்கள் இந்த தேசத்தில் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். அந்த அசட்டுத்தனம் இன்னும் அழியவில்லையே என்றுதான் சிரித்தேன். நான் சிரித்ததற்கு அதுதான் காரணம்' என்றேன்.

கணபதிராயன் சொன்னான்:— "அது எனக்குத் தெரியும். அதற்காகத்தான், என் அறியாமையை உன்னிடம் ஒப்புக்கொண்டேன். மேலே சொல்லுகிறேன், கேள். ருசியோடும் பசியோடும் ஆகாரம் சாப்பிட்டால், அது ஆசை என்றும் ஆசை, பாசமென்றும் அந்தப்பாசம் முக்திக்கு குறுக்கே நின்று வழிமறித்துவிடும் என்றும் நான் அக்காலத்திலே எண்ணுவேன். எதிலும் பற்று இல்லாமல் வாழவேண்டும் என்று சங்கற்பம் கொண்டேன். எதிலும் ஆசையில்லாமல் வாழ்வது என்பது வித்தை அல்லவா? அந்த வித்தையை எப்படி பழக்கிக் கொள்ளுகிறது? தாமரை இலையில் தண்ணீர் நிற்பதுமாதிரி, பட்டும் படாமல், தொட்டும் தொடாமல், ஆசையைக் களைந்து வாழ்ந்து வந்தால்தான் முக்தி கிட்டும் என்று சொல்லுகிறார்களே, அதை அப்படியே நம்பினேன். தாமரை இலையில் தண்ணீர் அப்படி நிற்கமுடியும். மனிதன் தண்ணீரா- அந்த மாதிரி வாழ்க்கை என்ற இலையில் நிற்பதற்கு? காலாலே நடப்பது இயற்கை. கையாலே நடப்பது வித்தை. இயற்கையின் பிரகாரம் நடந்தால், நெடுந்தூரம் நடக்கலாம். வித்தை செய்ய முடன்றால், வியர்வைதான் மிச்சம்.

"அந்தக்காலத்தில் நான் என்ன எண்ணிக் கொண்டிருந்தேன் தெரியுமா? இயற்கையான அழகு வாழ்க்கை, வாழ்வதைக் காட்டிலும், விநோதமான வித்தை (வித்தக) வாழ்க்கை வாழ்வதுதான் உயர்ந்தது என்று எண்ணிக் கொண்டிருந்தேன். பலன் என்ன? இயற்கைக்கு இயற்கையும் போச்சு. அது ஒரு பெரிய நஷ்டம். முத்தியைத் தரும் வித்தையையும் பழக்கிக்கொள்ள முடியவில்லை. அது சாத்தியப்பட்ட சங்கதியாக இருந்தால்தானே? ஆகவே, வித்தை பழக்கிக்கொள்ளுகிற விஷயத்தில் மிகப் பெரிய ஏமாற்றம்.

"எந்தச்செயலில், என்னை அறியாமலே பாசம் ஏற்பட்டுவிடுமோ என்று சதா சந்தேகப்பட்டுக் கொண்டிருப்பேன். எனவே, சந்தேகப் பிராணியாக ஆகிவிட்டேன். தொட்டதற்கெல்லாம் சந்தேகம். ஆடை, ஆகாரம், சுகம், செல்வம், கலை, காதல் முதலியவைகளில் ஒன்றின்பேரிலும் பாசமும் பற்றும் இல்லாமல் வாழவேண்டும் என்ற பிடிவாதத்தினுல், வைராக்கியம் வேண்டும் என்றும், விரக்தி (பற்றுதலில்லாமை) ஏற்படவேண்டும் என்றும், பிதற்றிக் கொண்டிருப்பேன் — '

"ஒகோ! நீ யந்திரத்தைப்போல வாழ முயன்று வந்தாயோ' என்று நான் கேலி செய்தேன். கணபதிராயன் கனைத்துக்கொண்டான். பிறகு ஒரு சிரிப்பு சிரித்தான். அந்தச் சிரிப்பில் என்னென்ன கலந்திருந்ததோ, தெரியவில்லை. 'என்னமோ அர்த்தமில்லாத, வியர்த்தமான வாழ்வு வாழ்ந்தேன். அனுபவத்தால், அதன் சாரமில்லாத தன்மையை உணர்ந்தேன். இனியும் அப்படி வாழ்வேனு' என்று அவன் சொல்வதுபோல, அந்த சிரிப்பில் தொனித்தது. 'அதோடுகூட, விட்டேனு, பார்' என்று யாரையோ மிரட்டுவது போன்ற பாவமும் அந்த சிரிப்பில் காணப்பட்டது.

கணபதிராயன் மேலே என்னமோ சொல்ல வாயெடுத்தான். நான் கொட்டாவி விட்டேன். அவ்வளவுதான் தெரியும். மறுநாள் காலையில், சிறை வார்டர், அறையின் கதவை, சற்று சத்தத்தோடு திறந்தபொழுது, கண் விழித்தேன். கணபதிராயன் எப்பொழுது போனுன், எப்படிப் போனுன் என்பதே எனக்குத் தெரியாது.

அத்தியாயம் - 4.

துரோகத்தின் விதை

இன்றைக்கு, ராமா என்று கூப்பிட்டுக்கொண்டே வந்தான் கணபதிராயன். நான் வாயே திறக்கவில்லை. உடனே, அவன் ஒரு குறும்புத்தனம் செய்தான். 'ராமன் தூங்குகிறதுபோலே இருக்கிறது; தூங்குகிற சமயத்தில், எனக்கு இங்கே என்ன வேலை' என்று சொல்லிக்கொண்டு அப்பால், சர்வதைப்போல ஜாடை செய்தான். 'கணபதி ராயரே! உன் ஜாடை பலிக்காது; நான் தூங்கவில்லை' என்றேன். 'என் ஜாடையும் பலித்துப்போச்சு; நீயும் பேசி விட்டாய்; நீ தூங்கவில்லை என்பதையும் தெரிந்துகொண்டேன்' என்றான் அவன்.

'சரி! ஏதாவது சொல்லப்போகிறாயா, இல்லையா' என்று அவனைக் கேட்டேன். 'சொல்லத்தான் வந்திருக்கிறேன்' என்று கணபதிராயன் சொன்னதாவது:—'ராமா! மறுபடியும சில சங்கதிகளை உனக்கு ஞாபகப்படுத்துகிறேன். பாரத தேசம்தான் என் தாய்நாடு. இந்த தேசத்திலேதான் நான் அடுத்தடுத்து பிறந்துவந்திருக்கிறேன். ஒரு பிறப்பில் நடந்ததைச் சொல்லுகிறேன். கிரீஸ் தேசத்திலிருந்து, அலெக்ஸாண்டர் என்ற வீரன், ஆசியாக் கண்டத்தின்பேரில் படையெடுத்து வந்தான். இந்தியாவினுள்ளும் நுழைந்து விட்டான்.

'அந்த சமயத்தில், பாஞ்சாலத்தில், புருஷோத்தமன் என்ற பராக்கிரமம் பொருந்திய சிற்றரசன் ஒருவன் இருந்தான். அவன், கிரேக்க வீரனை அட்டாக் என்ற இடத்தில் வழிமறித்து, அவனோடு கடும்போர் நடத்தினான். தன்னை இவ்வளவு வீரத்தோடு இதுவரையில் எதிர்த்ததை, அலெக்ஸாண்டர் கண்டதில்லை. ஆனால், முடிவில், புருஷோத்தமன் தோற்றுப்போனான். அவனுடைய அபாரமான தைரியத்தை மெச்சி, அலெக்ஸாண்டர், அவனுக்கு வீரவாள் ஒன்றை சன்மானமாக வழங்கினான்.'

'பேஷ்! எதிரியானாலும் அவனுடைய சூரத்தனத்தைப் பாராட்டுவது உயர்ந்த தன்மைதான். அலெக்ஸாண்டர் செய்ததை நான் மிகவும் மெச்சுகிறேன்' என்றேன்.

கணபதிராயன் சிரித்துக்கொண்டு சொல்லுகிருன்:— 'அலெக்ஸாண்டர் செய்ததை நானும் பாராட்டுகிறேன். புருஷோத்தமன் வீரவாளை வாங்கிக் கொள்ளலாமா, கூடாதா என்பதுதான் கேள்வி. நீ என்ன சொல்லுகிருய்?'

நான் சிறிது நேரம் யோசிப்பதுபோல் பாவனை செய்துவிட்டு, 'ஏன் பெற்றுக்கொள்ளக்கூடாது' என்று பதில் சொன்னேன்.

'நல்லது! பெற்றுக்கொள்ளலாம் என்கிருய். நான் இன்னொரு கேள்வி உன்னை கேட்கிறேன். உன்னை ஒருவன் இந்திரன், சந்திரன், குபேரன், கொடைவள்ளல் என்று புகழ்வதாக வைத்துக்கொள். அவ்வளவு புகழையும் நீ உட்கொள்ளுவாயா' என்று கணபதிராயன் கேட்டான்.

'அந்தப் புகழை நான் ஏற்கமாட்டேன். என்னை ஏய்த்து, என்னைப் பொட்டணமாக மடித்து, தன் கைக் குள் போட்டுக்கொள்ளப் பார்க்கிருன் அந்தச் சூதன் என்றுதான் எண்ணுவேன். என்னை தன்கைக்குள் போட் டுக்கொள்ள அவன் கையாளும் தந்திரம் அது என்றுதான் கொள்ளுவேன். ஆகவே, அதை தப்பு ஸ்தோஸ்திரமாகத் தான் எடுத்துக்கொண்டு, சும்மா, வாயை மூடிக்கொண்டு, கிட அப்பா என்று அவனிடம் சொல்லுவேன்' என்றேன்.

'நீ சொல்லுவது சரி; அப்படித்தான் செய்யவேண் டும். நீ சொன்னது மாதிரியே, புருஷோத்தமனும், செய் திருக்க வேண்டும் என்று உனக்குத் தோன்றவில்லையா' என்று கணபதிராயன் என்னைக் கேட்டான். எதற்காக என்று நான் திரும்பக் கேட்டேன்.

''காரணமில்லாமல், புருஷோத்தமனுடைய நாட்டின் பேரில், அலெக்ஸாண்டர் ஆக்கிரமிப்பு செய்தான். எனவே, அலெக்ஸாண்டர் நியாயத்துக்கு, விரோதி; புரு ஷோத்தமனுடைய நாட்டுக்கு, எதிரி அவனோடு சண்டை போட வேண்டியது புருஷோத்தமனுடைய கடமை. தீரத்தொடு போர் புரிந்தான் என்பதில் நமக்கு எல்லோ ருக்கும் மகிழ்ச்சி தான். ஆனல் தன் நாட்டின் எதிரி, நியா யத்தில் நம்பிக்கை இல்லாத மண்வெறி கொண்ட மனிதன், தன்னைப் போர்க்களத்தில் முறியடித்த விரோதி, அலெக் ஸாண்டர் என்பதை மறந்து, அவனிடமிருந்து, வீர வாளை

புருஷோத்தமன் சன்மானமாகப் பெறலாமா ? புருஷோத் தமனைபோரில் தோற்கடித்தது மல்லாமல், அவனை தனக்கு சாசுவத அடிமையாகச் செய்ய, அலெக்ஸாண்டர், வீர வாள் சன்மான யுக்தியை கைக்கொண்டான் என்று முடிவு கட்டிக்கொள்ளுவது தான் சரியானதாகும். புருஷோத்த மன் சன்மானததைப்பெற்றுக் கொண்டது, சூக்ஷ்மமான தேசத்துரோகமாகும்' என்று கணபதிராயன் சொன்னான்.

'எப்படி சூக்ஷ்மமான தேசத்துரோகம் என்கிறாய். எனக்கு விளங்கவில்லையே' என்று நான் அவனைக் கேட்டேன்.

'அது வெளிப்படையாகத் துரோகம் இல்லைபோல உனக்குகூட தோன்றுகிறதல்லவா ? அது தான், அலெக் ஸாண்டர் கைகொண்ட ராஜதந்திரத்தின் அழகு. எதிரி யாக இருந்தாலும் தீரத்தைப பாராட்ட கூடாதா என்று நீகூட ஏமாந்துபோய் சொல்லும்படியாக, அந்த ராஜ தந்திரம் அவ்வளவு அழகான சூக்ஷ்மத்தோடு, அமைந் திருக்கிறதல்லவா? நாட்டின் விரோதியோடு, நியாயத்தை காலால் மிதித்து காரியம் செய்பவனோடு சல்லாபம் செய் வது தெளிந்த துரோகமாகும். இதை, நுட்பமாக பார்த்தால் தான் தெரியும்' என்றான் கணபதி ராயன்.

'கணபதி ராயா ! உனக்கு வந்தனம். நீ சொல்லுவது போல, புருஷோத்தமன் அவனை அறியாமலே, துரோகம் செய்துவிட்டான். அது இவ்வளவு காலமாக, என் கண் ணில்படவே இல்லையே ! ஆச்சரியம்தான். ஒரு செயல் பார்வைக்கு நேர்மையுள்ளதைப்போல இருக்கலாம். ஆனால் அதை ஊடுருவிப்பார்த்தால், அதன் இயல்பான கெட்ட தன்மை தெரியும் என்பதை நீ எனக்கு எடுத்துகாண்பித்த தற்காக உனக்கு வந்தனம். சிறியதாயினும் சரி பெரிய தாயினும் சரி, எந்தக்காரியத்தையும் நிதானத்துடன் யோசித்துப் பார்த்துத்தான் செய்யவேண்டும் என்பது எனக்கு இப்பொழுது நன்றாகப் புலப்படுகிறது' என்றேன்

'புருஷோத்தமன் காலத்தில் இருந்த நாலே, இந்த விபரீ தத்தின் உண்மையைக் கண்டேன். பலரிடம் சொன்னேன். ஆனால் என் வார்த்தை எடுபடவில்லை. எதிலும் தீர்க்கமான விரோதத்தைப் பாராட்டுவது புத்திசாலித்தனம் அல்ல

வென்றும் நான் காண்பித்தது சின்ன புத்தி என்றும் என்னைக்கண்டித்துப் பேசினார்கள். நான் காண்பித்தது சின்னபுத்தி அல்ல. நான் செய்தது எச்சரிக்கை. ஆனால், நான் சின்ன மனிதனாக அப்பொழுது இருந்ததனால், என் வார்த்தையை யாரும் லக்ஷியம செய்யவில்லை. தராசு முனை தவறிப்போய்விட்டது என்பது எனக்குத்தெரியும். மற்றவர்களுக்கு தெரியவில்லை. இதைக்கண்டு, நான் மிகுதியும் வருத்தப்பட்டேன். இந்த தேசத்துக்கு என்னென்ன விபரீதங்கள் ஏற்படப் போகின்றனவோ என்று பயந்தேன். நான் பயந்ததெல்லாம் உண்மையாகவே நடந்து விட்டன' என்று கணபதி ராயன் மிக்க வருத்தத்தோடு சொன்னான்.

'கணபதி ராயா! நீ சொல்லுவது உண்மை தான். பிச்சை போடுவது கடமை என்கிறோம். பிச்சை எடுப்பது இகழ்ச்சி என்று அதே வாயால் சொல்லுகிறோம். பிச்சை எடுப்பது இகழ்ச்சியாயின், அந்த இகழ்ச்சியை நிலை நாட்ட முயலலாமா? பிச்சை போட்டால், இகழ்ச்சியை நிலைநாட்ட செய்த காரியம் போல் அல்லவா ஆகிவிடுகிறது? ஆகவே, பிச்சைபோடுவதன் சூக்ஷமதை தெரிந்து கொள்ளாமல், இருப்பது தவறுதான். இப்படியே, பல சம்பவங்கள் சாதுத்தனமான போர்வையோடு விளங்குகின்றன. ஆனால் அதன் உண்மையான தன்மை, பல தலைமுறைகளில் ஊடுருவிப் பாய்ந்து, வெளியே வந்து விடுகிறது. அது விபரீதமான விகற்பமாக, முடிவில் சொரூபம் எடுத்துவிடுகிறது, நீ சொல்ல எத்தனித்தது எனக்கு இப்பொழுது நன்றாக விளங்குகிறது, அப்பா' என்றேன்.

'பிரமாதமாக போகவேண்டியதில்லை. பிறரிடத்தில் அன்புவேண்டும் என்று சொல்லி, தன்னிடத்தில் இருப்பதை யெல்லாம் பிறருக்கு ஒருவன் கொடுப்பானானால், அவன் ஒட்டாண்டியாகப் போகமாட்டானா? எந்த நல்ல உணர்ச்சியையும் பரிபூரணமாக வெளிக்காண்பிப்பது என்பது முடியாத காரியம். எவ்வித உத்தமமான உணர்ச்சியையும் வெளிக்காண்பிப்பதற்கு, ஒரு எல்லை உண்டு' என்றான் கணபதி ராயன்.

விளங்கும்படியாகச் சொல் என்று நான் அவனைக் கேட்டேன்.

டில்லியிலே, முன்னொரு காலத்தில் பிருதிவி ராஜன் என்று பாராக்கிரமம் பொருந்திய ஒரு அரசன் இருந்தான். அவன் மகம்மது கோரி என்ற பகைவனை, தனேசுவரம் என்ற போர்க்களத்தில் ஆறுதடவை, முதுகு காட்டி ஓடும்படி அடித்தான். ஒவ்வொரு வெற்றிக்குப்பின்னும் பிருதிவி ராஜன், மகம்மது கோரியை மன்னித்து, அவனுக்குத் தேவையான உணவுப்பொருள்களை கொடுத்து, அவனுடைய இருப்பிடத்துக்கு செல்லும்படி அனுமதி கொடுத்தான். எதிரிக்கும் இரங்குதல் என்பது மகத்தான நல்ல உணர்ச்சி அல்லவா' என்று கணபதி ராயன் – என்னைக் கேட்டான்.

'சந்தேகமென்ன' என்று நான் வெடுக்கென்று சொன்னேன்.

'ராமா! உன்னைப் போலவே, பிருதிவி ராஜனும் ஏமாந்து போனான். பிருதிவி ராஜனுடைய கருணைக்கு பாத்திரமான கோரி என்ன செய்தான், தெரியுமா? ஏழாவது தடவை, பிருதிவி ராஜனை எதிர்த்து வந்து, அவனை போரில் வென்று, கொன்றும் விட்டான். நன்றி மறந்த கோரிக்கு, பக்கபலமாக நின்று ஒத்தாசை செய்தான், பாஞ்சால மன்னன் ஜய சந்திரன்' என்று கணபதி ராயன் வருத்தத்தோடு சொன்னான்.

'பாஞ்சால மன்னனுக்கு ஏன் இந்த கெடுபுத்தி வந்தது என்று நான் கேட்டேன்.

'ராமா! அதை ஏன் கேட்கிறாய்? இந்த தேசமே, ஒரு விசித்திரமான தேசம். பாஞ்சால மன்னனுடைய மகள் பத்மினி, பிருதிவி ராஜனிடம் காதல் கொண்டது தான், அவனுடைய துரோகத்துக்குக் காரணமாக ஏற்பட்டது. பிருதிவி ராஜனுடைய வமிச பரம்பரை, பாஞ்சால மன்னனுடைய வமிச பரம்பரையைக்காட்டிலும் மட்டமானதாம்! எனவே, பிருதிவிராஜன் எவ்வாறு தன் மகளைக் காதலிக்கலாம் என்று ஆத்திரப்பட்டு, அந்த ஜயசந்திரன் தேசத் துரோகம் செய்யத்துணிந்தான். பார், இந்த விபரீதத்தை' என்று கணபதி ராயன் நெஞ்சு உடைந்து போவது மாதிரி சொன்னான்.

'கணபதி ராயா! ஏன் இந்த இழவு ஓலைகளையெல்லாம் என்னிடம் வாசிக்கிறாய்? நீ சொல்லச் சொல்ல, என் துக்கம் அதிகரித்துக் கொண்டே போகிறது. மனிதன் துக்கப்படத்தான் பிறந்தானா? மனிதனைப்பற்றி பொதுவாகப் பேசவேண்டியதில்லை. துக்கத்தை மட்டும் அனுபவிப்பதற்காகத்தான் நான் பிறந்திருக்கிறேனா, என்ன' என்று நான் அவனை ஆத்திரத்தோடு கேட்டேன்.

'நான் குறிப்பிட்டுக்கொண்டு வருகிறேனே, அந்த சம்பவங்கள்தான் உன் துக்கத்துக்கு மூல விதைகள். இந்த தேசம் பாழடைந்து போனதற்கும் அவைகளே காரணங்கள் சாக்கடைக்கு பக்கத்திலிருப்பவன் துர் நாற்றத்தை அனுபவிக்காமல் இருக்க முடியுமா? இந்தமாதிரி பரம்பரையினாலே தான், நீயும் நானும் மற்றவர்களும் இப்போழுது அடிமைகளாக வாழ்ந்து, அவர்கள் அனவரதமும்துக்கத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். தேசத்துக்கு கேடு விளைவிக்கும்படியாக, பெரியார்கள் அவ்வப்போது, ஆயிரம் வருஷங்களாக செய்துகொண்டு வந்ததால் தான், ஹிந்துக்கள் சீரழிந்து வாழ்கிறார்கள்' என்றான் கணபதி ராயன்.

'இன்றைக்கு இதோடு போதும், அப்பா! உன் கதை. எனக்குத் தூக்கம் வருகிறது' என்றேன். நல்லது என்று அவன் மறைந்துபோய் விட்டான்.

அத்தியாயம் - 5.

துரோகத்துக்கு பெருமை

முதல் நாள் கணபதி ராயன் சொன்னதைப் பற்றி யோசித்து, யோசித்துப் பார்த்தேன். நம்மவர்கள் பலவீனமடைந்து வாழ்வதற்கான காரணங்கள் இன்றைய நேற்றைய நிகழ்ச்சிகள் அல்ல என்பது தெளிவாக, மனதில் பட்டது. நீண்ட கால பாபம், ஒரு நொடியில் போகவேண்டும் என்று ஆசைப்பட்டால், அது சாத்தியமான சங்கதியா என்று நானே சொல்லிக்கொண்டேன். அந்த சமயத்தில், 'ராமா' என்று கணபதி ராயன் 'கணீர்' குரலில் கூப்பிட்ட சத்தம் காதில் விழுந்தது.

'நீ இன்னும் தூங்கவில்லையா? இப்பொழுது மணி பத்து இருக்குமே! இவ்வளவு நேரம், ராத்திரியில் 'தூங்காமல் இருக்கலாமா' என்று ராயன் பரிவுடன் கேட்டான். 'அப்பா! கணபதி ராயா! தூக்கம் என்பது தானாக வரும் சம்பத்து. அதை யாரும் தேடி அடைய முடியாது. மூன்று நாள் சேர்ந்தால் போல விழித்திருந்து, மூன்று நாள் சேர்ந்தால் போல தூங்கும் பெரியார்கள் இருந்திருக்கிறார்கள். ராத்திரியிலே தூக்கம் வரும் என்பது பொது விதியே யொழிய, அது மாற்ற முடியாத சட்டமல்ல. எனக்குத் தூக்கம் வரவில்லை. அதனாலேதான் தூங்கவில்லை' என்றேன்.

'அப்படியானால், ஒன்று சொல்லுகிறேன். கேள். முன் ஒரு காலத்தில், ஒரு புராணிகர் புராணம் படித்துக் கொண்டிருந்தார். படித்தது ராமாயணம். புராணிகர் அழகாகப் பேசுபவர். அவர் என்ன சொல்லுகிறார் என்பதைக் கேட்க, எனக்கு ரொம்ப ஆசை. நல்ல கூட்டம் கேட்க வந்தார்கள், புராணிகரின் வாக்கு சாதுர்யத்தை வெகுவாக ரசித்துக் கொண்டிருந்தார்கள். அந்த சமயத்தில், நானும் கூட்டத்தில் ஒருவனாக உட்கார்ந்து, புராணம் கேட்டேன். அன்றைக்கு, விபீஷண சரணாகதி, கட்டம். ராமன்......

கணபதி ராயன் மேலே சொல்லுவதைத் தடுத்து, விபீஷணன் உத்தமமான ராம பக்தன் அல்லவா என்றும் விபீஷணன் ஆழ்வார் அல்லவா என்றும் உற்சாகத்துடன் கேட்டேன்.

'பொறு. நான் சொல்வதை கேட்டுக்கொண்டுவா, அவசரப்படாதே. புராணிகர் கோர்வையாக, விபீஷணன், ராமனிடம் சரணாகதி செய்ததையும் அவனுக்கு ராமன் அபயப் பிரதானம் அளித்து, லங்கையின் மகுடத்தையும் அவனுக்கு உவந்து கொடுத்ததையும் சாங்கோபாங்கமாகச் சொன்னார். இதைக் கேட்டுக்கொண்டிருக்க, என் மனம் இடங் கொடுக்கவில்லை. சகோதரத் துரோகியான, சண்டாளனான விபீஷணனை, வால்மீகி, ராமாயணத்தில் இவ்வளவு பெருமைப்படுத்தி விட்டாரே என்று நான் சற்று உரக்க முணுமுணுத்தேன். புராணிகருக்குக்-

கோபம் வந்துவிட்டது. அவருக்கும் எனக்கும் வாக்கு வாதம் உண்டாயிற்று' என்றான் கணபதி ராயன்.

'நல்ல, ரசமான பகுதியில் நிறுத்தாதே. மேலே நடந்ததைச் சொல்' என்றேன். சரி, கேள் என்றான். வாக்கு வாதம் இவ்வாறு நடந்தது.

புராணிகர்: யாரப்பா! அதிகப் பிரசங்கி? நீ யார், விபிஷணன் சகோதரத் துரோகி என்று சொல்லுவதற்கு?

நான்: என் மனசிலே பட்டதை சொன்னேன். நான் சொன்னது தவறா யிருந்தால், தவறு என்பதை ருசுப் படுத்துங்கள். நீங்கள் கல்விமான். என்னைப் போன்றவர்களின் அற்ப சந்தேகத்தை, நீங்கள் பொறுமையோடு சமாதானம்சொல்லித் தீர்க்கவேண்டும். ஆத்திரப்படக்கூடாது.

புராணிகர்: விபீஷணன் சகோதரத் துரோகி என்று நீ எப்படி சொல்லுகிறாய்?

நான்: பரதனுக்கும் விபீஷணனுக்கும் உள்ள வித்தியாசத்தைப் பாருங்கள். கைகேயியும் கூனியும் சூழ்ச்சி செய்து, பரதனுக்கு ராஜ்யத்தை, தசரதனிடமிருந்து வாங்கிக் கொடுத்தார்கள். ராமன் காட்டுக்குப் போய்த் திரும்பி வருகிற பதினான்கு வருஷ காலமாவது பரதன் ராஜ போகத்தை அனுபவித்திருக்கலாம். பரதன் அப்படிச் செய்யவே இல்லை. பரதன், தன்னை ராமனுடைய பணியாளாக எண்ணிக்கொண்டான். விபீஷணனோ, லங்கா பட்டணத்தின் மகுடத்தை ராமனிடமிருந்து பெற்றுக்கொண்டான். இந்த மகுடம், அண்ணன் ராவணனைக் காட்டிக் கொடுத்ததற்கு பரிசு என்று ஏன் சொல்லக் கூடாது?

புராணிகர்: ஸ்ரீராமனுடைய கட்டளைக்கு இணங்கி விபீஷணன் பட்டத்தை ஏற்றுக்கொண்டார்.

நான்: ராவண சம்ஹாரம் ஆகுமுன்னமேயே, ராமன் விபீஷணனுக்கு 'இந்தா! லங்கா பட்டணம்' என்று தானம் கொடுக்க வேண்டியதன் சூக்ஷமம் என்ன? ராமன், மகா சாமர்த்தியசாலியான ராஜதந்திரி என்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். ராம பக்தி மேலிட்டால், விபீஷணன் சரண் புகுந்திருந்தால், விபீஷணன் மகுடத்தை

ஏற்றுக்கொண்டிருக்க மாட்டான். பரதனுடைய பக்தியை விபீஷணனிடம் நாம் காண முடியவில்லை. அண்ணனுடைய மகுடத்தை தம்பி கூச்சமில்லாமல் வாங்கிக்கொண்டானே என்று லோகாபவாதம் ஏற்படுமே என்பதற்குக் கூட, விபீஷணன் பயப்படாமல் காரியம் செய்ததைப் பார்த்தால், அவன் மருக் கலப்பில்லாத பக்தன் என்று திட்டமாகச் சொல்ல முடியாது. அண்ணனைக் காட்டிக் கொடுத்துவிட்டு பட்டத்தைப் பெறும் தம்பி பக்தன் என்று சொல்ல முடியுமா? பக்தி என்றும் லோக நியாயம் என்றும் யுக்தி செய்துகொண்டு, யாரும் எளிதிலே, நாட்டுக்கும் சகோதரர்களுக்கும் துரோகம் செய்யத் துணிந்துவிடலாமே? பரதன் ராஜ்யம் வேண்டாம் என்று மறுதததைப் போல, விபீஷணனும் செய்திருக்கவேண்டும். அப்படி, அவன் செய்திருந்தால், அவனை, ஒருக்கால் பக்தன் என்று சொல்லி யிருக்கலாம்.

புராணிகர்: ஏன், ஒருக்கால் என்று ஷரா போடுகிறாய்?

நான்: துரியோதனன் துர்க்கக்ஷி பிடிக்கிறான் என்பது பீஷ்மன், துரோணன், கிருபன் முதலியவர்களுக்குத் தெரியும். என்றாலும், அவர்கள் எஜமானத் துரோகம் செய்து, பாண்டவர்களோடு சேர்ந்துவிட வில்லை. இதைத் தான் சாதாரண மக்கள் கஷ்டமில்லாமல் புரிந்துகொள்ள முடியும். விபீஷணனுடைய மனசிலே இன்னதுதான் ஓடிக்கொண்டிருந்தது என்று திட்டமாகச் சொல்லுவதற்கு, உறுதியான பிரமாணங்கள் கிடையாது. லங்கையின் மகுடாபிஷேகத்தை வேண்டாம் என்று விபீஷணன் கண்டிப்பாய்ச் சொல்லி யிருந்தால், அவன் ராஜ்ய ஆசை கொண்டு, ராமனிடம் சரணாகதி செய்யவில்லை என்று சொல்லலாம். அப்படி ஒன்றும் அவன் செய்யவில்லை. எனவே, விபீஷணனுடைய செயல், சுயநலம்தானோ என்று சொல்லும்படியாக சந்தேகப் புகைக்குள் அகப்பட்டுக் கொண்டு திணறுகிறது. நான் நீதிபதியாக இருந்தால், விபீஷணனுக்கு சாதகமாகத் தீர்ப்பு கொடுக்கமாட்டேன்.

புராணிகர்: உன்னைப் போன்ற நாஸ்திகன், நீதிபதியாக இருந்தால், உலகம் நிச்சயமாக பாழாகத்தான் போய்விடும்.

புராணிகர் இப்படி சொன்னதுதான் தாமதம். இரண்டு மூன்று அதமர்கள், ஆர்ப்பாட்டத்தோடு எழுந்திருந்து, என் பேரில் கை வைத்துவிட்டார்கள். என்னை, நன்றாக அடித்து, துவட்டி எடுத்துவிட்டார்கள். பக்திக்கும் துரோகத்துக்கும் வித்தியாசம் தெரியாத முரட்டு மூடாத்மாக்கள் இருக்கும் கூட்டத்தில் வேறு என்ன எதிர்பார்க்கமுடியும்? என்னை அடித்துப்பயமுறுத்தினதால் என் கருத்தை அவர்களால் நசுக்கிக் கொன்றுவிட முடிந்ததா?

விபீஷணனுடைய செயலைப் பக்தியாக கொண்டாடும் தேசத்திலே, தங்களை அறியாமலே, ஆயிரக் கணக்கானவர்கள், தேசத் துரோகிகள் ஆகிவிட்டார்கள்.

இவ்வாறு கணபதிராயன் சொல்லிவிட்டு, 'நீ விழித்துக் கொண்டிருக்கிறாயா, அல்லது தூங்குகிறாயா' என்று என்னைக் கேட்டான்.

'நான் தூங்கவில்லை. அவர்கள் அடித்ததை, நீ எப்படி தாங்கிக் கொண்டிருந்தாய்? உனக்கு உடம்பு நோகவில்லையா' என்று கேட்டேன்.

'தாங்கள் யோசிக்கும் திறமையை இழந்த முழுமூடர்கள் என்று அவர்கள் தெரிவித்துக் கொண்டார்கள், என்னை அடித்ததன் மூலமாக. அகம்பாவத்திலே ஊறிக் கிடக்கும் அறியாமை தாண்டவமாடும்பொழுது, அதைப் பார்த்தால், உடம்பு, வலி தோன்றவே தோன்றாது. அறிவையும் ஆண்மையையும் இழந்த மடையர்களின் பேரில் எனக்குப் பரிதாபம் உண்டாயிற்றேயல்லாமல், அவர்கள் அடித்ததனால் வலி உண்டாகவே இல்லை. என் மனது என் உடம்பில் பொருந்தியிருந்தால், எனக்கு வலி உணர்ச்சி ஏற்பட்டிருக்கலாம். என் மனது அவர்களிடம் பரிதாபத்தோடு ஒட்டிக் கொண்டிருந்தபொழுது, எனக்கு வலி உணர்ச்சி எப்படி உண்டாகும்' என்று கணபதிராயன், நான் நம்ப முடியாதபடி, கதை கதைத்தான்.

'என்ன அளக்கிறாய்' என்றேன். 'அதிருக்கட்டும். நீ கடுமையான வெயிலில், காலில் செருப்பில்லாமல் நடந்திருக்கிறாயா' என்று அவன் என்னைக் கேட்டான், எத்தனையோ தடவை நடந்திருக்கிறேன் என்றேன். 'நீ ஏதே

னும் ஒன்றைப்பற்றி, மனதில் யோசித்துக்கொண்டே நடக்கையில், உன் கால் சுட்டிருக்கிறதா' என்று அவன் என்னைக் கேட்டான். 'உண்மை; நீ சொல்லுகிற அனுபவம் எனக்கு இருந்ததுண்டு. மனது நமது உடம்பிலே தரிக்காத வரையிலும, கால் சுடுகிறதில்லைதான். ஆமாம்' என்றேன்.

'இதையே, நீ இன்னும் கொஞ்சம் விவரமாக கற்பனை செய்து பார்த்தால், அவர்கள் அடித்தபொழுது, எனக்கு வலி உணர்ச்சி ஏற்படவில்லை என்பது உனக்குப் புலனாகும்' என்று கணபதிராயன், பள்ளிக்கூட வாத்தியார் பாடம் போதிப்பதைப்போல, எனக்குப் போதனை செய்தான்.

'என்னமோ, மொட்டைத்தலைக்கும் முழங்காலுக்கும், பிணைக்கப் பார்க்கிறாய். உன் வாதம் தர்க்க சாஸ்திரத்துக்கு பொருத்தமுள்ளதுதான். ஆனால், அது அனுபவத்துக்கு ஒவ்வி வருமா என்று சந்தேகப்படுகிறேன். இருந்தாலும் நீ சொன்னதை நம்ப ஆசைப்படுகிறேன்' என்றேன்.

'நான் சொன்னதை நம்பு. வலி உணர்ச்சி ஏற்படாமலிருப்பதற்கு, ஒரு வகை பயிற்சியிருந்தால் போதும். அதற்காக பிரமாதமாக தவம், யோகம் எதுவும் செய்யவேண்டியதில்லை. நீ தூங்கு என்று சொல்லிவிட்டு, கணபதிராயன் மாயமாய் மறைந்துபோய் விட்டான். நானும் தூங்கிப்போய்விட்டேன்.

அத்தியாயம் - 6

அர்த்தமாகாத நடத்தைகள்

'ரொம்பகுஷியாக இருக்கிறாய்போல தோன்றுகிறதே, ராமா' என்று சொல்லிக்கொண்டே, கணபதிராயன் வந்தான். ஆம், நான் சிறிது சந்தோஷமாகத்தான் இருந்தேன். மனோலோகத்திலே, எனக்கு எவ்விதமாறுதலும் ஏற்படவில்லை, சந்தோஷம் உண்டாவதற்கு. நாலைந்து நாட்களாக இரவிலே நல்ல தூக்கம். அதன் பயன்தான், இந்த சந்தோஷம். கடகடத்துப்போயிருந்த நரம்புகள் பதத்துக்கு வருமாயின், சந்தோஷமும் உல்லாசமும் தானாகவே தோன்றும். இது இயற்கை.

'சொல்லுவதில் உண்மை இருக்கிறது. கொஞ்சம் குஷிதான். ஆனாலும், நீ, பழைய நிகழ்ச்சிகளுக்கு, புது மாதிரி வியாக்கியானம் செய்து, எனக்குப் பொறி தட்டும் படியாகச் செய்து வருகிறாய்' என்றேன்.

'ஒவ்வொருவருடைய நடத்தையும் தெளிவு கொண்டதாக இருக்கவேண்டும். தர்மசாஸ்திரம் எல்லாருக்கும் புரியும்படியானதாயிருக்கவேண்டும்; அது தர்ம சங்கடமாக இருக்கப்படாது. ஒருவனுக்கு, தர்மசங்கட நிலைமை ஏற்படுமாயின், அவனால் எவ்வித காரியமும் செய்யமுடியாது. குறிப்பிட்ட ஒரு சந்தர்ப்பத்தில், இதைத்தான் செய்ய வேண்டும் என்று தர்ம சாஸ்திரம் தெளிவாக எடுத்துச் சொல்லவேண்டும். இல்லாவிட்டால் வேலையிலே மனம் ஓடாமல், ஸ்தம்பித்து நின்றுபோகும்' என்று கணபதிராயன் சொன்னான்.

'எதற்காக, நீ இவ்வளவு விஸ்தாரமான பீடிகை போடுகிறாய் என்று தெரியவில்லை. நீ மேலே சொல்லிக்கொண்டு போ' என்றேன்.

கணபதிராயன் சொல்லுகிறான்:— 'இரண்டு மூன்று துக்கடாக்களை சொல்லுகிறேன். கேள். சிபி என்று சக்ரவர்த்தி ஒருவன் இந்த நாட்டில் இருந்தான். பரம தயாளு என்று அவன் பெயர் எடுத்துவந்தான்.

'அரண்மனைக் குள்ளிருந்த பூங்காவனத்தில், அவன் ஒரு நாள் தன்னந்தனியே உட்கார்ந்துகொண்டிருந்தான். அந்த சமயத்தில், அவன் காலடிக்குச் சிறிது தூரத்தில், என்னையாரும் காப்பாற்ற மாட்டார்களா என்று கேட்பது போன்ற சத்தம் செய்துகொண்டு, மண்ணில், ஒரு புறா விழுந்தது. அதை வேட்டையாடிக்கொண்டு துரத்தி வந்த பருந்து அடுத்த வினாடியில், மண்ணில் வந்து குதித்தது.

'இதைப் பார்த்துக்கொண்டிருந்த சிபி என்ன செய்தான்? தஞ்சம் என்று வந்தடைந்த புறாவைக் காப்பாற்ற வேண்டியது தனது கடமைஎன்று கொண்டான். நியாயம். ஆனால் அத்தோடு, அவன் நின்றுவிடவில்லை. புறாவைக் காப்பாற்றினான். பருந்துக்கு ஆகாரம் இல்லாமல்போகுமே என்று அங்கலாய்த்துக் கொண்டான். பருந்துக்கு உணவு

கொடுப்பதும் தனது கடமை என்பது அவனது எண்ணம். இப்பொழுது அவன் சிக்கலான தர்மசங்கட நிலைமையில் அகப்பட்டுக்கொண்டான். இந்த சந்தர்ப்பத்தில் தான் என்ன செய்கிறது என்பது அவனுக்கு விளங்கவில்லை.

'தன் தொடையிலிருந்து சதையை அறுத்து பருந்துக்குப்போட்டு, புறுவை அவன் காப்பாற்றினான். இது கதை. சிபி செய்தது சரியா, இல்லையா என்று நான் உன்னைக் கேட்கிறேன், ராமா! நீ சொல்லு' என்று கணபதிராயன் என்னைக் கேட்டான்.

'சிபி செய்தது அசட்டுக் காரியம். தினம் தினம் இவ்வாறு செய்துகொண்டிருந்தால், அவன் கதி என்னவாகும்? பருந்து புறுவை அடித்துத் தின்பது தினசரி சம்பவம். அதை சிபியால் தடுக்கமுடியுமா? சிபி செய்தது தாற்காலிகமான மாற்றுமல்ல; அது எக்காலத்துக்கும் எல்லா சந்தர்ப்பத்துக்கும் பொருந்தியதுமல்ல' என்றேன்.

'ராமா! நீ சொன்னது சரி. சிபி செய்தது அசட்டுத்தனமான வேலை. ஒன்று அவன் பருந்தைக் கொன்றிருக்க வேண்டும். அல்லது பருந்து புறுவை அடித்துத் தின்பது சகஜம் என்று சும்மா இருந்திருக்கவேண்டும். இரண்டில் ஒன்றுதான் தெளிந்த நடத்தையாகும். இப்படிச் செய்தால்தான், அது எல்லாருக்கும் புரியும். அதை எல்லோரும் அனுஷ்டானத்துக்கு கொண்டு வருவார்கள். சிபி செய்ததை, அவனே இரண்டாவது தடவை அனுஷ்டானத்துக்கு கொண்டு வர முடியாதே! அப்படி இருக்க, அதை சாதாரண ஜனங்கள் பின்பற்ற முடியுமா? அசட்டுத்தனமான காரியம் செய்த சிபி, மகத்தான காரியம் செய்து விட்டான் என்று அவனை உலகம் புகழும் பொழுதுதான், பொறுமை என்னை விட்டு ஓடிப்போகிறது' என்றான் கணபதி ராயன்.

'தினம் தினம் நம்மால் விருந்து ஏற்பாடு செய்ய முடியுமா? ஏதோ வருஷத்துக்கு சில நாட்களை, விருந்து நாட்களாக செய்ய முடியும். சிபி செய்தது, விருந்தைப் போல என்று வைத்துக் கொள்ளேன்' என்று நான் சொன்னேன்.

'அது விருந்தைப் போலத்தான். அதை தினசரி வாழ்க்கையில் அனுஷ்டானத்துக்கு கொண்டுவர முடியாது. ஆகவே, சிபியின் நடத்தை, அர்த்த மில்லாத நடத்தை. அதை கண்டிக்கவேண்டுமே யலலாமல், அதை கொண்டாடுவது மிகத் தவறுகும். நமது ராஜாக்களில் பெரும்பான்மையோர் இப்படித்தான் அசட்டுத்தனமான காரியங்கள் செய்திருக்கிருர்கள். நெல் காய்க்கும் மரம் என்று உளறின அரசர்கள் தான் நம் நாட்டிலே அனந்தம்' என்ருன் கணபதிராயன்.

'நீ சொல்லுகிறது உண்மைதான் போலிருக்கு, அப்பா' என்று நான் மெதுவாகச் சொன்னேன். கணபதிராயன் அடுத்தாற்போல சொன்னதாவது:—'நளனும் தமயந்தியும் மிகச் சிறந்த காதலர்கள் என்கிருர்கள். தன் காதலை தெரிவிப்பதற்காக, நளன், தமயந்தியினிடம் அன்னத்தை தூது அனுப்பினுன் என்கிருர்கள். நளனும் தமயந்தியும் நகமும் சதையும் போல வாழ்ந்தவர்கள் என்று ஒரே அடியாக, ஆகாயத்தை முட்டும்படியாகப் புகழுகிருர்கள். தூய, தன் மெய்க்காதலைச் சொல்ல, அன்னத்தை அனுப்பிய நளன் என்ன செய்தான்?

'அவன் புஷ்கரன் என்ற சிற்றரசனேடு சூதாடினுன். நாட்டை இழந்தான். நளன் தன் சொந்த நாட்டை விட்டுப் போகும்படி ஆயிற்று. பொறுப்புள்ள மன்னன் சூதாட்டத்துக்கு இசையலாமா? அது போகட்டும். நளனும் தமயந்தியும் தங்கள் நாட்டை விட்டு வெளியேறினுர்கள். காட்டு மார்க்கமாக சென்ருர்கள்.

'இரவு. நல்ல இருட்டு. நடுச்சாம சமயம். காட்டில் காதலர்கள் இருவரும் நித்திரையில் ஆழ்ந்திருந்தார்கள். நளன் தூங்கவில்லையோ, என்னமோ! அவன் எழுந்திருந்தான். தமயந்தியின் தூக்கத்தை கலைக்காமல், அவளுடைய சேலையை பாதியாக கிழித்து, தான் கட்டிக்கொண்டு, நளன் கம்பி நீட்டி விட்டான். நளன் செய்தது மாதிரி, ராமா! நீ செய்வாயா' என்று கணபதிராயன் என்னைக் கேட்டான்.

'நான் நளனைப்போல அரசனுமல்ல; அவனைப்போல, நான் கபோதியுமல்ல. என்னை, அவனேடு சேர்த்து, அவ

மானப்படுத்தாதே. நளன் காவலனுமல்ல, காதலனுமல்ல, கணவனுமல்ல. அவன் பொறுப்பில்லாத, கையாலாகாத கபோதி. பெண்ணை, நிர்க்கதியாக, காட்டில், இரவில், இருளில் விட்டுப் போகும் நெஞ்சம் படைத்தவன் கிராதகனில்லவா' என்றேன்.

'நளன் ஏழரைநாட்டுச் சனியனுடைய தூண்டுதலால் இப்படிச் செய்தானும்! ஊழ்வினையோ, சூழ்வினையோ, அதனால், அவன் அப்படிச் செய்தானும்' என்று கணபதிராயன் சொன்னான்.

'ஊழ்வினை, சூழ்வினை என்று சமாதானம் சொல்லி, கொலைக் குற்றத்திலிருந்துகூட தப்பித்துக் கொள்ளலாம் போலிருக்கே' என்று நான் சிரித்துக்கொண்டு சொன்னேன்.

'கானகத்துக் காதலியை காரிருளில் கைவிட்டுப்
போனதுவும் வேந்தர்க்குப் போதுமோ

என்று தமயந்தி உள்ளம் குமுறினதாக, புகழேந்தி வெகு நயமாகப் பாடியிருக்கிறார். நளன் செய்த அற்பத்தனமான காரியத்துக்கு, ஊழ்வினை என்றும் சூழ்வினை என்றும் சமாதானம் சொன்னால், அது நியாயமாகுமா? இப்படியெல்லாம், அசட்டுத்தனமான காரியங்களைச் செய்து, சமாதானம் சொன்னால், நமது தேசம் ஏன் சீரழிந்து போகாது' என்று கணபதிராயன் ஆத்திரத்தோடு கேட்டான்.

'கணபதிராயா! நீ சொல்லுகிறது உண்மை. பொறுப்பை வளர்க்கும் முயற்சியில் நம்மவர்கள், சுமார் ஆயிரம் ஆண்டுகளாக, சிரத்தை கொள்ளாமல், பொறுப்பை தட்டிக் கழிக்கும் சமாதானத்திலேதான் முஸ்தீப்பாக நின்றிருக்கிறார்கள். பிறன் பேரில் பழியைப் போட்டு, தன் பொறுப்பை கழித்துக் கொள்ளப் பார்ப்பது ஈனத்தனமாகும்' என்று நான் சொன்னேன்.

'தமயந்தியாவது, இரண்டாவது கலியாணம் என்று சொல்லி, நளனுடைய மனதை கொஞ்சகாலத்துக்காவது கலங்கச் செய்து, அவனுக்கு ஒரு வகையில் தண்டனை கொடுத்தாள். தமிழ் நாட்டிலே, ஒரு விநோதம் நடந்தது. உனக்குத் தெரியுமா" என்று ராயன் என்னைக் கேட்டான்.

'நீயே சொல்' என்றேன். கணபதிராயன் சொல்லு கிறான் :—'உனக்கு, கண்ணகி-கோவலன் கதை தெரியாதா? கோவலன் கண்ணகியை மணந்த கோடீசுவரன். பல கப்பல்கள் ஓட்டிய வணிகன். அவன் கண்ணில், கண்ணகி பெரிதாகப் படவில்லை. விலை மாது மாதவியினிடம் அவனுக்கு மோகம். அவன் அந்த தாசி வீட்டுக்குப் போய்க் கொண்டிருந்தான். கண்ணகி மனம் உடைந்து கொண்டே போனாள்.

'கோவலனுடைய செல்வம் கரைந்து போய்விட்டது. மாதவியின் உறவிலும் அவனுக்குச் சலிப்பு தட்டிவிட்டது. ஏழ்மை நிலை அடைந்த கோவலனுக்கு, மாதவி உதாசீனக் கண்களோடு பார்த்த கோவலனுக்கு, காவிரிப்பூம் பட்டினத்தில் இருக்கப் பிடிக்கவில்லை. பிழைப்புத் தேடி, பாண்டி நாட்டுக்குப் போனான்.

' அங்கே அவனை ஒரு பத்தன் ஏய்த்ததும் கோவலனைப் பாண்டிய மன்னன் கழுவில் ஏற்றியதும் கண்ணகி தனது கற்பின் வலிமையால் மதுரைமாநகரை தீக்கு இரையாக்கியதும் கதை. இதைப்பற்றி நீ என்ன நினைக்கிறாய்' என்று ராயன் என்னைக் கேட்டான்.

'கற்பின் சிறப்பு இக் கதையின் மூலமாக விளங்குகிறது' என்றேன். 'ராமா! கண்ணகி கற்பில் சிறந்தவளாக இருக்கலாம்' ஆனால் அவளுக்கு காரியம் கொண்டு போகும் சாமர்த்தியம் கிடையாது. தன் புருஷன், தாசி வீட்டுக்குப் போனதை, அவள் ஏன் சும்மா பார்த்துக் கொண்டிருக்கவேண்டும்? அவனை எந்த வகையாலும் தடுத்திருக்கவேண்டும். அதை ஏன் அவள் செய்யவில்லை? சாமர்த்தியம் இல்லை. சாமர்த்திய மில்லாத சாதுக்களுக்கு, இந்த உலகத்தில் இடம் கிடையாது. பாண்டிய மன்னன் தீர்ப்பு செய்தது எப்படி தவறாகும்? அவனுக்குக் கிடைத்த சாட்சியத்தைக் கொண்டுதான், அவனால தீர்ப்பு செய்ய முடியும். தன் புருஷனை தாசி வீட்டுக்குப் போகாமல் தடுக்க முடியாத குற்றத்துக்காக, கண்ணகி பாண்டிய மன்னன் பேரில் ஆத்திரம் கொண்டு, மதுரையை அக்கினிக்கு இரையாக்கினது எந்த நியாயத்தை சேர்ந்தது? பாண்டிய மன்னனுடைய அறிவுக் குறைவுக்கு இது தண்-

டனையாயின், கண்ணகியின் சாமர்த்திய குறைவுக்கும் அவள் கோவலனுக்கு உடந்தையைப்போல இருந்த குற்றத்துக்கும் அவளுக்கு என்ன தண்டனை விதிக்க வேண்டும்? சொல், ராமா! என்று கணபதிராயன் பரபரப்போடு என்னைக் கேட்டான்.

'ராயா! என் தலை சுற்றும்படியாக செய்து விட்டாய். நீ சொல்லுகிற கக்ஷியிலும் உண்மை இருக்கத்தான் செய்கிறது என்றேன். இது சொன்னதுதான் தாமதம். சபாஷ் என்று சொல்லிவிட்டு, ராயன் மறைந்து போனான்.

அத்தியாயம் - 7

சிறுமைப் படுத்தினவைகள்

சிறையிலே தூக்கம் வரவில்லை என்பதற்காக, கணபதிராயனை வரவழைத்தது விபரீதமாக ஆகும் போலிருக்கிறதே என்று எண்ணினேன். தன் வரலாறு என்று ஒரு கம்பளி மூட்டையை அவன் அவிழ்ப்பான் என்றும், அது ஒருவாறு சுவாரஸ்யமான கதையாக இருக்கலாம் என்றும் எண்ணியிருந்தேன். ஆனால் ஏமாந்து போனேன். அவனோ, புராண நிகழ்ச்சிகளையும்; சரித்திர சம்பவங்களையும் புதிய தராசு கொண்டு, எடைபோட்டு வருகிறான். நான் இது வரையிலும் கொண்டிருந்த கருத்துக்களெல்லாம் தப்பிதமானவை என்று எண்ணும்படியாகக்கூட அவன் செய்து விடுவான் போலிருக்கிறது. இதைத்தான் நான் விபரீதம் என்று சொன்னது.

வழக்கம்போல, கணபதிராயன் இரவில் வந்தான். ஆனால், இன்றைக்கு, அவன் யாதொரு சந்தடியும் செய்யாமல் வந்தான். வந்ததும வராததுமாக, அவன் பெருமூச்சு விட்டான். யார் பெருமூச்சு விட்டாலும், அது எனக்குப் பிடிப்பதில்லை. ஆகாயமே சரிந்து விழுவதைப்போன்ற ஆபத்து நேர்ந்தாலும், பெருமூச்சுவிடக்கூடாது என்பது என்னுடைய தீர்மானமான எண்ணம். நிலைமையை சமாளிக்க முடியாது என்ற ஏக்கம் உண்டாகும்பொழுதுதான், பெருமூச்சு விடத் தோன்றும்.

சமாளிக்க இயலாத நிலைமையே ஏற்படமுடியாது என்பது என் கருத்து. சமாளிக்க முடியாது என்று சொல்

ழுவது சோம்பேறித்தனத்தின் பயன் என்பதும் என் உறுதியான எண்ணம். நெருக்கடி நிலைமையை சமாளிக்க முடியாமல்போனால், மனிதவர்க்கமே இதற்குள் அழிந்து நாசமாகப்போயிருக்கும். மனிதர்கள், அவ்வப்போது நேரும் நெருக்கடியை சமாளித்துக் கொண்டுவந்ததனாலேதான், மனிதவர்க்கம் இன்றைய வரைக்கும் அட்டஹாசமாக வாழ்ந்து வருகிறது. எனவே, எதற்காகப் பெருமூச்சுவிட வேண்டும்?

'கணபதி ராயா! பெருமூச்சு ஏன் விடுகிறாய்? பெருமூச்சு விடுவதாயிருந்தால், அதை என் அறைக்கு வெளியே போய்ச் செய்' என்றேன். 'என்னப்பா, இவ்வளவு கோபம் உனக்கு' என்று அவன் என்னைக் கேட்டான். 'குடி முழுகிப் போகும்படியாக இப்பொழுது என்ன நேர்ந்துவிட்டது? குடி முழுகிப் போகிற காரியத்துக்குத்தான் பெருமூச்சு விடலாம்' என்றேன்.

'இந்த தேசத்தைப்பற்றி நினைத்தால் போதும். உடனே, எனக்கு, நிலை தவறிப்போய் விடுகிறது. இந்த நாட்டுக்கும் விமோசனம் உண்டா என்று ஏங்கும்படியாக இருக்கிறது தலைமுறை தலைமுறையாக, நம்மவர்களுக்கு க்ஷீணம் ஏற்பட்டுக்கொண்டு வரும்படியான பழக்க வழக்கங்களைப் பற்றி நினைத்தால், மனம் பதறுகிறது. இதை உணராமல் நம்மவர்கள் வாழ்ந்து வருகிறார்களே என்பதை எண்ணிப் பார்த்தால், உடல் நடுங்குகிறது' என்றான் கணபதி ராயன்.

'புலம்பினதாலும் பெருமூச்சு விட்டதாலும் காரியம் நடக்குமா? பலவீனத்தை உண்டாக்கும் பழக்க வழக்கங்களை நம்மவர்களிடமிருந்து அடியோடு அகற்றுவதற்கான வழிகளைக் காணுவதுதான் புத்திசாலித் தனமாகும். தெய்வம் நம்மை நிர்க்கதியாக்கி விட்டதே என்று தெய்வத்தின் பேரில் பழியைப் போட்டுவிட்டு, புலம்பிக்கொண்டிருந்தால், ஒரு காரியமும் சாயாது' என்றேன்.

கணபதி ராயன் சிரித்தான். ஏன் சிரிக்கிறாய் என்று கேட்டேன். 'ராமா! நான் பெருமூச்சு விட்டது தந்திரம். எதை நினைத்தும் வருத்தப்பட்டோ, ஏக்கமடைந்தோ,

நான் பெருமூச்சு விடவில்லை. உன்னை, நான் சோதித்து பார்த்தேன். நீ சோதனையில் தேறிவிட்டாய். பெருமூச்சு விட்டுக்கொண்டு வந்தால், நீ என்ன நினைக்கிறாய் என்று பார்த்தேன். நீ சரியான தோரணையிலேதான, உன் மனதை வைத்துக்கொண்டிருந்தாய். சபாஷ் என்று மூன்று தடவை, உன்னை நான் பாராட்டுகிறேன்' என்று ராயன் புகழுரையில விழுந்துவிட்டான்.

'உன் ஸ்தோத்திரத்தை நிறுத்து. மேலே ஏதேனும் சொல்ல உன்னிடம சரக்கு இருந்தால் சொல்லு' என்று நான் அவனை அதட்டினேன்.

'சொல்லுகிறேன்; கொஞ்சம் பொறுமையாகக் கேள்' என்று கணபதிராயன் சொல்ல ஆரமபிததான்.

'ராமா! இந்த தேசத்தில், ஹிந்து ஜன சமூகம் எப்பொழுது சமைக்கப்பட்டதோ, அது எனக்குத் தெரியாது; சரித்திரத்துக்குத்தான் தெரியும். அந்த சமூகம தோன்றிய நாள் முதல இன்று வரைக்கும், அந்த சமூகத்தில், பெண்களுக்கு நியாயமான பதவியே கொடுககப்படவில்லை. பெண்ணுக்கு மதிப்புக் கொடுக்காத சமூகத்துக்கு அடிவலு இருக்க முடியாது. எலலாவித உரிமைகளையும ஆண்களே, ஏகபோகமாக அனுபவித்து வந்தார்கள். பெண்கள் அடிமை நிலையிலே இருந்து வருகிறார்கள். நான் இதை மிகைபடுத்திச் சொல்லவே இல்லை.

'உதாரணமாக ஒன்று சொல்லுகிறேன். கேள். புருஷனை இழந்த பெண்ணைக் கைமபெண என்று அழைக்கிறார்கள். மனைவியை இழந்த புருஷனுககு, இநத மாதிரி ஒரு வார்த்தை உண்டா? சொல, ராமா' என்று ராயன் என்னைக் கேட்டான்.

நான் ஆச்சரியமடைந்தேன். நானும்தான் வெகு காலமாக தமிழ்பாஷை பேசிக்கொண்டு வநதிருககிறேன். இந்த நுட்பததை நான் கவனிததேயிலலை. கைம பெண்ணைப் போல, ஆணபிள்ளையை குறிப்பிடுவதறகு, ஏன் சொல் இல்லை எனறு எனககு மட்டுப்படவே யிலலை. நான் விழித்துக்கொண்டிருந்தேன்.

கணபதிராயன் சிரித்தான். 'ராமா! நீ இப்பொழுது உன் மூளையைக் குழப்பிக் கொள்ளுவதில் பயன் இல்லை. நேர்மைக்கண்ணோடும ஜனசமுதாயத்தை எவ்வாறு ஆக்கி னை வலுவோடும் வனப்போடும் இருக்கும் என்ற ஆவலைக் கொண்டும், நீ நமது ஜன சமுதாயததை ஏற்கனவே பார்த் திருக்கவேண்டும். மனிதன், முன்னைய வினையால் பிறக்கி முன, அவன் விதி தீர்ந்து மாண்டுபோகிறான் என்ற நினைப் பிலே வாழ்பவர்களுக்கு, ஒரு கவலையுமில்லை. அவர்கள் செய்ய வேண்டியது, செய்யக் கூடியது ஒன்றுமே இலலை யலலவா? இந்த மாதிரி சிந்தனை இல்லாமல நமமவர்கள் இப்பொழுதும் வாழ்வதுதான் விசித்திரமாயிருக்கிறது.

'பெண் இல்லாமல் உலகம் ஏது? பிரபஞ்சம் ஏது? எல்லா விதமான இன்ப துன்பங்களுக்கும் மூலகாரணம் யார் என்று கவனித்துப் பார்த்தால, அது பெண்தான் என்று குழந்தைகளுக்குக்கூட தெளிவாகத் தெரிந்துவிடும். அப்பேர்பபட்ட பெண் இனத்துக்கு, ஜன சமுதாயத்தில், தக்க பதவி கொடுக்க வேண்டாமா? அடிமை வளர்ப்புப் பண்ணையில் முட்டாளுக்கும அகம்பாவிகளுக்குமதான் ஆசை இருக்கும். விவேகிகளுக்கு அறவே இருககாது. அப்படி யிருந்தும், ஹிந்து ஜன சமூகத்தில், பெண்ணுக்கு இழி வான ஸ்தானம் ஏறபட்டது எதனுலே என்பது தெரிய விலலை.

'நான் ஒரு உதாரணம் குறிப்பிட்டேனே, அதுவே போதும். கைமபெண் நிலைமை சாசுவதமான நிலைமை; எனவே, அதறகு சொல் ஏற்பட்டுவிட்டது. தாரம் இழந்த புருஷன் நீண்ட காலத்துக்கு மறு விவாகம் செய்து கொள் ளாமல இருப்பதிலலை. எனவே, அந்த நிலைமை சாசுவத மான நிலைமை அலல. ஆகவே, அதற்கு தனியான சொல் தேவையாக இருக்கவிலலை. இதிலிருந்தே, பெண்களுக்கு எவ்வளவு வரையில உரிமையும பெருமையும் இருந்தன எனபதை, யாரும் எளிதிலே தெரிந்து கொள்ளலாம் எல் லாப் பெரு முயற்சிக்கும இயலபாக ஊக்கமளிககக்கூடிய பெண்ணுக்கு, வாழ்ககையில, இனிப்பும் பிடிப்பும் இலலா மல் போகவே, அவள் ஆணுக்கு பக்கபலமாயில்லாமல், பெரும சுமையாக மாறிவிட்டாள. வண்டிமாடு இரண் டிலே, ஒன்று படுத்துக்கொண்டு விட்டால், வண்டி எப்படி

ஓடும்? சொல், ராமா' என்று கணபதிராயன் என்னைக் கேட்டான்.

'வண்டி கண்டிப்பாய் ஓடாது. நீ சொல்லுகிறது சரி தான். அதனாலேதான், நமது நாடும் வீடும் முன் னேற்றமே இல்லாமல், பிற்போக்கையே ஆபரணமாகக் கொண்டு, கிடக்கின்றன. நமமவர்களுக்கு வாழ்விலே ருசியே இல்லாமல் போய், எப்பொழுது இந்த உலகத்தை விட்டு ஓடுவோம் என்ற மனப்பான்மை உண்டானதற்கு, நீ சொல்லுகிறது தான் மூலகாரணமாக இருக்கவேண்டும் என்று நான் நினைக்கிறேன' என்றேன.

'பெண்ணை இந்த தேசத்திலே மனுஷ ஜன்மம் கொண்டவளாகவே கருதவில்லை. அவள் ஆண்பிள்ளையின் சொத்தாகத்தான் பாவிக்கப்பட்டு வந்திருக்கிறாள். ஒரு அரசன், தன் மனைவியையே, விலைக்கு விற்றான். இன் னொருவன், தன் மகனுக்குப் பேசிய பெண்ணைத் தானே மணந்துகொண்டான். ஒரு பேர்வழி, தன் தகப்பனுடைய கட்டளைக்கு இணங்கி, தன் தாயைக் கொன்றான். ஒரு அரசன், நாட்டியம் ஆடிய பெண்ணின் பேரில மோகம் கொண்டு, அவளை பட்ட மகிஷிஸ்தானத்தில் வைத்து, பட்ட மகிஷியைத் துரத்திவிட்டான்

'ஒருவன் எத்தனையோ தாரங்களை மணந்துகொண் டான். ஒருவன் தன் மனைவியின் கற்பைச் சோதிக்க எண்ணி, அவளைத் தீயில் குதித்து எழு என்று கட்டளை யிட்டான். அரசன் எவ்வழி, அவ்வழி மக்களும் என்பது பழமொழி. எனவே, பெண்ணின் கதியைப்பற்றி என்ன சொல்லுவது' என்றான் கணபதிராயன்.

'நீ சொல்லுவது, ராயா! மறுக்கலப்பில்லாத உண்மை. எதற்கும் ராஜாவை எதிர்பார்த்து, இந்த தேசத்தில், எல் லாரும மண்ணாய்ப் போனார்கள். நல்லது செய்வதற்கும் கெட்டதை அழிப்பதற்கும் ராஜா இருக்கிறான் என்ற அசட்டு நினைப்பினாலே, சாதாரண மக்கள், சாதுக்களாக இருந்த ஜனங்கள், (ராஜாக்கள் வழிதப்பிப்போகவே) சீர் கெட்டுப்போய், சின்னாபின்னமானார்கள். தங்களுக் கென்று தனிப்பொறுப்பு இருப்பதாகவே, அவர்கள் எண் ணினதில்லை! ஆகவே, அவர்கள் வந்து, போன அன்னியர்

களுக்கெல்லாம் அடிமைகளானார்கள்' என்று நான் சொன்னேன்.

'பெண்ணை தேவதாசி யாக்கினார்கள். பெண்ணுக்கு நேர்ந்த அவமானங்களுக்குள், இதைககாட்டிலும் பயங்கரமானதும் கேவலமானதும வேறு எதுவும இருக்கமுடியாது. இந்த ஆபாசமான வழக்கததை சிலர் சாஸ்திர மேற்கோள்களுடன் ஆதரிப்பதைப் பார்க்கும் பொழுது, அவர்களை அப்படியே சித்திரவதை செய்யலாம்போல அவ்வளவு ஆத்திரம் உண்டாகின்றது. பெண்ணை, இதைக காட்டிலும் கொடுமையாகக் கேவலப்படுத்த முடியுமா' என்று கணபதிராயன் நெஞ்சு உடைந்து போகுமபோல பேசினான்.

மேலும் அவன் சொன்னதாவது :—'ஒரு அந்தண ரிஷி சிரேஷ்டன், செம்படவப் பெண்ணை, காந்தர்வ விவாகம் செய்து, காலங்கழித்தார். அவர்களுக்கு ஒரு ஆண் குழந்தையும் பிறந்தது. அந்தக் குழந்தை, பின்னர், மிகப் பிரசித்தமானவராக ஆகிவிட்டார். இந்தக் கலியாணத்தைப்பற்றி, யாரும மூச்சுப் பேச்சு விடவில்லை. ஒரு ஜன்மத்திலே, நான் க்ஷத்திரியனாகப் பிறந்தேன். எனக்கு, என் வகுப்புப் பெண்களின் பேரில், காதலே, ஏற்படவில்லை. காதலுக்கும் வீரத்தனத்துக்கும் என்ன சம்பந்தம் ? நான் வீரதீரன் என்று காணபித்துக் கொண்டால்தான், க்ஷத்திரியப் பெண் என்மேல காதல் கொள்ள முடியுமாம? இது என்ன அர்த்தமில்லாத கொள்கை ! எனக்குப் பிடித்தவள், கீழ்ச் சாதி பெண் ஒருத்தி. அவளும் என் பேரில் பிரியமாயிருந்தாள். ஆனால் அவளுடைய தகப்பனார், அவளை எனக்கு கலியாணம செய்து கொடுக்க மறுத்து விட்டார் '

'அப்புறம்' என்று அவசரமாக, நான் கேட்டேன்.

கணபதிராயன் சொன்னான் :—'நானும் அந்தப் பெண்ணும ரகசியமாக அந்த ஊரை விட்டு வெளி யேறினோம. ஆனால், நாங்கள் எந்த ஊருக்குப்போய், அங்கே நிம்மதியாக வாழ முடியும ? சென்ற ஊர்களிலெல்லாம், எங்களுக்கு, குடியிருக்க வீடு கிடைக்கவில்லை. அந்தந்த ஊர்க்காரர்கள் எஙகளை வெறிக்க வெறிககப் பார்க்கிறார்கள். பிழைப்புக்கு வழி தென்படவில்லை. இந்த நிலையில்

நாங்கள் என்ன செய்கிறது? ஊருக்குத் திரும்பிப் போய், நேரக்கூடிய அவமானங்களுக்கும் தண்டனைகளுக்கும் ஆளாவதா? ஹிந்து சமாஜத்தில், காதலுக்கு இடமில்லை என்றும் யாரும் மிருகப் பிராயமான காரியமாகத்தான் இருக்க முடியும் என்பதையும் எங்களுக்கு நேர்ந்தவைகளின் மூலமாகத் தெளிந்து கொண்டோம். பின்னர், சாது ஒருவரின் சகாயத்தைக்கொண்டு, எங்கள் நிலைமையை ஒருவாறு சமாளித்துக் கொண்டோம். நாங்கள் பட்ட கஷ்டங்களை சொல்லி முடியாது, அப்பா! இயற்கையாக எழும் உணர்ச்சி கூடாது என்கிறார்கள் வைதிகர்கள் இந்த நாட்டிலே. தலைக்காக குல்லாய், அமைக்கக் கூடாதாம் குல்லாய்க்குத் தோதாக, தலை அமைய வேண்டுமாம்! என்ன விபரீதம்! என்ன விசித்திரம்!"

ராயன் இவ்வாறு சொன்னான். எனக்கு வருத்தம் தாங்க முடியவில்லை.

'பட்ட கஷ்டங்கள் என்று பொதுவாகப் பேசுகிறாயே, என்ன கஷ்டங்கள் என்று விவரமாகச் சொல், ராயா' என்று நான் அவனைக் கேட்டேன். அவைகளை என் வாயால் விவரமாகச் சொல்ல வேண்டுமா என்று வருத்தத்தோடு, தானே சொல்லிக்கொண்டு, கணபதி ராயன் சொன்னதாவது:—'சாதுவின் சகாயத்தால் நாங்கள் சிறிது காலம் வாழ்ந்து வந்தோம். தரித்திரத்தின் கொடுமையைச் சொல்ல முடியாது. எனக்கு வேலை அகப்படுவதும் கஷ்டமாகப் போயிற்று. இந்த நிலைமையில் இருக்கையில், சாது மார்படைத்து, மரணம் அடைந்தார்.

'சாது அனுபவித்து வந்த சொத்து யாவும் யாரோ ஒரு முரடனுக்குப் போய்ச் சேர்ந்தது. சாதுவுக்கு வார்சாக முரடனா வரவேண்டும்? எங்களுக்கு, இல்லாவிட்டால், விபரீதங்கள் தோன்றுமா? எங்கள் திக்கற்ற நிலைமையை அவன் தெரிந்துகொண்டான். என் மனைவி அழகாய் இருப்பாள் என்று நான் ஏற்கெனவே சொன்னேனே? அந்த முரடன், எப்படியாவது என் மனைவியை அடித்துக் கொண்டு போய் விடுகிறது என்று தீர்மானித்துக்கொண்டான். குந்தக் குச்சும் குடிக்கக் கஞ்சியும் இல்லாமல் அடித்துவிடுவேன் என்று அவன் எங்களைப் பயமுறுத்தினான்

நான் இல்லாத சமயங்களில், அவன் என் மனைவியோடு என்ன பேசினானோ, தெரியாது. முடிவில், அவளை, அவன் எப்படியோ வசப்படுத்தி விட்டான்.

'நான் என் மனைவியை நொந்துகொள்ள முடியுமா? சாதாரணமாக வாழ்க்கை என்றால் என்ன? குந்தக் குச்சுமம், குடிக்கக் கஞ்சியும் உடுக்க உடையும் இருப்பதற்குத் தான் வாழ்க்கை என்று பெயர். காதலால் என்னிடம் வந்த என் மனைவிக்கு, வாழ்க்கை இல்லாமல் போனால், அவள் தற்கொலை செய்துகொண்டு, தனது காதலின் உறுதியை ருசுப்படுத்துவாளா? அவ்வாறு ருசுப்படுத்துவது காவியத்தில், ஓவியத்தில், கதையில் இருக்கலாம். நேருக்கு நேராக வாழ்க்கையில் பார்ப்பது அருமை. காதல் என்ற மெலிய கயிறு, வாழ்க்கை என்ற கனமான ஒன்றை எவ்வளவு காலம் தாங்க முடியும்? காதலைக் காட்டிலும் வாழ்க்கைதான் பெரிது என்று பல சந்தர்ப்பங்களில் அவளுடைய கண்களில் பட்டிருக்கலாம். பெரும்பான்மையான சந்தர்ப்பங்களில், அவள் அந்த எண்ணத்தை உதறித் தள்ளி யிருக்கலாம். எப்பொழுதுமே சமாளிப்பது என்பது எளிதான காரியமா?

'எனவே, என் மனைவியை நான் குறை கூறவில்லை. அவள் என்னை கைவிட்ட பின்பு, நான் என்ன செய்கிறது? என் உயிரை மாய்த்துக்கொள்ளுவதா? எதற்காக மாய்த்துக் கொள்ளுவது என்பது புரியவில்லை. எனக்கு நேர்ந்த அவமானத்துக்காகவா? உயிரைக் காட்டிலும் மானம் பெரிது என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். அவமானம் நேருவதற்கு யாரோ காரணம்! வேண்டுமானால், அந்த முரடனை நான் கொன்றிருக்கலாம். அது என் நிலைமைக்கு மாற்றும் பரிகாரமும் ஆகுமா? முரடன் போனால், இன்னொரு முரடன் வரலாம். வரமாட்டான், என் மனைவி சீர்பட்டுப் போயிருப்பாள் என்று எப்படி நிச்சயமாகச் சொல்லமுடியும்? 'பெண்ணின் நிலைமை கேவலமாக இந்த நாட்டில் இருப்பதாலேதான், இவ்வாறு நேர, சாத்தியப்பட்டது என்ற முடிவுக்கு வந்தேன். ஆகவே, அதை எவ்வாறு மாற்றுவது என்பதுதான் என்னுடைய பல கால சிந்தனையாகும். என் மனைவியை அடியோடு மறந்துவிட்டு, நான்

தேச சஞ்சாரம் செய்யத் துவக்கினேன். என் கையில் பணமேது? பிரயாணம முழுதும் கால நடைதான்.

'அந்த மாதிரி, நீண்டகாலம் தேச சஞ்சாரம் செய்து வந்தேன். ஆங்காங்கு கிடைத்த வேலையைச் செய்து, கூலி பெற்று, வயிற்றுப் பாட்டைக் கவனித்து வந்தேன். இரவில், ஊர்ப் பொது மடம் அல்லது சத்திரம இருந்தால், அதில் படுத்துக்கொள்ளுவேன். வாழ்க்கை இவவாறு நடைபெற்றுக்கொண்டிருக்கையில், ஒரு நாள் ராத்திரி, ஒரு மடத்தில் படுத்துக் கொள்ளப் போனேன். அங்கே வேறொரு ஆள் இருப்பதைப் பார்த்தேன். அந்த ஆள்தான் பூபதி ராயன். நாங்கள் இருவரும் இணை பிரியாத் தோழர்களானோம்.'

இவ்வாறு கணபதி ராயன சொல்ல, எனக்குத் தூக்கம் வருகிறப் போலிருந்தது. நிலைமையை மோப்பம் பிடிப்பதில் மகா சூரனை கணபதி ராயன, சொல்லிக் கொள்ளாமலே போய்விட்டான்.

அத்தியாயம் - 8

எங்கள் கூட்டு வாழ்க்கை

கணபதிராயன் வந்தான். 'நேற்றைக்கு உன்னிடம் சொல்லிக்கொள்ளாமலே போய்விட்டேன். அதற்கு மன்னிப்பு கேட்டுக்கொள்ளுவதைப்போல, என்ன செய்யப் போகிறேன், தெரியுமா? நீ என்னைக் கேட்டுக்கொள்ளாமலே, நானும் பூபதிராயனும் சேர்ந்து நடத்திய வாழ்க்கையைப்பற்றி சொல்லப்போகிறேன்' என்று அவன் கதையை ஆரம்பித்துவிட்டான்.

பிறர் விரும்பாத சங்கதிகளைச் சொல்லுவதற்கு, கணபதிராயன் செய்தது போன்றது ஒரு சாமாத்தியமான யுக்தி. கேட்கவேண்டாம என்று இருந்தாலும், மரியாதைக்கேனும் வாயை மூடிக்கொண்டிருக்க வேண்டி வரும். கணபதிராயன் செய்தது எனக்கு, கொள்கையில் பிடித்தமில்லையாயினும, பூபதிராயன யார், அவன் சரக்கு முடுக்கான பேர்வழியா என்பதை தெரிந்துகொள்ள, என் நெஞ்சு அரித்தது. ஆகவே, ஒன்றும சொல்லாமல், சும்மா இருந்துவிட்டேன்.

கணபதிராயன் சொன்னான்:— 'ராமா! நான், அந்த மடத்துக்கு, படுத்துக்கொள்ளப் போனேனா, அங்கே வேறொரு பேர்வழி இருப்பதைக் கண்டேனா, என்பாட்டுக்கு, தரையைத் தட்டிவிட்டு, துணியை விரித்துப் படுத்துக் கொள்ளககூடாதா? அவனுடைய வாயைப் பிடுங்கப் பார்த்தேன்.

நான், 'யார் அய்யா, அங்கே படுத்துக் கொண்டிருக்கிறது' என்று சற்று, அதட்டியே கேட்டேன். அந்த ஆள் வாய்திறக்கவில்லை. மறுபடியும் கேட்டேன். மறுபடியும் ஜவாப்பு இல்லை. 'படுத்துக்கொண்டிருக்கிறது மனுஷனா அல்லது மரக்கட்டையா' என்று அவனை அவமானப் படுத்துகிறது மாதிரி கேட்டேன். அப்பொழுதும் மூச்சுப் பேச்சு இல்லை உடனே, எனக்கு, சந்தேகம வந்தது. கவனிப்பாரற்று, யாரேனும் மடத்தில் செத்துக் கிடக்கின்றானோ என்று சந்தேகம உண்டாயிற்று.

அந்த உருவம் இருந்த இடத்துக்குப் போனேன். உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால் வரையில் தடவிப்பார்த்தேன். ஆள் உயிரோடுதான் இருக்கிறான். தூங்கவும் இல்லை. 'என்ன, அய்யா, நீ பேசா மடந்தையா' என்று கேட்டேன். 'நான் யாராயிருந்தால் உனக்கென்ன? என்னைப்போல, நீயும் இங்கே படுக்க வந்தவன். உன் வேலையைப் பார்த்துக்கொண்டு போயேன்' என்று அவன் திமிர் கொண்டது மாதிரி பேசினான்.

'சகோதரமனிதனோடு, இவ்வளவு கசப்புடன் நீ ஏன் பேச வேண்டும்' என்று சற்றுப் பரிவுடன் கேட்டேன். 'முதலில நீ மனிதன் என்பதும, பிறகு நீ என் சகோதரனாயிருக்க தகுதி பெற்றவன் என்பதும ருசுவாக வேண்டும். நடைபிணங்களாகவாழும் இந் நாட்டிலே, மனிதன் என்றும், சகோதரன் என்றும் ஏன், அர்த்தமில்லாமல் பேச வேண்டும? சும்மா படுத்துக்கொள்' என்று அவன் அதட்டினாலை போல பேசினான.

'இவன் தான் நான் தேடிக் கொண்டிருக்கிற பேர்வழி' என்று உடனே தீர்மானித்துக் கொண்டேன. ஏதோ அவனை அதிகமாகத் தாழ்விப் பேசுகிறதுமாதிரி இருக்கப்படாது என்று எண்ணி, 'உன் மன வேதனையும் சுயமரி

யாதையும் இவ்வளவு கடுமையாக, கொடி கட்டிப் பறக்குமாயின், அவைகளுக்கு குறைந்தவைகள் அல்ல, என்னிடம் இருக்கும் சரக்குகளும்' என்று சொல்லிக்கொண்டே படுக்கப் போவது மாதிரி பாவனை செய்தேன்.

'சரித்தான்; அப்படி பிரமாதமாக துள்ளிக் குதிக்காதே. கண்ட ஆட்களோடு எல்லாம் பேசினால், வெறும் தொண்டைச் சேதம் தான். முட்டாள்கள் வாழுகிற இடத்திலே, மூச்சு விடுகிறது கூட தவறு. என்னமோ, ரொம்ப ஆத்திரத்தோடு, உன்னிடமிருக்கும் சரக்குகளைப் பற்றிப் பேசினையே? அவைகளை கொஞ்சம் வெளியிலே விடு. பார்க்கலாம்' என்று சிறிது குரல் மாற்றத்தோடு, அவன் என்னைக் கேட்டான்.

'நான் வெறும் மடத்துத் தூங்கி அல்ல என்பதை மட்டும் நீ இப்பொழுது தெரிந்து கொண்டால் போதுமானது' என்று படாடோபத்தோடு பதில் சொன்னேன்.

'ஹோ' என்று எக்காளம் போட்டது மாதிரி சிரித்தான் அவன். என்னை கேவலமாக மதித்துத்தான் இவ்வாறு அவன் செய்திருக்க வேண்டும். ஆகவே, கோபத்தோடு, 'எதற்காக, அப்பா, நீ இப்பொழுது எக்காளம் போட்டாய்? காளை மாடு எக்காளம் போட்டால், அது இனனொருமாட்டைப் பார்த்து, சண்டைக்கு வருகிறாயா என்று வம்புக்கு இழுக்கிறது மாதிரி. உன் எக்காளத்துக்கு அர்த்தம் என்ன' என்று நான் அவனைக் கேட்டேன்.

'சரி! நீ சொன்னையுள்ள பேர்வழி தான் போலிருக்கிறது. உன்னிடம் எனக்கு வம்பும் தும்பும் கிடையாது. ராஜியாகப் போவோம்' என்று சொல்லி, அவன் சிரித்தான். 'கையாலாகாதவனோடு சண்டைக்குப் போவது தான் உன் தொழிலா' என்று குத்தலாகச் சொல்லி, நான் 'கட கட' வென்று சிரித்தேன். 'சபாஷ்' என்றான் அவன். சபாஷ் என்று அவன் சொன்னாலும், ஏளனம் தான் தொனித்ததாக, நான் எண்ணினேன். நான் மௌனமாக இருந்தேன்.

'சோதனை முடிந்து விட்டது. இனிமேல் நீயும் நானும் தோழர்கள்' என்று மிகவும் குழைவாக அவன் சொன்னான்.

முதன் முதலில், அவன் திமிர்பிடித்தது மாதிரி பேசின குரலில், இவ்வளவு குழைவோ அன்பும் இப்பொழுது எவ்வாறு தோன்றின என்பது எனக்குப் புரியவில்லை. எனக்கு அவனிடம் பிரேமை உண்டாயிற்று. இருந்தாலும், அதை மறைத்துக்கொண்டு, 'நான் பள்ளிக்கூட மாணவனல்லவே; நீ சோதனை அதிகாரியுமல்ல என்பதை வணக்கமாகத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்' என்றேன்.

'உன்னை, நான் தோழனாக என் மனதில் கொண்டாகி விட்டது. இனிமேல் நீ எவ்வளவு குத்தலாகப் பேசினாலும், அது என் மனதிலே தைக்கவே தைக்காது. குட்டு மிரட்டலை மிரட்டாமல், பக்கத்திலே வந்து படுத்துக்கொள். படாடோபத்தையும் மனக்கசப்பையும் பகைவனிடம் காண்பி. தோழனிடம் காண்பிக்க வேண்டாம்' என்றான் அவன்.

அவன் எவ்வாறோ, என் மனதில் ஒட்டிக் கொண்டு விட்டான். அவனை என் மனதிலிருந்து தள்ளிவிடுவது என்பது முடியாத காரியம். அவனுடைய குரலிலே, தைரியத்தையும், தன்னம்பிக்கையையும் வசீகரத்தையும் கண்டேன். அவன் புதுமாதிரி மனிதனாக என் கண்ணில் பட்டான்.

'உண்மையிலேயே தோழன் தானா' என்று நான் அவனைக் கேட்டேன். 'ஒவ்வொரு சொல்லுக்கும் அதற்கு வழக்கமாயுள்ள அர்த்தம் தான் உண்டு. தோழன் என்றால் தோழன்தான். வாழ்விலும் தோழன், சாவிலும் தோழன். அதிலே, உண்மை, பொய் என்று என்ன வேண்டியிருக்கிறது? ஏய்க்க நினைப்பவர்கள் தான், சத்தியப் பிரமாணம் செய்வார்கள். சத்தியம் செய்யும் வழக்கம் என்னிடம் கிடையாது' என்று மிகுந்த துக்க உணர்ச்சியோடு பதில் சொன்னான்.

முதலில் அவன் என்னை கேவலமாக மதித்து பேசினாலும், என்னால், அவனுடைய மனம் புண்பட்டுப் போனதை, நான் பொறுக்கமுடியவில்லை. மன்னித்து விடுவாயா என்றேன். உன் பெயர் என்ன என்றான். கணபதி ராயன் என்றேன். 'ஆகா! இந்நாட்டு மன்னர்களான நாம் இது வரையிலும் இப்படி பேசிக்கொண்டிருந்தது தவறு. என் பெயர் பூபதி ராயன்' என்று அவன் பதில் சொன்னான்.

திறன் அற்றுப் போனார்கள் சாதாரண ஜனங்கள். இது முதலில் நேர்ந்த ஆபத்து.

'இந்த நாட்டில், ஒவ்வொரு ஆண் பிள்ளையும் தன்னை ராஜாவாக எண்ணிக்கொண்டான். அவன் அவ்வாறு எண்ணிக்கொண்டதலை. தவறு ஒன்றுமில்லை. அவன் தன்னை ராஜாவாக எண்ணிக்கொண்டால, தன் மனைவியை ராணியாக அல்லவா எண்ணிக்கொள்ள வேண்டும்? அப்படிச் செய்யாமல், அவன் அவளை அடிமையாகவும் தன் சொத்தாகவும் கருதினான். இந்த விபரீதமான எண்ணத்தின் மூலமாக, இந்தத் தேசத்துக்கு நேர்ந்த விபத்தை அளந்து சொல்லவே முடியாது. அடிமைக்கு எஜமானனிடம் அன்பும் விசுவாசமும் இருக்க எதிர் பார்க்க முடியுமா? எஜமானனான புருஷனுடைய லக்ஷியத்திலும் வாழ்க்கையிலும் தனக்கு பங்கும பாத்தியமும் இல்லைபோல, அவள் நடந்து கொண்டாள். முடிவு என்ன? பெண்கள் அடிமைகளாகப் போகவே, ஆண்கள் சீரும சக்தியும் இழந்து வாழ்ந்து, இந்த தேசத்தில கால் எடுத்து வைதத அன்னியர்களிடமிருந்து நன்றாக அடி வாங்கி, அவர்களுக்கு அடிமைகளாக இருக்க உடன்பட்டார்கள்.

'இந்த மாதிரி, தங்கள் முட்டாள்தனத்தால் அடிமைகளாகப் போன ஆண் பிள்ளைகள், தங்கள் புத்தி யிலலாத தன்மையையும் பொறுப்பில்லாத மானக் கேட்டையும் மூடி மறைத்து, உலகத்தை ஏமாற்று வதற்காக, ஒரு யுக்தியை கண்டுபிடித்தார்கள். முந்தின ஜனமங்களில செய்த கருமங்களுக்குத் தகக பலனைத்தான் அடையமுடியுமென றும, அவனின்றி (ஆண்டவனின்றி) ஓர் அணுவும அசையாது என்றும் விசித்திரமான கொள்கை யையும தத்துவத்தையும புனைந்துகொண்டார்கள். இவை களை நம்பி வாழுவதாகச் சொலலிக்கொளளுபவர்கள் எந்த முயற்சியும செய்யாமல தப்பித்துக்கொண்டு, சோமபிக் கிடந்து, சுகவாசி வாழ்வு வாழ்வதாகச் சொல்லிக்கொள்ள லாமலலவா?

'கணபதி! இந்த மனப் பான்மையை நினைத்தால், எனக்குப் பகீர் என்கிறது. இந்த நாட்டின் வாழ்வுக்கு,

ஆண்பிள்ளைகள் எஜமானர்களாக இருந்து, எல்லாவற்றையும் அடியோடு கெடுத்துவிட்டு, தாங்களும் சாசுவத அடிமைகளாக வாழ, உடன்பட்டு விட்டார்கள். ஆண்கள் நிர்வாகப் பெரியதனம் செய்யாத ஜனசமூகம் இருக்க முடியுமா? பெண்களே ஜனசமூக நிர்வாகம் செய்தார்களானால், அது எப்படி இருக்கும் என்று பார்க்க, எனக்கு ஆவல் மிகுதியும் இருக்கிறது. அந்தமாதிரி சாம்ராஜ்யம் எங்கேனும் இருக்குமா? ஓயாமல் நடந்து, நடந்து, அத்தகைய சமூகத்தையும் அந்த ஜனத்திரள் வாழும் நாட்டையும் நாம் கண்டுபிடித்துத்தான் ஆகவேண்டும். என்ன சொல்லுகிறாய்?'

இவ்வாறு பூபதி பேசினான். பெண்கள் ராஜ்யம் செய்யும் இடத்தைப் பார்க்க வேண்டும் என்று அவன் சொன்னது என்னைத் தூக்கி வாரிப்போட்டது. அந்தமாதிரி ஒரு பிராந்தியம் இருக்கமுடியுமா என்று எண்ணினேன். இருக்கிறதோ, இல்லையோ என்பதைத் தேடிப்பார்த்துத் தெரிந்துகொள்ளுவோமே என்று தீர்மானம் கொண்டேன். அந்தமாதிரி ஒரு நாடு இருந்தால், அதைக் காணுவது லாபம். இல்லாவிட்டால் நடைதான் மிச்சம். அது ஒரு பெரிய கஷ்டமான காரியமல்ல. புதிதாக ஒன்றைத் தேடி அலைவதில், பூபதிக்கு, நான் ஏன் சளைத்துப் போக வேண்டும்?

இவ்வாறு, எனக்குள்ளே தர்க்க விதர்க்கம் செய்து கொண்டு, 'பூபதி! நீ என்ன யோசனை சொன்னாலும், அதற்கு நான் தயார். உணவை, சாதமாகச் சாப்பிடுகிறார்கள். பலகாரமாக தின்கிறார்கள்; பக்ஷணமாக உட்கொள்ளுகிறார்கள். பானமாக குடிக்கிறார்கள். ஆகாரத்தை ஒரே மாதிரியாகச் சாப்பிட்டால், அலுப்புத் தட்டிப்போகும் என்றுதானே இவ்வாறு செய்கிறார்கள்? அந்தமாதிரி, நாமும் ஏதாவது விதம் விதமாகச் செய்துகொண்டிருப்போமே என்று அவனிடம் சொன்னேன்.

பூபதிக்கு பிரம்மானந்தம். 'இந்த தேசத்தை ஒருகுடை குடைந்து பார்த்து விடுவோம். எங்கேயாவது நான் நினைத்த பிரகாரம் இருக்கத்தான் செய்யும். அதைக்கண்டு பிடித்துத்தான் ஆகவேண்டும். அதைப் பார்த்துவிட்டு, இந்த

தேசத்தில் முட்டாள்களாக வாழும் ஆண்பிள்ளைகளுக்கு புத்தி சொல்லிக்கொடுக்கவேண்டும். நாம் இருவரும் நம்மோடு சேரப் போகிறவர்களும் தான் இந்த தேசத்தை புனருத்தாரணம் செய்யமுடியும். இந்த நம்பிக்கையோடு தான், நாம் எந்த வேலையையும் ஆரம்பிக்கவேண்டும்; எந்த யோசனையையும் கைக்கொள்ள வேண்டும்' என்றான் பூபதி.

'எனக்கு பூரண உடன்பாடு நீ சொல்லுவதில்' என்றேன். இருவரும் சேர்ந்து பிரயாணம் செய்தோம். அதன் முடிவைச் சொல்லுகிறேன். ராயா! சொச்சம் நாளைக்கு ஆகட்டும் இவ்வாறு கண.திராயன் அன்றைய பேச்சை முடித்தான்.

அத்தியாயம் - 9

கூச்சல் பட்டி

கணபதிராயன் சொல்லுகிறான் :—ஒரு நாள் மாலை சுமார் நான்கு மணியிருக்கும். பெரிய பெரிய மாளிகைகள் தெரியும் ஒரு ஊர் எங்கள் கண்ணில் பட்டது. அது சிறிய ஊராக இருக்க முடியாது என்று தூரத்திலேயிருந்தே தெரிந்து கொண்டோம். வழிப்பிரயாணிகளிடமிருந்து பெயரைத் தெரிந்து கொண்டோம். கூச்சல்பட்டி அந்த ஊரின் பெயர். கிராமத்தை யல்லவா ஜனங்கள் பட்டி என்று அழைப்பார்கள் என்று ஒருவரிடம் சொன்னேன். "இது கிராமத்திலிருந்து வளர்ந்த பட்டணம். நூதனமாக, துண்டாகத் தோன்றின பட்டணமல்ல" என்றார் அவர். "சுமார் 30000 ஜனங்கள் வரையில் கூச்சல்பட்டியில் வசிக்கின்றார்கள். சத்திரஞ் சாவடிகள் உண்டு, பிரயாணிகள் தங்க. சாப்பாட்டு ஓட்டல்கள் காப்பிக் கிளப்புகள் முதலியன ஏராளமாயிருக்கின்றன. வியாபாரம் மிகுதி. வடமேற்கு ரயிலுக்கு கூச்சல்பட்டி தான் கடைசி ஸ்டேஷன். ஆரம்ப பள்ளிக்கூடங்கள் பல இருக்கின்றன. கலாசாலையுண்டு. இரண்டொரு பெண் பாடசாலைகளும் இருக்கின்றன. கச்சேரிகள் எல்லாம் இருக்கின்றன' என்று அந்த மனிதன் சொல்லி முடித்தார். "கூச்சல பட்டியில் என்ன அதிசயம்" என்றேன்.

"கூச்சல்பட்டியில் நாளுக்கொரு கூட்டமில்லாம லிருக்காது. புதிது புதிதாகப் பிரசங்கிகள் வந்து பேசுவார்கள், போவார்கள். கூச்சலபட்டி என்ற பெயரை கூச்சல பட்டினம் என்று மாற்ற எத்தனையோ கூட்டங்கள், நாங்கள் போட்டுப் பார்த்தோம். அரசாங்கத்தாருக்கு மனுச்செய்து கொண்டோம. அந்த இரண்டு எழுத்து இன்னும ஊர்ப்பெயரோடு சேரவில்லை. அது தான் அதிசயம. இந்த இரண்டு எழுத்தைச் சேர்ப்பதில் சர்க்காருக்கு என்ன தொலையோ யார் கணடார்? எல்லா ரிகார்டுகளிலும பெயர் மாற்ற வேண்டுமே, அந்தக் கஷ்டமோ, என்னவோ! நாங்கள் கொடுத்த மனுவை விசாரிக்க, ஒரு உத்தியோகஸ்தர் வந்தார். அவரும் ஊராருககு பரிந்து எழுதவில்லை போலிருக்கிறது. மொத்தத் திலே, ஊரிலே என்றைக்கும் பிரசங்கத்துக்குக் குறை விலலை. வீண தொணடைத் தண்ணீர் சேதம. நலல காரியம் ஒன்ருவது நடைபெறுவதில்லை. ஊர் வீதிகளை நீஙகள் போய்ப பார்த்தால் தெரியும். சுத்தமாய் இருக் காது. இரவிலே விளக்கு வெளிச்சம கிடையாது. பட்டினமாய்ப் போய்விட்டதே என்று கக்கூஸ் கட்டித் தொலைத்திருக்கிருர்களா? அதற்கு ஊரார் நிலம் கொடுக்க மாட்டேன் என்கிருர்கள். கக்கூசுக்கு இடம் கொடுக்க மாட்டேன் என்று சொலலுகிற பெரியவர்களின் பேச்சை பிரசங்கத்தில கேட்டால, தேன் ஒழுகும். அப்பா! இந்தப் பிரசங்கிகளே சுயங்காரியப் புலிகள்! உருவான ஒரு வேலையாவது அவர்களுககுச் செய்யத் தெரியாது. வெறும ஆகாயக் கோட்டை கட்டுவதில் கெட்டிக்காரர்கள். பிர சங்கத்துக்கு ஆரமபித்துவிட்டால், ஒருவர் இன்னொருவ ரைப புகழ்ந்து பேசுவார. தப்பித்தவறி என்னைபபோல ஒருவன் உள்ளபடியே சந்தேகம் கேட்க எழுந்திருந்தால், எலலோரும சேர்ந்துகொணடு "யாரடா கலகக்காரன்! அவனை வெளியே பிடித்துத் தள்ளு" என்பார்கள். தொழி லில்லாத, தொழில் தெரியாத பேர்வழிகள் எல்லோரும் கூடிக்கொண்டு பிரசங்கம்,பிரசங்கம என்று கூத்தடிக்கிருர் கள். இன்றைக்குக்கூட ஒரு பிரசங்கம் இருக்கிறது. பெருமாள் கோயில் சன்னதியில் கூட்டம் நடைபெறும். பிரசங்கத்தைக் கேட்டுவிட்டு, பெருமாள்கோயில் பிரசா

தத்தை நீங்கள் வாங்கிக்கொண்டு பிரம்மானந்தமாய்ச் சாப்பிட்டுவிட்டு, பக்கத்திலே பசுமடத்துத் திண்ணையில் படுத்து உறங்கலாம பணம் கொடுப்பதாயிருந்தால், எத்தனையோ கிளப்புகள் இருக்கின்றன" என்று அவர் ஒருவாறு தமது பிரசங்கத்தை முடித்துக்கொண்டார்.

காசு இல்லாமல் சாப்பாடு கிடைக்கும் வழியை அவர் எங்களுக்குச் சொன்னதற்காக, அவருக்கு நாங்கள் வந்தனமளித்து விட்டு, ஊரை நோக்கிச் சென்றோம். அப்பொழுது தான் ஜனங்கள் பிரசங்கம் கேட்பதற்காக அங்கே கூடிக் கொண்டிருந்தார்கள். பசுமடத்துத் திண்ணையில் போய் நாங்களிருவரும் உட்கார்ந்தோம்.

சிறிது நேரத்திற்கெல்லாம் கூட்டமும் கூடி விட்டது. பிரசங்கிகளும் வந்து சேர்ந்தார்கள். அவர்களுக்குரிய ஆசனங்களும் ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்தன. அந்தக் கூட்டத்தில ஒரே ஒரு பெண்ணைக் கண்டோம். அவளுக்குச் சுமார் 22 வயதிருக்கலாம். ஒருவர் எழுந்திருந்தார். கூட்டத்தின் கூச்சல் அடங்கவில்லை. அவர் நல்ல குரலில் அழகாக பாட்டுப் பாடினார். கூட்டத்தில் அமைதி உண்டாயிற்று. பாடியவர் உட்கார்ந்து கொள்ளவே, மற்றொருவர் எழுந்திருந்து "சகோதரி, சகோதரர்களே! இன்றையக் கூட்டத்தில, 'சுதந்திரமும பெண்களும' என்ற விஷயம் பேசப்படும். அத்தகைய அரிய விஷயம் பிரசங்கம செய்யப் பெறும்பொழுது, இக் கூட்டத்தில் தலைமை வகிக்கத் தகுதியுள்ளவரைத் தேடிப் பார்த்தோம். கடைசியாக, நாரீமணி மாணிக்கக் கோதையார் அவர்களே மிகக பொருத்த முள்ளவர்கள் என்ற முடிவுக்கு வந்து அவர்களைப் போயக் கண்டோம. அவர்களுக்கு எத்தனையோ வேலைகளிருப்பினும அவைகளைப் பொருட்படுத்தாமல் இன்று இவ்விடம் அவைத் தலைமை வகிக்க இசைந்தது கூச்சல்பட்டியின் பெரும பாக்கியமே. அவர்களுடைய அறிவையும் குணத்தையும ஆற்றலையும புகழ்ந் துரைப்பது மிகை. அவைகளை நீங்களே சிறிது நேரத்துக்குள் தெரிந்து கொள்வீர்கள். உங்கள் சார்பாக அவர்களை தலைமை வகிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்." என்றார். இன்னொருவர் ஆமோதித்தார். கரகோஷத்தினிடையே, மாணிக்கக்

கோதையார் மலர் மாலை சூடப்பெற்றுத் தலைமை வகித்தார்கள்.

கோதையார் எழுந்திருந்து நின்று, "பெரியோர்களே! பெண் விடுதலையில் ஆர்வம் கொண்டு நான் இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டேன் மேலும் பெண் விடுதலையைப் பற்றி கூச்சல் பட்டி ஆடவர்கள் என்ன கருத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று அறியும் பொருட்டே, நான் இன்றைக்கு இங்கே வந்தேன். சில பெரியோர்கள் இப்பொழுது பேசுவார்கள். அவர்கள் பேசி முடித்தபின்னர், விஷயம் ஏதேனு மிருக்குமாகில் பின்னர் பேசுகிறேன்" என்று ஆசனத்தில் அமர்ந்தார். பல பிரசங்கிகள் பேசினார்கள். அவர்கள் பேசினதை நான் இங்கு விரித்துக் கூற சம்மதிக்கவில்லை. சாரத்தை மட்டும் சொல்லி விடுகிறேன். "பெண்கள் விடுதலை பெறாமலன்றி நாடு சுதந்திரம் பெற முடியாது. பெண்கள் கல்வி கற்கவேண்டும். நாகரிகத் துறையில் தங்களைப் பழக்கிக் கொள்ளவேண்டும். பொது விஷயங்களில் அவர்கள் அதிகமாக ஈடுபடவேண்டும். ஆண்களுடன் தாங்களும் சமம் என்று பெண்கள் எண்ணிக் கொள்ளவேண்டும். வீட்டுக்குள்ளாகவே அவர்கள் எப்போதும் அடைந்து கிடக்கலாகாது." இது சாரம். விரித்து எழுதினால் ரொம்ப தூரம் நீண்டுபோகும். புலவர்கள் கூறுவது போல, 'விரிவஞ்சி விடுகின்றோம்.'

நான் எழுந்திருந்தேன். "ஒரு சந்தேகக் கேள்வி" என்றேன். பூபதி என்னைப்பார்த்துத் திகைத்துப்போனான்.

கூட்டத்தில் கூச்சல் அதிகரித்தது. உட்காரு, எழுந்திரு, வெளியேதள்ளு, சந்தேகக் கேள்விதான் என்ன" என்று பல பேச்சுகள் கிளம்பின. "நீர் ஏதேனும் பேச விரும்புகிறீரா" என்று கோதையார் கேட்டார். "ஆம்" என்றேன். "அப்படியானால் இங்கே வாரும்" என்றார். நான் போனேன். பூபதியும் கூட வந்தான். எனக்குப் பேச அனுமதி கிடைத்தது. நான் பின்வருமாறு சுருக்கமாகப் பேசினேன்.

"நயவஞ்சகப் பெரியோர்களே! பெண் விடுதலையில் உங்களில் ஒருவருக்கேனும (பிரசங்கம் செய்தவர்கள் உள்பட) நம்பிக்கை கிடையாது. நம்பிக்கை இருந்திருப்பின்

உங்களில் சிலரேனும் தங்கள் மனைவிகளையும் தாய்மார்களையும் சகோதரிகளையும் இங்கு அழைத்துக்கொண்டு வந்திருப்பீர்கள். அப்படிச் செய்யாமல் வாய் வேதாந்தம் ஏன் பேசுகிறீர்கள்? ஆண்களோடு தங்களையும் சமமாகப் பெண்களும் எண்ணிக்கொள்ளவேண்டும் என்று ஒருவர் சொன்னார்.

"ஆண்கள் அல்லவா முதலில் அந்த எண்ணத்தை மனதில் கொண்டு, அனுபவத்தில் அதை காண்பிக்கவேண்டும்? அவர் பேசியது அறியாமை அல்லது நயவஞ்சகம். ஆணைப் போல பெண்ணுக்கும் சொத்துரிமை ஏற்பட்டாலன்றி, பெண்களுக்கு உண்மையான விடுதலை வராது, அவர்கள் எவ்வளவு கற்றறிந்த போதிலும் சரி" என்று முடித்தேன்.

கூட்டத்தில் பேச்சுமூச்சு இடையாது. பூபதி எழுந்து நின்றான். அவனும் பேச அனுமதிகேட்டான. அனுமதி அளிக்கப்பட்டது அவன் எழுந்திருந்து, 'கோழைச் சகோதரர்களே! நீங்கள் யாரை ஏமாற்றப் பார்க்கிறீர்கள்? அல்லது நீங்கள் ஏமாந்து போகப்பார்க்கிறீர்களா? பின் சொன்னது உங்கள் நோக்கமாயின், இந்தக் கூட்டமும் பிரசங்கமும் பொருத்தமுள்ளவைகள் தான். உங்களால் ஒருவரையும் ஏமாற்ற முடியாது. நீங்கள் பச்சைச் குழந்தைகள். சுதந்திரம் பெறுவதற்கு பெண்களின் உதவி தேவை என்று கூறுவது கோழைத்தனமாகும். கோழைத்தனத்தால், ஆண் பிள்ளைகள் என்று பிதற்றிக் கொள்ளுகிற நீங்கள், உங்கள் பொறுப்பை மெதுவாக கழித்துக் கொள்ளப் பார்க்கிறீர்கள். பேதைப் பெண்கள் என்ன செய்வார்கள், பாவம்? நீங்கள் உங்கள் வீரத்தை வெளியே, பிரசங்கம் செய்யாமல், காண்பித்தால், உங்களுக்குப் பத்தடி முன்னதாகவே பெண்கள் இருப்பார்கள் என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள். உங்கள் கோழைத்தனத்தால், உங்கள் பொறுப்பைப் பிறர் பேரில் போட்டுவிட்டுதப்பித்துக் கொள்ளப் பார்க்காதீர்கள்" என்று முடித்தான்.

கோதையார் எழுந்தார். அவருடைய முகம் பிரசன்னமாயிருந்தது. "பெரியோர்களே! நான் அதிகம்பேசப் போவதில்லை. கடைசி இருவர் பேசினார்களே, அவர்க

ளுடைய கருத்துகளை நான் முழுமனதுடன் ஏற்றுக் கொண்டு அமர்கின்றேன்.'' என்றார். பின்னர் கூட்டம் கலைந்தது. கூட்டத்தில் எவரும், எங்களை, எதுவும் செய்யத் துணியவில்லை. உண்மை, உண்மை என்று சொல்லிக் கொண்டு சென்றார்கள்.

அத்தியாயம் - 10.

கை விலங்கு

கூட்டம் கலைந்த பின்னர், மாணிக்கக் கோதையார் எங்கள் இருவரையும் பற்றி பக்கத்திலிருந்தவர்களை விசாரித்துப் பார்த்தார். அந்த சமயத்தில், நாங்களிரு வரும் மெதுவாக அப்புறம் நழுவி விட்டோம். பெருமாள் கோவிலுக்குள் நுழைந்து, கோவில் பொறுப்பாளிகளைப் பிரசாதம் கேட்டோம். அவர்களில் ஒருவர் "நீங்க ளிருவரும் இந்த ஊர்க்காரர்களைப் பற்றிக் கூட்டத்தில் கண்டபடி திட்டினீர்களே! நய வஞ்சகர்களும் கோழை களும் உங்களுக்குப் பிரசாதம் கொடுப்பார்களா? தேசாந் திரிக் கட்டளையில் பிழைத்து ஊர் ஊராய்த் திரியும் உங்களுக்கு இவ்வளவு நெஞ்சுக் கன மிருக்குமாகில், உங் களுக்குப் பிரசாதம் கொடுக்கும் எங்களுக்கு எவ்வளவு இருக்காது? உங்களுக்குப் பிரசாதம் கிடையாது'' என்றார். 'நாங்கள் சொல்லியதை மீண்டு மொருமுறை ருசுப்படுத்தி விட்டீர்கள். தேசாந்திரி வழிப் பிரயாணி களுக்காக ஏற்படுத்தப்பட்ட கட்டளைப் பிரசாதத்தை எங்களுக்குக் கொடுக்காமல், சாக்குச் சொல்லி ஒளிக்கப் பார்க்கிறீர்கள். உங்களைப் போல மனிதர்கள் கோவில் பொறுப்பாளிகளாக வரப் போகின்றார்கள் என்று அப் பொழுதே தெரிந்திருந்தால், பச்சையப்ப முதலியாரும் மற்றவர்களும் தர்மக் கட்டளைகளை கோவில்களில் ஏற்படுத்தியிருக்கமாட்டார்கள். ஒருவரைக் காட்டித் தானே ஒருவர் பிழைக்கவேண்டும்? எங்களை கணக்கில் எழுதி, நீங்கள் அந்தப் பிரசாதங்களைச் சாப்பிடுங்கள். நாங்கள் போய் வருகிறோம்'' என்றான் பூபதி.

நாங்கள் இருவரும் திரும்பினோம். அதற்குள் இன் னொருவர் எங்களைக் கூப்பிட்டார். "தேசாந்திரிகளுக்கு

இவ்வளவு கோபம் வரலாமா" என்றார். "நீங்கள் தவறாக உங்கள் மனதில் ஒன்று எண்ணிக்கொண்டிருக்கிறீர்கள். தேசாந்திரிகள் பிச்சைக்காரர்கள் என்பது உங்கள் எண்ணம். ஓட்டல் எச்சில் இட்டு வேண்டாம் என்று இங்கு வந்தோம். எங்களிடம் பணமில்லையா? பாருங்கள்" என்று நூறு ரூபாய் நோட்டில், இருபத்தைந்து நோட்டுகளையும் சிலலரைப் பணங்களையும் பூபதி அவர்களிடம் எடுத்துக் காட்டினான். அவர்கள் திகைத்துப் போனார்கள் அவர்கள் திகைத்துப் போனது பெரிதல்ல. நானும திகைத்துப் போனேன். தன்னிடம் இவ்வளவு பணமிருப்பதாகப் பூபதி என்னிடம் சொன்னதேயில்லை. என்னிடம் இருக்கும பணமும் அவனுக்குத் தெரியாது. "அந்தப் பணம் போதுமா? இன்னும வேணுமா?" என்று நான் ஐந்து நூறு ரூபாய் நோட்டுகளை எடுத்து வெளியே வைத்தேன். சில்லறைகளை வெளியே எடுக்கவில்லை. நான் பூபதியிடம் இருந்த பணத்தைப் பார்த்துத் திகைத்துப் போனது போல, அவன் என் பணத்தைப் பார்த்துத் திகைத்துப் போகவே யில்லை. பேசாமலிருந்து விட்டான்.

இவர்கள் மாட்டு வியாபாரிகள் போலிருக்கிறது" என்றார் அவர். 'ஏன் பேச்சை வளர்க்கிறீர்கள்? பிரசாதத்தை அவர்களிடம கொடுத்து, போகச் சொல்லுங்கள்' என்று இதுவரையிலும் பேசாமலிருந்த ஒருவர் சொன்னார். உடனே மற்றவர் வாய் பேசாமல் சீட்டுக் கொடுத்தார். நாங்கள் பிரசாதத்தை வாங்கிக்கொண்டு போய் விட்டோம. அன்றிரவு பசுமடத்தின் திண்ணையிலே படுத் துறங்கிப் போனோம்.

விடியற்காலமே எழுந்திருந்து, நாரிபுரி எங்குள்ளது என்று விசாரித்தோம. மாணிக்கக் கோதையார் நாரிபுரியிலிருந்து வந்ததாகக் கூட்டத்தில பிரசங்கக் காலத்தில் சொல்லப்பட்டதல்லவா? அந்த நாரிபுரிக்குச் செல்ல வேண்டும என்பது எங்கள் அவா. நாரிபுரியில ஜனங்கள் எவ்வாறு இருக்கிறார்கள் என்றும், மாணிக்கக் கோதையார் என்ன பதவியில, என்ன வேலை செய்துகொண்டிருக்கிறார் என்றும அறிய என் சமபந்தபபட்ட வரையிலும்

ஆவல். மாணிக்கக் கோதையாரிடம் வெறும் அன்பிற்கு மீறிய உணர்ச்சி எனக்கு ஏற்பட்டது. இதுவரையிலும் எனக்கு இவ்வித உணர்ச்சி உண்டானதே யில்லை. பூபதியினிடம் விளையாட்டாகக் கூறிய கலியாண ஆபத்து நேருமோ என்று எனக்குள்ளாகவே சொல்லிக்கொண்டு சிரித்தேன். கூச்சல்பட்டியில் பெரும்பாலருக்கு நாரிபுரி எங்கு இருக்கிறது என்று தெரியவில்லை. நாங்களும் இதற்கு முன் அதைப் பற்றி கேள்விப்பட்டதுமில்லை.

கடைசியாக ஒருவர் "கூச்சல் பட்டியிலிருந்து வடகிழக்குத் திசையை நோக்கிச் சென்றால், பவளமலை என்று ஒரு மலை உண்டு. அதன் அடிவாரத்திலே நாரிபுரி இருக்கிறது" என்றார். சொன்ன வழியைப் பிடித்துக்கொண்டு, நாங்கள் சென்றோம் ஐம்பது மைல் என்றால் இரண்டு நாட்களில் நடந்து விடுவோம் வழி நடையில் சுமார் நாற்பது மைல் வரையிலும் ரோடு நன்றாக இருந்தது. பின்னர் வனாடி போகிற பாதைகூட மிக நெருக்கமாகவும் முள் புதர்கள் நிறைந்துமிருந்தது. இந்த ரஸ்தாவுக்கு வருமளவும், வழியை விசாரித்துக்கொண்டு வர, நடுவே ஊர்கள் இருந்தன. எங்களுக்குச் சந்தேகம் தோன்றி, வழிப் பிரயாணத்துக்கு கொஞ்சம் அன்னம் முடிந்து வைத்துக்கொண்டோம். வழி நடந்து செல்லுகையில், பாதையின் இரண்டு பக்கங்களிலும் குத்துக் குத்துகளாகப் புதர்களும் செடிகளும் மரங்களும் கணுக்கத் தென்பட்டன. பின்னர் சுமார் ஏழு மைல் நடந்திருப்போம். யூகமதான்

மைல் பர்லாங்கு கற்கள் ஒன்றுமே கிடையாது. ரஸ்தாவின் இரண்டு பக்கங்களிலும் காடுகள் அடர்ந்திருப்பதைக் கண்டோம். பகலிலேயே நரிகள் ஊளையிட்டன. இவ்விடம் மனித சஞ்சாரம் அதிகமாக இருக்க முடியாது என்று முடிவுகட்டிக் கொண்டோம். ஆனால் வாய் பேசாமல் வேகமாய் நடந்தோம். காடுகளையும் தாண்டி விட்டோம். சிறு குடிசைகள் தென்பட்டன. அங்கே போய்ச் சேர்ந்தோம் பத்துபதினைந்து குடிசைகள் இருக்கும். அங்கேயுள்ளவர்கள் மிகவும் ஏழைபோலக் காணப்பட்டார்கள். நாரிபுரியைப்பற்றி விசாரித்தோம். "இங்கிருந்து போனால், கூப்பிடு தூரத்தில், ஒரு ஆறு தெரியும்.

அந்த ஆற்றைத்தாண்டி, ஒரு நாழிகை வழி நடந்தால், நாரிபுரிக்குப் போய்ச் சேரலாம். உங்களுக்கு அங்கே வேலையென்ன? அனுமதி பெறாமல நீங்கள் அங்கே போக முடியாதே! முதலிலே ஓடம் விடமாட்டார்களே உங்களுக்கு" என்று சொல்லி முடித்தார்கள்.

எங்கள் வேலையை நாங்கள் அவர்களிடம் சொல்லவில்லை. நாரிபுரிக்கு வழி சொன்னதற்காக அவர்களுக்கு வந்தனம் சொல்லிவிட்டு, மேலே சென்றோம. சிறிது நேரத்திற் கெல்லாம ஆறு கண்ணில் பட்டது. ஆற்றின் கரைக்குப் போனோம. ஆறு ரொமப அகலமாயில்லை. குறுகலாயுமில்லை. ஆனால் நீர் ஓட்டத்தின் வேகம கடுமையாக இருந்தது. அது காட்டாருய் இருக்கவேண்டும என்று என் மதிப்பு. ஆற்றைக் கடப்பதற்கு ஓடமிருந்தது. ஆனால் அது நாங்களிருந்த பக்கத்தில் இல்லை. எதிர் கரையிலிருந்தது. ஓடத்தைக் கூப்பிட்டோம. யாதொரு தகவலும சொல்லாமல தாமதமன்னியில் ஓடம் வந்தது ஓடம் கிட்ட வரவர, எங்களுக்கு ஆச்சரியமுண்டாயிற்று. ஓடம் தள்ளிவந்தது ஒரு பெண். இந்தக் கரை வந்ததும, ஓடத்தைப் பார்த்தோம. ஓடத்துக்குள் துப்பாக்கி சகிதமாக வேறொரு பெண் உட்கார்ந்து கொண்டிருந்தாள்.

"அக்கரை போக வேண்டும. என்ன காசு" என்றேன். "காசு கிடையாது, அனுமதிச் சீட்டு வேண்டும். உங்களிடம் சீட்டு இருக்கிறதா" என்றாள் ஒரு பெண். அவளுக்கு வயது இருபது இருக்கும. அவளுடைய உறுதியான உடம்பைக் கண்டு நான வியப்படைந்தேன். பூபதி ஒன்றும சொல்லாமல, பக்கத்தில நின்று கொண்டிருந்தான். "எதற்கு அனுமதிச் சீட்டு" என்றேன். 'இந்த ஆற்றுக்கு மையலாறு என்று பெயர் இது கோதை தீவின் வட பக்கத்து எல்லை. இந்த ஆற்றைக் கடந்தவுடன், கோதைத் தீவு வந்துவிடுகிறது. கோதைத் தீவுக்குப் போக எண்ணங்கொண்ட எவரும, எங்கள் போலீஸ அதிகாரியினிடமிருந்து அனுமதி பெற்றிருக்கவேண்டும. இல்லாவிட்டால் அவர்களை ஆற்றைக் கடக்க விடப்படமாட்டார்கள்" என்றாள் அந்த துப்பாக்கிப் பெண்.

"நாங்கள் ஆற்றை நீந்திப்போனால் என்ன செய்வீர்கள்" என்றேன். "சுட்டுக் கொல்லுவோம்" என்றாள்.

"ஆறு கூட உங்கள் ராஜ்யமா? மேலும் நிராயுதபாணி வழிப்போக்கரையும் கொல்லும்படியாக உங்கள் நாட்டுச் சட்டம் கூறுவதாயிருந்தால், அந்தச் சட்டத்தின் வலிமையைச் சோதித்துப் பார்த்துவிடவேண்டும்" என்று பூபதி சொன்னான்.

இருவரும் உடைகளைச் சரிபண்ணிக்கொண்டு, ஆற்றில் இறங்கி விட்டோம். ஓடத்திலிருந்த பெண்கள் ஒன்றும் செய்யவில்லை. எங்கள் பக்கமாக ஓடத்தை விட்டுக் கொண்டு வந்தார்கள். ஆற்றின் கடுமையான வேகத்தையும் ஒருவாறு பொருட்படுத்தாமல், ஆற்றை நீந்திக் கடந்து விட்டோம். அக்கரை சேர்ந்ததும் ஊதுகுழாய்ச் சத்தம் கேட்டது. எங்கிருந்து வந்தார்களோ தெரியவில்லை. ஆயுதபாணிகளான நாலைந்து பெண்கள் ஓடத்தின் பக்கமாக ஓடி வந்தார்கள். எங்கள் இருவரையும் சூழ்ந்துகொண்டார்கள். வாய் பேசாமல் எங்களிருவருக்கும் கை விலங்கிட்டார்கள். நடவுங்கள் என்றாள் அதிகாரியைப் போலத் தோன்றின ஒரு பெண். "எங்கே" என்றோம். நாரிபுரியின் போலீஸ் காவலுக்கு என்றாள். நல்லது என்று நடந்தோம். விலங்கிடும்பொழுது, நாங்கள் ஒன்றும் ஆட்சேபிக்கவில்லை. எங்கள் உடல் வலிமையையும் காண்பிக்கவில்லை. எங்களுக்குக் கோபமே வரவில்லை. மாயத்தால விலங்கிட்டதைப் போல ஆண்களை, வாழ்க்கையில பெண்கள் இழுத்துச் செல்லுவதற்குப் பதிலாக, மெய்யாகவே விலங்கிட்டு அழைத்துச் சென்றது எங்களுக்கு வியப்பாயிருந்ததே ஒழிய, வேறு எந்த உணர்ச்சியும் எங்களுக்கு உண்டாகவில்லை. மேலும் நாரிபுரிதானே எங்களது குறி? அங்கு எவ்வாறு சென்றாலென்ன? நாரிபுரியில் எந்த இடத்துக்குச் சென்றாலென்ன? போலீஸ் காவல் என்றால் எங்கள் கைப்பணம் செலவில்லாமல் ஆகாரம் கிடைக்கிறது. எனவே எங்களுக்கு யாதொரு ஆட்சேபமுமில்லை. சந்தோஷந்தான். உடலினால் பிரிந்திருந்த எங்களிருவரையும் கை விலங்குகள் ஒன்று சேர்த்தனவே என்று நாங்கள் களிப்படைந்தோம். மனத்தில் களிப்பிருக்குமாயின், நடை வேகமாய் ஓடாதா? மட்டக் குதிரைகளைப் போல நாங்களிருவரும் 'வெட் வெட்' என்று நடந்தோம். ஒருமணி நேரம் நடந்திருப்போம். நாரிபுரத்துக் கோடிக்கு வந்து சேர்ந்தோம்.

அத்தியாயம் - 11

சந்திப்பு

ஆற்றின் கரையிலிருந்தே பாதை வெகு அழகாக அமைக்கப்பெற்றிருந்தது. பாதை ரொம்ப அகலம். இரண்டு பக்கங்களிலும் நிழல் மரங்கள் வைத்துப் பயிர் செய்யப்பட்டிருந்தன பலாமரங்கள் வைத்து பயிர் செய்யப் பட்டிருந்தன. மாமரங்கள் அதிகம். வெயிலே தெரிய வில்லை. நாங்களிருந்த ஆற்றின் கரையிலிருந்தே பவள மலை நன்றாக எங்களுக்குத் தெரிந்தது. மலையிலே, வளர்ந்த உயரமான மரங்கள காணப்பட்டன. சிற்சில இடங்களில் சிறுசிறு அருவிகள் காணப்பட்டன. ஒரு புறத்தில் மலைக்கு ஏறுகிற பாதை நன்றாகத் திருத்தி யமைக்கப்பட் டிருந்ததை, போகிறபாதையிலிருந்தே கண்டுகொண்டோம். நாரிபுரிக்குப் போவதைக் காட்டிலும் பவளமலைக்கு நேராகவே போய்விடலாம என்கிற ஆசை எனக்கு ஏற் பட்டது. ஆனால் அதை நான் பூபதியிடம சொல்லவில்லை அவனுக்கு மலை, ஆறு முதலிய இயற்கை அழகுகளில் அவ்வளவு பிடித்தமில்லை என்று தெரிந்து கொண்டு விட் டேன. எனவே மௌனமாக நடந்து கொண்டிருந்தோம. நாரிபுரியை அடைந்ததும, அதன் வீடு அமைப்புகளைக் கவனித்தேன். அந்த ஊரில் குடிசை என்பது இருப்ப தாகவே தெரியவில்லை. எல்லாம ஓட்டு மண்டபக் கட்டிடங்கள். ஒரு வீட்டைப்பார்த்தால், இன்னொரு வீட்டைப் பார்க்கவேண்டிய தேவையே யில்லை. காலஞ்சென்ற திவான சேஷய்யா சாஸ்திரிகள் புதுக் கோட்டை நகரத்தின் வீதிகளை ஒழுங்காக அமைத்திருப் பதுபோல, நாரிபுரிவீதிகளும் ஒழுங்காக அமைக்கப் பெற்றி ருந்தன. ஊரிலே சந்துகள, சிறிய வீதிகள் இருந்ததாகத் தெரியவில்லை. வீதிகளில சிறிதும கோணல கிடையாது. வீதிகள் முழுவதும தூண விளக்குகள் அமைக்கப்பட்டிருந் தன. காபிக்கடை, சாப்பாட்டுக கிளப்பு, கள்ளுக்கடை, சாராயக்கடை எதுவும கண்ணில தென்படவில்லை.

நாங்கள் நாரிபுரிக்குச் சென்ற பொழுது, காலையில் சுமார் பதினொரு மணியிருக்கும் சிறுபிள்ளைகளும் சிறு பெண்களும பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பி வருவதாகத்

தோன்றிற்று. இரண்டு பர்லாங்கு தூரத்துக்கு ஒவ்வொரு இடத்திலும் போலீஸ் காவலாளிகள் நின்று கொண்டிருந்தார்கள். இவர்களில் ஆண்களும் காணப்பட்டார்கள். வீதியின் ஒரு புறத்தில் மாடுகளுக்கு நீர் குடிக்க வசதிகள் அமைக்கப் பெற்றிருந்தன.

அதற்குப்பக்கத்தில் சிறிய சாவடிகளும் பசும்புல் தரையும் மலர்ச்செடிகளும் காணப்பட்டன.

இதற்குள் நாங்கள் போலீஸ் சாவடிக்கு அழைத்துச் செல்லப்பட்டோம். அங்கே ஒரு பெண் நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு, மேஜையிலிருந்த சில தஸ்தாவேஜுக்களைப் படித்துக்கொண்டிருந்தாள். அவளுக்கு முன்னால் நாங்கள் கொண்டுபோய் நிறுத்தப்பட்டோம்.

"என்ன" என்றாள் அவள். "அனுமதி பெறாமலும், ஓடத்தில் ஏறிவராமலும் இவர்கள் இருவரும் ஆற்றில் நீந்தி நாரிபுரியின் எல்லைக்கு வந்துவிட்டார்கள். அனுமதியில்லாததனால் போலீஸ் சாவடிக்கு சட்டப்படி கைவிலங்கிட்டு இவர்களிருவரையும் கொண்டு வந்தோம்" என்றாள் போலீஸ் காவல் பெண். "அவர்கள் சொல்லுவதை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா" என்று போலீஸ் அதிகாரி எங்களைப்பார்த்துக் கேட்டாள். "முற்றிலும் உண்மை" என்றோம், நாங்களிருவரும் ஏககாலத்தில். "என் வேலை எளிதாகிவிட்டது. நீங்களிருவரும் உளவுச் சட்டத்தின் கீழ் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறீர்கள். நீங்கள் குற்றம் செய்துவிட்டதாக நான் தீர்ப்புக் கூறிவிடவில்லை. அந்த அதிகாரம் எனக்குக் கிடையாது. நீங்கள் நாரிபுரியின் நீதி ஸ்தலத்தில் நாளைக்கு ஆஜராகவேண்டும். இன்று முழுவதும் நீங்கள் போலீஸ் பந்தோபஸ்தில் இருக்கவேண்டும். உங்கள் பெயர் முதலியவைகளை மாலையில் கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் ஸ்நானம் முதலியன செய்து இப்பொழுது இளைப்பாறுங்கள். 113! இவர்களைக்கொண்டுபோ" என்று அதிகாரி உத்திரவிட்டாள். நாங்கள் போலீஸ் லாக்கப்புக்கு கொண்டு போகப்பட்டோம்.

நாரிபுரி போலீஸ் பாதுகாப்பு மிகவும் நேர்த்தியாக இருந்தது. அனாவசியமான யாதொரு அசௌகரியமும் வேண்டுமென்று அதிலிருப்பவர்களுக்கு செய்யப்படவில்லை.

ஸ்நானம் செய்ய வசதி இருந்தது. நாங்களிருவரும் ஸ்நானம்செய்தோம். வீட்டு ஆகாரத்தைப்போலவே எங்களுக்கு ஆகாரம் கொடுக்கப் பெற்றது. நாங்கள் அடைக்கப்பட்டிருந்த இடம் மிகவும் சுத்தமாக வைக்கப்பட்டிருந்தது. நல்ல படுக்கை. அவ்வளவு சுத்தமாய் படுக்கை வைத்திருக்கப்படும் என்று நாங்கள் எண்ணியதேயில்லை. சாப்பாடு முடிந்ததும், "வேண்டுமானால் படிக்கப் புத்தங்கள் தருகிறோம்" என்றார்கள் காப்பாளர்கள் அங்கு காப்பாளர்களில் ஆண்களுமிருந்தனர். "சுப்பிரமணிய பாரதியார் நூல்கள் இருந்தால் கொடுங்கள்" என்றோம். "சுப்பிரமணிய பாரதியாரின் நூல்களில் எது வேண்டும்" என்றார்கள். "ஞானரதம், நவதந்திரக் கதைகள் இருந்தால் வேண்டும்" என்றேன். இரண்டு நூல்களையும் கொண்டுவந்து கொடுத்தார்கள். நாங்கள் படித்துக் கொண்டிருந்தோம்.

எங்களிடம் சிறைக்காப்பாளர்கள் காட்டிய மரியாதையை என்னென்று சொல்வேன்? கைது செய்தவுடனே, ஒருவனைக் குற்றவாளியாகக் கருதி, அதுபோல் நடத்தும் மனோபாவம் அந்தக் காப்பாளர்களிடம் கிடையாது. நாரி புரியில் நாங்கள் கண்டவை யாவும் புதிதாகவே இருந்தன. எங்களைத்தவிர அந்த லாக்கப்பில் வேறு யாருமேயில்லை. எங்களுக்கு லாக்கப்பில் கொடுத்த ஆகாரத்தைப் போலக் கொடுத்தால், அந்த நாட்டு, அரசாங்கத்துக்குக் கட்டுமா என்று யோசித்துப் பார்த்தேன். கட்டாமல் போகுமானல் அத்தகைய ஆகாரம் கொடுப்பார்களா என்று எண்ணி, எனது முந்திய எண்ணத்தைத் திருத்திக் கொண்டேன். மாலை நான்கு மணியிருக்கும். காலையில் பார்த்த போலீஸ் அதிகாரி எங்களிடம் வந்தார். எங்களைக் கச்சேரிக்கு அழைத்துவருமாறு கட்டளையிட்டுச் சென்றார். கையில் மீண்டும் விலங்கிடப்பெற்று, அதிகாரி முன்னிலைக்கு நாங்கள் அழைத்துச் செல்லப்பட்டோம்.

"லாக்கப்பில் உங்களுக்கு சரியான உணவு கொடுக்கப்பட்டதா? அதைப்பற்றி உங்களுக்கு ஏதேனும் குறை சொல்லிக்கொள்ள வேண்டுமா? இருந்தால் சொல்லிக் கொள்ளலாம்" என்று அந்த அதிகாரி கேட்டார். "எங்கள் வழக்கமான உணவைப்போலவே, இங்கு எங்களுக்கு உணவு கொடுக்கப் பெற்றது. குறையொன்றுமே யில்லை. எனவே

இந்த அரசாங்கத்தின் மரியாதைத் திட்டத்தைப்பற்றி, ஒரு வார்த்தை புகழ்ந்து பேசுமாறு எங்களுக்கு இடங்கொடுக்க வேண்டும். நாங்கள் இந்த அரசியலை வாயார வாழ்த்தினதாக முதலில் எழுதிக்கொள்ளும்படியாக வணக்கமாகக் கேட்டுக் கொள்ளுகிறோம். எங்கள் மனத்திலிருப்பதைத் தெரிவித்துக்கொள்ள வேண்டியது எங்கள் கடமை' என்றேன்.

"நல்லது, நீங்கள் அனுமதியில்லாமல் இந்த நாட்டுக்கு வந்திருக்கலாகாது. எனவே உங்கள் பேரில 'ஒற்றர்' என்ற குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது. உங்கள் ஊர், பெயர், முதலியனவற்றை நான் யாதொரு குறுக்குக் கேள்விகளும் கேட்காமல் சொல்லிவிடுவீர்கள் என நம்புகிறேன்" என்றார் அந்த அதிகாரி. "உங்களிஷ்டப்படியே சொல்லுகிறேன். என் பெயர் கணபதிராயன். நான் தேச சஞ்சாரம் செய்வதில் ஆவல் கொண்டவன். புதுமையை நாடி, எங்கும் செலலுவது எனது வழக்கம். எனது ஊர், பொருளூர். எனது தாய் தந்தையர்களின் பெயர் எனக்குத் தெரியாது. நான் எநத அரசாங்கத்துக்கும ஒற்றனலல. எலலாத் தேசங்களையும் சுற்றிப பார்த்ததுபோலவே, இங்கும் வந்தேன். ஆற்றின் கரையில் தடுக்கப்பெற்றேன். இந்த ஊருக்கு வருமபடி என்னைத் தூண்டியது இந்நகர் மாணிக்கக கோதையார் கூச்சல பட்டியில தலைமை வகித்ததேயாகும். கூச்சலபட்டியிலேயே தெரிந்திருந்தால், அவர்களுடன் சேர்ந்து வந்திருப்போம். சட்டத்தை மீறுவது தவறு. சட்டம் தெரியாது என்று சமாதானம கூறுவதும் தவறு என்று ஒப்புக்கொள்கிறேன். ஆனல் சட்டத்தைமீறியேனும் இந்த அற்புத நாட்டைப பார்ககவேண்டும என்ற ஆவல் என்னிடம் மிகுதியுமிருந்தமையால, நான் சட்டத்தை மீறினேன். சட்டத்தை மீறி நடப்பது எனது தொழிலலல" என்றேன்.

"சரி; அடுத்த பேர்வழி" என்றார் அதிகாரி. "எனது நண்பன் கணபதிராயன் சொல்லியதில் பெரும்பான்மை எனககும் பொருந்தும். என் பெயர் பூபதிராயன். எனது ஊா பஞ்சையூர். என் தாய்தகப்பனார்களைப் பற்றி எனக்கு அதிகம தெரியாது. எனது சிறு பிராயத்திலேயே அவர்கள் மரித்துப்போயினர். வெறும் வாய்ப்பேச்சாளர்கள் இல்லாத

இடத்தைக் கண்ணால் பார்க்கவேண்டும் என்ற ஆவல்மிகுதியால், எனது நண்பனுடன் தேச சஞ்சாரத்துக்குப் புறப்பட்டேன். நல்லரசாட்சியாகிய நலவிருந்துக்காட்சியை ஒரு கணமேனும் பார்க்கவேண்டுமென்பது எனது அவா. சட்டத்தை மீறி, இந்தக்கரை சேராவிட்டால், இந்த விசித்திர நாட்டை என் ஆயுளில் ஒரு பொழுதும் நான் பார்த்திருக்கமுடியாது. சட்டத்தை மீறியது எனது பாக்கியமாகும். எனது இந்த பாக்கியத்தின் பொருட்டு, நான் எத்தகைய தண்டனைபெற வேண்டுமானாலும் பெறத் தயாராயிருக்கிறேன்'' என்று பூபதி சொன்னான்.

''உண்மை தானே'' என்றார் அதிகாரி. ''ஆம்'' என்றான் பூபதி. ''உங்களைப்பார்த்தால் மாணிக்கக் கோதையாருக்கு அடையாளம் தெரியுமா'' என்றார் அதிகாரி. ''தெரியத்தான் வேண்டும். மறந்துபோயிருந்தால், நாங்கள் என்ன செய்வது? அதனால் எங்கள் வார்த்தைகளைப் பொய் யென்று கொள்ளலாகாது'' என்றேன். ''நல்லது மாணிக்கக் கோதையார் இவ்விடம் சிறிது நேரத்திற்கெல்லாம் வருவார்கள். பிறகு மற்றைய சங்கதிகள்'' என்றார் அதிகாரி. இவ்வாறு பேசிக்கொண்டிருக்கும் பொழுதே, மாணிக்கக் கோதையார் அங்கு வந்துவிட்டார்.

அதிகாரி யுள்பட எல்லோரும் சலாம் செய்தார்கள். மாணிக்கக் கோதையார் எங்களைச் சிறிதுநேரம் வெறிக்கப் பார்த்துவிட்டு சிரித்தார். நாங்கள் மௌனமாய் இருந்தோம். ''இவர்கள் ஏன் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்'' என்று மாணிக்கக் கோதையார் கேட்டார். 'அனுமதியில்லாமல் நமது நாட்டில் நுழைந்ததற்காக' என்றார் போலீஸ் அதிகாரி. ''அவர்கள் வாக்குமூலம் கொடுத்திருக்கிறார்களா'' என்றார். ''அவர்கள் வாக்கு மூலத்தில தங்கள் கூச்சலபட்டி பிரசங்கத்தின் மூலமாக, இந்த நாட்டைப் பார்க்கவேண்டும் என்ற அவா ஏற்பட்டதாகக் கூறியிருக்கிறார்கள்'' என்றார் அதிகாரி.'' அவர்களை எனக்குத் தெரியும். அவர்கள் சொல்லியிருப்பது உண்மை. அவர்களுடைய விலங்குகளை கழற்றிவிட்டு, அவர்களைப் பற்றிய தஸ்தாவேஜியை பைலில் வைத்துவிடுங்கள்'' என்றார் மாணிக்கக் கோதையார்.

கை விலங்குகள் எடுக்கப்பட்டதும், "உங்களை நான் கூட்டம் கலைந்தபின் தேடிப் பார்த்தேன். விசாரித்தேன். ஒரு தகவலும் யாராலும் கொடுக்கமுடியவில்லை. உங்களைக்கண்டு பேசவேண்டும் என்று அவா அடைந்தேன். அன்று அது நேர்முகமாய்ப் பூர்த்தியாகவில்லை. இன்று கோணலாக அந்த பாக்கியம கிடைத்ததை மிகுதியும் பாராட்டுகின்றேன். வாருங்கள், போவோம. கொத்தவால்! வேறு விசேஷ மிலலையே" என்று மாணிக்கக் கோதையார் போலீஸ் அதிகாரியைக் கேட்டார். இல்லை என்று மறு மொழி வரவே, நாங்கள் மூவரும் போலீஸ் கச்சேரியை விட்டு வெளியே சென்றோம் "நேரே நாம் வீட்டுக்கு போவோம். நாளைக்கு நாரிபுரியைச் சுற்றிப் பார்க்கலாம்" என்று மாணிக்கக் கோதையார் எங்களிடம் சொன்னார். சரியென்று அவர் கூடவே சென்றோம்.

வீதிகளில் எவரும் எங்களை வெறித்துப் பார்க்கவில்லை. ஒவ்வொருவரும் தத்தம் அலுவலின் பேரில சென்றுகொண்டிருந்தார்போலும்! நாங்கள் மூவரும மாணிக்கக் கோதையார் வீட்டுக்கு வந்து சேர்ந்தோம். வீட்டில ஒரு பெரிய அம்மாள் இருந்தார். எங்களை வாருங்கள் என்று வரவேற்றார். நாஙகள சென்ற வீடு ஏனைய வீடுகளைப்போலவே, நடுத்தரமாக விருந்தது. இரண்டு அறைகள், ஒரு கூடம், தாழ்வாரம், சமையலறை, பின்புறத்தில ஒரு தோட்டம், வீட்டுக்குள் ஒரு கிணறு. அந்த வீட்டிலே அந்தப் பெரிய மனுஷியைத் தவிர, வேறு ஒரு பேர்வழியும் இல்லை. நாங்கள் யாவரும் ஒரு சடைப்பிரப்பம்பாயில் உட்கார்ந்து கொண்டோம்.

"உங்களைப் பார்த்தால் இந்த நாட்டில் ஒரு செல்வாக்குள்ள அதிகாரியைப் போலத் தோன்றுகிறதே, நீங்கள யார்" என்று நான் மாணிக்கக் கோதையாரைக் கேட்டேன். "எங்கள் நாட்டுக்கு கோதைத் தீவு என்று பெயர். இந்த நாட்டின் தலைநகர் நாரிபுரியாகும். நான் இந்த நாட்டின் போலீஸ் தலைமை அதிகாரி. எனக்கு இப்பொழுது 24-வயது தான். என்றாலும பெரிய பொறுப்பை என்பேரில போட்டிருக்கிறார்கள்" என்றார் மாணிக்கக் கோதையார்." "ரொமப சந்தோஷம். நாஙகள் வீதியில் வரும்பொழுது, சில பேச்சுகள் எஙகளுக்கு புரியவிலலை" என்றேன்.

" அதைப்பற்றி பேசவே நான் வாய் எடுத்தேன். அதற்குள் நீங்கள் முந்திக் கொண்டு விட்டீர்கள். இந்த நாட்டில் சில சொற்கள் சிறப்பாக வழங்கப்பெறும். எனவே அவைகளை நான் உங்களுக்கு இப்பொழுது கூறுகின்றேன். அவைகளை நினைவு வைத்துக்கொள்ளுங்கள். இந்த நாட்டிலே, நீங்கள் சகஜமாக உபயோகித்துவரும் வார்த்தைகளும் பெரியவர்களுக்கு அர்த்தமாகும். சிறுர்களுக்கு அர்த்தமாகாது. இங்கு வழங்கும் சிறப்பான சொற்களுக்கு ஒரு ஜாப்தா கொடுககின்றேன்.

பெண்களுக்கு பெயர்	-	கோதை
ஆண்களுக்கு பெயர்	-	காளை
ஆண் குழந்தைகளுக்கு	-	கன்று
கலியாணமாகாத ஆண் சிறுவர்களுக்கு	-	குட்டி
பெண் குழந்தைகளுக்கு	-	தோகை
கலியாணமாகாத பெண் சிறுமிகளுக்கு	-	மலலிகை
மனைவியை யிழந்த ஆண்களுக்கு	-	மோழை
புருஷனையிழந்த பெண்களுக்கு	-	மூளி
பெண்களில் முதியவர்களுக்கு	-	ஔவை
ஆண்களில் முதியவர்களுக்கு	-	ஆழ்வார்
வயல்களுக்கு	-	கழனி
காளை மாடுகளுக்கு	-	எருது
கலியாணத்துக்கு	-	கூடல்
பிறப்பிற்கு	-	உதயம்
மரணத்திற்கு	-	மறைவு
பெண்கள் ஆள் ஆவதற்கு	-	மலர்ச்சி
பெண்களின் மாதவிடாய்க்கு	—	ஆவல்
குழந்தைக்கு (பொதுவாக)	-	குழவி
இந்நாட்டின் அரசியலை நடத்துவோர்களுக்கு		நிர்வாகி
நியாயத்துக்கு	-	நீதி
நியாயாதிபதி	-	தருமன்
வீடுகளுக்கு	-	இல்லம்

அத்தியாயம் - 12

வேடிக்கை

மாணிக்கக் கோதையார் மேலும் சொல்லுகிறார்:— நாணம் என்ற சொல்லே இந்த நாட்டில் வழங்கப்படுவதில்லை. அதற்குத் தேவையான சந்தர்ப்பமும் உணர்ச்சியும் இந்த நாட்டில் கிடையாது. நான் கூறிய இந்தச் சொற்களை இப்பொழுது நினைப்பில் வைத்துக்கொண்டால் போதும். பின்னர் தேவையானபொழுது புதிய சொற்கள் தோன்றுமாயின், அவைகளின் பொருளை அப்பொழுது விளக்கிக் கூறுகின்றேன். உங்கள் நாட்டுச் சொற்களைவிட, நான் சொல்லி வந்தவை பொருத்தமும் பொருட் செறிவும் உள்ளவை என்று உங்களுக்குத் தோன்றியிருக்கக் கூடும்.''

''கலியாணமான பெண், கோதை என்கிறீர்களே, உங்களுக்குக் கலியாணமாயிற்றா? ஆயிற்றாயின் உங்கள் காளை எங்கே '' என்றேன். கோதையார் சிரித்துக்கொண்டு, ''எனக்கு இன்னும் கூடல் ஆகவில்லை. எனது உத்தியோகத்தின் மரியாதைப் பதவிக்காக எனக்கு கோதை என்று கௌரவப் பட்டம் அளிக்கப்பட்டிருக்கிறது. எனது தகப்பனார் மறைந்துபோய்விட்டார். எனது தாய் மதுரவல்லி ஔவையார் மட்டும் இருக்கிறார்கள். உங்களை வரவேற்ற, இதோ நம்முடன் வீற்றிருக்கும் இவரே எனது தாய்'' என்றார் அவர்.

நான் பெருமூச்சு விட்டுக்கொண்டு, மனத்தில் ஒருவாறு ஆறுதல் அடைந்தேன். ''கோதைத் தீவில் ஒருவரும் மாமிசம் உண்பதில்லை. அதை நீங்கள் தெரிந்து கொள்ளுங்கள் '' என்றார் கோதையார். இவற்றை யாவையும் கேட்டுக்கொண்டு பூபதி மௌனமாய் உட்கார்ந்து கொண்டிருந்தான். அதற்குள் அங்கு ஒரு பெண் வந்தாள். அவளுக்குச் சுமார் 22 வயதிருக்கும். '' நண்பர்களே! இப்பொழுது இங்கே வந்திருப்பது பூங்காவன மல்லிகை. இவள் எனது தோழி. இந்த நாட்டின் தலைமை நிர்வாகியின் தோகை. இவளை உங்களுக்கு அறிமுகம் செய்து வைக்கிறேன் '' என்றார் மாணிக்கக் கோதையார். '' இவர்களில் ஒருவர் பெயர்

கணபதிராயன்; மற்றவர் பெயர் பூபதிராயன். நமது நாட்டைப் பார்வையிட வந்திருப்பவர்கள். எனவே நமது விருந்தினர்கள்'' என்று எங்கள் இருவரையும் பூங்காவன மல்லிகைக்கு கோதையார் அறிமுகப்படுத்தி வைத்தார்.

நாங்கள் ஒருவரை யொருவர் தெரிந்து கொண்டோம். "இந்த நாட்டின் பாஷையும் பழக்க வழக்கங்களும எங்களுக்கு அதிகமாய்த் தெரியாததனால், நாங்கள் தற்போது தங்களிடம் அதிகமாகச் சல்லாபம் செய்யும் பாக்கியம் பெறும விருக்கின்றோம். எங்களது இந்தக் குறையினால் எங்களுக்குண்டாயிருக்கும் மன வருத்தத்தைச் சொல்லி முடியாது. எனவே, நானும் எனது நண்பனும் உங்களிடம் அதிகம் பேசாமலிருந்தால், அதைப் பொறுத்துக்கொண்டு மன்னித்து விடுங்கள்'' என்றேன். "நீங்கள் அடக்கம் காண்பிக்கத் தேவையில்லை. நீங்கள் நாட்டிற்குப் புதிது என்பது எங்களுக்குத் தெரியும். எனவே நாங்கள் உங்களிடமிருந்து அதிகமான பேச்சை எதிர்பார்க்கவில்லை. ஆகையால் நீங்கள் மன்னிப்பு மனுச்செய்துகொண்டு, எங்கள் அறிவைக் கேவலமாக்கிவிடாதீர்கள். ஒரு பொருளை நிதானித்து நிர்த்தாரணம் செய்ய எங்களுக்கும் ஆற்றல் உண்டாதலால், நீங்கள் மிகைப்படக் கூறுவது எங்கள் அறிவின் மதிப்பைக் கெடுப்பதாகும்'' என்றார் மாணிக்கக் கோதையார். அதை ஆமோதித்து தலையை அசைத்து நான் மௌனமாயிருந்தேன்.

தான் வந்த வேலையைத் தெரிவித்துக்கொள்ளாமல், பூங்காவன மல்லிகை விடைபெற்றுக்கொண்டு சென்றுவிட்டாள். இதற்குள் பொழுதும் போய்விட்டது, இரவும் வந்துவிட்டது. "இங்கேயே இருங்கள். இதோ வந்து விடுகிறேன்'' என்று சொல்லிவிட்டு மாணிக்கக் கோதையார் வெளியே சென்றார்.

நானும் பூபதியும் பேசத்துவக்கினோம். "என்ன பூபதி! பேசாமல் மௌனமா யிருக்கிறாயே', என்றேன். "நீ பேசப் போகின்றாய் என்பது எனக்குத் தெரியும். எனவே நான் ஏன் முதலில் பேசவேண்டும் எனச் சும்மா யிருந்தேன்'' என்று அவன் சொல்லிவிட்டுச் சிரித்தான். இவ்வளவு காலமாக அவன் சிரித்ததே இல்லை. இப்போது

தான் பூபதி சிரித்திருக்கிறுன். இந்த நாடு அவனுக்குப் பிடித்துப் போய்விட்டது என்பது தெளிவு. அவன் சந்தோஷம் கொண்டிருக்கும் காலத்தில் எவ்வாறு பேசுகின்றுன் என்பதைத் தெரிந்து கொள்ளுவதற்கு எனக்கு ஒருவித ஆவல் தோன்றிற்று. அதை வெளியே காண்பித்துக்கொள்ளாமல், "பூபதி ராயா! இந்த நாடு எப்படியிருக்கிறது" என்று கேட்டேன்.

"நான் இதை முழுமையும் பார்க்காவிட்டாலும், இதைப்பற்றி, போதுமான அளவு தெரிந்துகொண்டு விட்டேன். ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறுதான் பதம் பார்ப்பார்கள். அதுபோல போலீஸ் லாக்கப்பிலேயே இந்த நாட்டின் தன்மையைத் தெரிந்துகொண்டேன். இந்த நாட்டார் அனைவரும் மரியாதை தெரிந்தவர்களாகக் காணப்படுகின்றுர்கள். இன்னொரு அதிசயத்தைப் பார்த்தாயா? இவ்வளவு வேலை நடைபெறுகிறதே, இந்த நகரில் கூச்சல் அதிகமாயிருக்கிறதா? சத்தமே காதில் கேட்கவே இல்லையே! ஆச்சரியம்! தேவையான அளவு பேசுகின்றுர்கள், அப்பா! எனது மனத்தவிப்பு ஒருவாறு தணிந்து போய்விட்டது. இனி நான் மன அமைதியுடன் இறக்க முடியும். பெண்கள் அரசியல் நடத்தினுல், அது அழகாக நடைபெறும்போலிருக்கிறதே" என்றுன் பூபதி. "நீ சீக்கிரம் மரிக்கப் போகிறவனுகத் தோன்றவில்லை. உனக்கு கலியாணம் ஆகும் என என் மனதில் உதயமாயிருக்கிறது. உன்னைக் கண்டதும் அந்தப் பூங்காவன மல்லிகையின் முகமலர்ச்சியை நான் பார்த்த பிறகு, நீ வெகு காலத்திற்கு பிரம்மசாரியாக இருக்க முடியாது என்று தீர்மானித்துக் கொண்டேன். நான் எண்ணுவது பிரமை என்று நினைக்காதே. எனக்குப் பெண்களின் உள்ளம் நன்ருய்த் தெரியும். அதை நான் ஒரு சாஸ்திரமாக்கிவைத்துக் கொண்டிருக்கிறேன்" என்றேன்.

"உனக்கு பெண் நினைவுதான் எப்பொழுதும். உனக்கும் நான் கலியாணம் திட்டம் செய்துவிட்டேன். உனது மனைவி மாணிக்கக் கோதையார் என்று உன் கூர்மையான கண்ணில் படவில்லையா" என்று சொல்லிச் சிரித்தான். பூபதி சொல்லிய சந்தேகம் எனக்குத் தோன்ருமல் இல்லை. என்றுலும் மக்கைப்போல நடந்து கொண்டுவரும் பூபதி

யின் கண்கள் எவ்வளவு கூர்மையுள்ளவைகள் என்பதை அப்பொழுதும் பின்னும் அதிகமாகத் தெரிந்துகொண்டேன். "சொல்லுக்குச் சொல் சொல்லிவிட்டாய். ஆதாரமில்லாமல் சொல்லும் வழக்கம் உன்னிடத்தில்கூட உண்டா" என்றேன். "அப்படியா? உன் மனதை ஒளித்துக்கொண்டு, வேறு மாறுவிஷயத்தை என்னிடம் பேசும் வழக்கத்தை எப்பொழுது முதல் நீ கைக்கொண்டிருக்கிறாய்? மனதை ஒளிப்பது எளிதான காரியமல்ல. சிறு குழந்தையைப் போல செய்யத் துணிந்த உனது துணிச்சலை நான் மிகவும் மெச்சுகின்றேன்" என்றான் பூபதி.

"மன்னிப்பாயாக! பூபதி. உனது கண்கள் மட்டும் கூர்மையானவை என்று எண்ணிக்கொண்டிருந்தேன். உனது அறிவும் இவ்வளவு கூர்மையாயிருப்பதைக் கண்டு சந்தோஷம். உள்ளபடியே உன்னிடமிருந்து என் மனத்தை ஒளிக்கப் பார்த்தேன். அதை நீ தெரிந்து கொண்டாய். என்ன பந்தயம்! இந்த ஊரில் நமக்குக் கலியாணம் ஆகப் போகிறது" என்று உற்சாகத்திலே நிதானங் கடந்து சிறிது உரக்கச் சொல்லிவிட்டேன். உண்மைதான் என்று சொல்லிக்கொண்டு, மாணிக்கக் கோதையார் உள்ளே நுழைந்தார். நான் திடுக்கிட்டுப் போனேன். ஆனால் பூபதியோ அசைவற்று, தனது அவயவத்தில் யாதொரு மாறுதலுமின்றி அப்படியே உட்கார்ந்து கொண்டிருந்தான். நெருக்கடியிலும் அவனுக்கு பரபரப்பு கிடையாது.

அத்தியாயம் - 13

நாரிபுரி வர்ணனை

மாணிக்கக் கோதையார் வந்த பின்னர், "இந்த நாட்டைப் பற்றியும் உங்கள் கலியாணத்தைப் பற்றியும் உங்களுக்குள் ஒருவாறு பேசி முடித்துக் கொண்டீர்கள். நீங்கள் மனத்திலுள்ளதை ஒளிக்காமல் பேசியது எனக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது. நீங்கள் பேசியதைப் பற்றி எனக்கு வருத்தமில்லை. நீங்கள் பேசாமலிருந்தால், ஒருக்கால் உங்களிடம் எனக்குச் சந்தேக முண்டாயிருக்கும். நீங்கள் பேசியவரையிலும், என்மனதில் உங்களைப்பற்றி

தெளிவு ஏற்பட்டதைக்குறித்து எனக்கு ரொம்ப சந்தோஷம்" என்றார். "உயிர் போவதாயிருந்தாலும் எதையும் நாங்கள் ஒளிக்கப்போவதில்லை. ஆனால் நாங்கள் பேசியது உங்களுக்கு எவ்வாறு தெரிந்தது என்றுதான் அறிய ஆவலுள்ளவர்களாயிருக்கிறோம்" என்றேன்.

"இந்த ஊரில் ஒரு வீட்டில் மெதுவாகப் பேசினாலும், நாலைந்து வீடுகளுக்கு அப்பால் கூடக்கேட்கும். அது உங்களுக்குத் தெரியாது. தவிர, புதிய ஊருக்கு வந்தவர்கள் அதைப்பற்றிப் பேசாமலிருக்க மாட்டார்கள். மேலும் கோதைத் தீவுக்கு வரும் ஏனைய நாட்டு ஆடவர்கள் முற்றும் துறந்த துறவிகளாயிருப்பினும், கலியாணத்தில் ஆவல் கொள்ளுவார்கள். எனவே, நீங்கள் பேசியதை என்னால் தெரிந்துகொள்ள முடியாது என்று நீங்கள் எண்ணிக்கொள்ள வேண்டாம். நீங்கள் நினைக்கிற நினைப்பை வெளியே சொல்லுவதில் யாதொரு பாதகமும் கிடையாது. மனத்தில் எண்ணியதை, வெளியிலே சொல்லாமலிருப்பது தான் தவறு. மனத்தை ஒளிப்பதனாலே தான் உலகத்திலே தீமை வளர்கின்றது. கலியாணத்தை விரும்புவதும் செய்து கொள்ளுவதும் பாபமான காரியங்கள் அல்ல. ஆனால் அவைகளை மறைத்து வைத்துக் காரியம் செய்தால்தான் பேராபத்து விளையும்" என்றார் கோதையார்.

நாங்கள் மௌனமாய்க் கேட்டுக்கொண்டிருந்தோம். சில்லறைப் பேச்சுகளாக, பொழுது போயிற்று. இரவு ஐந்து நாழிகை இருக்கும். மணிச்சத்தம் கேட்டது. ஊரில் ஒவ்வொரு மணிக்கும் மணியடிக்கும் வழக்கம் உண்டு. "போஜனம் அருந்தலாமா" என்று கோதையார் எங்களைக் கேட்டார். சரியென்று கை கால்களைச் சுத்தம் செய்து கொண்டு, குறிப்பிட்ட இடத்துக்குப் போய்ச் சேர்ந்தோம். கோதையாரின் தாயார் எங்களுடன் உட்கார்ந்து கொண்டார். கோதையார் பரிமாறினார். உணவு சுவையுடன் சமைக்கப்பட்டிருந்தது. சாப்பாடு முடிந்தது.

"நீங்கள் அனுமதி கொடுத்தால், நான் உங்களுக்குப் பரிமாறுகிறேன். நீங்கள் சாப்பிட உட்காருங்கள்" என்று கோதையாரிடம் நான் சொன்னேன். "சரி, அப்படியே செய்யுங்கள்" என்று சொல்லிவிட்டு, கோதையார் உட்

கார்ந்துகொண்டார். நான் பரிமாறினேன். எல்லோருமாகத் தாழ்வாரத்துக்கு வந்து சேர்ந்தோம். "உங்களுக்கு வெற்றிலைப் பாக்குத் தேவை யுண்டானால் தருகிறேன்" என்றார் கோதையார். தேவையில்லை என்று சொல்லிவிட்டோம். "உங்களுக்கு உறக்கம் வராவிடில், இந்த நாட்டைப்பற்றி சிறிதளவு சொல்லுகிறேன்" என்றார் அவர். பெரு மகிழ்ச்சி என்றோம்.

மாணிக்கக் கோதையார் புன்முறுவலுடன் ஆரம்பித்தார் :—'எங்கள் நாட்டுக்கு கோதைத்தீவு என்று பெயர். அதன் முப்புறத்திலும், அதைப் பவளமலை சுற்றி வளைத்துக்கொண்டிருக்கிறது. அதன் நான்காவது பக்கத்தில் மையலாறு ஓடுவதை நீங்கள் பார்த்து விட்டீர்கள். கோதைத்தீவின் நீளம பன்னிரண்டு மைல். அதன் அகலம் ஏழுமைல். தனித்துண்டாக இந்த பூமி இருப்பதால், இதற்குத்தீவு என்று இதை முதலில் கண்டவர்கள் பெயர் கொடுத்திருக்கிறார்கள். இந்தத் தீவுக்கு, துவக்கத்தில் நூறு பெண்கள் வந்தார்கள். அவர்கள் உழைத்துப் பாடுபட்டு, நாரிபுரியின் அடித்தளத்தை உண்டாக்கினார்கள். அப்பொழுது இந்த நாட்டில் காடுமயமா யிருந்தது. இந்த நூறு பெண்களும் ஏன் இங்கு தனியாக, துண்டாக, ஆண்களைக்கூட கூட்டிக்கொள்ளாமல் வரவேண்டும்! ஆண்மகன்கள் பெண்களைப்படுத்தும் பாட்டைப்பார்த்து மனம் பொறுதவர்களாய், இந்த நாட்டுக்குக் குடியேறிவந்தார்கள். பத்து ஆண்டுகள் வரையிலும் தாங்களே உழைத்துப் பயிர்செய்து நாரிபுரியைக் கண்டார்கள்.

"இதனிடையே காட்டு மிருகங்களும் ஆண்மகன்களும் இங்கே வருவார்களாகில், பெருத்த தீயைக் கொளுத்தி பேய்களைப்போல் நர்த்தனஞ் செய்து, அவர்களைப் பயமுறுத்தி ஓட்டிவிடுவார்கள். வீட்டிலே வீரர்களைப்போல நடித்து மனைவிமார்களைக் கொடுமைசெய்த ஆண் மகன்களுக்கு இங்கே வந்து, இந்த நாட்டைப்பற்றி நேரில் தெரிந்து கொள்ள தைரியமில்லை. பத்து ஆண்டுகளுக்குப் பின்னர், பெண்விடுதலையில் நாட்டமுள்ள ஆண் பிள்ளைகள் இங்கு வந்தனர். அவர்கள், நூறு கன்னிமார்கள் வகுத்த சட்ட திட்டங்களை ஒப்புக்கொண்டு வாழ்ந்து வந்து, இவர்களுடன் மணம் செய்து கொண்டார்கள். மேன்மேலும்

ஆண்களும் பெண்களும் வந்தார்கள். பலர் இங்கு தரிக்க வேயில்லை. ஓட்டமெடுத்தார்கள்; அவர்களுடைய முந்தையப் பழக்கம் அவர்களை விட்டு விடவில்லை. அவர்களுடைய வழக்கமான பேச்சையும் அவர்கள் மறந்து போகவில்லை.

"நாளுக்கு நாள் இந்த நூறு கன்னிகளின் யோக்கியதையை நன்குணர்ந்த பெரியார்கள் உத்தமமான ஆண் மகன்களை இந்த நாட்டுக்கு அனுப்பினார்கள். அவர்கள் ஏனையோருடன் உழைத்து இந்த நாட்டைப் பெருமைப் படுத்தி விட்டார்கள். இந்தத் தீவின் மொத்த ஜனத் தொகை ஐம்பதினாயிரம். இத்தகைய தீவும் இருக்கக் கூடுமா என்று நீங்கள் வியப்படைய வேண்டாம். ஐரோப்பாக் கண்டத்தில் ஸ்பெயின் தேசத்துக்கும் பிரஞ்சு நாட்டிற்கும் இடையில், எல்லைப் புறத்தில் மாண்டி° கார்லோ என்று ஒரு நகரம் இருக்கிறது. அந்த நகரம் எந்த நாட்டு ஆட்சிக்கும் உட்பட்டதில்லை. அது தனியரசைக் கொண்டிருக்கிறது. சுகம் தேடும் ஐரோப்பிய நாட்டு வாசிகள் அனைவரும் அங்கு சென்று பல நாட்கள் இருந்து சூதாடிக் குடித்து, மற்றும் தகாத காரியங்களைச் செய்துவிட்டு, சுகத்தை அனுபவித்து ஆகிவிட்டது என்று தத்தம் ஊருக்கும் வீட்டுக்கும் போய்ச் சேருவார்கள்.

"எங்கள் நாட்டில் அத்தகைய சுக வாழ்வு கிடையாது. ஆனால் எங்களுக்குத் தனியரசாட்சி உண்டு. அதை நாங்களே நடத்தி வருகின்றோம். எங்களுக்கு அத்தகைய அனுமதி எங்களைச் சுற்றியிருக்கும் அரசாங்கத்தால் கொடுக்கப்பட்டுளது. நாங்களே எங்கள் சட்ட திட்டங்களைச் செய்து வருகிறோம். எங்கள் அரசியல் பொறுப்பிலிருந்து ஆண்களை விலக்குவதுமில்லை; அதிகமாகச் சேர்த்துக் கொள்ளுவதுமில்லை. இப்பொழுது கோதைத் தீவில் பிறந்திருக்கும் ஆண்பிள்ளைகள் பெரியவர்களானால், அவர்கள் தாமாகவே அரசியலில கலந்து கொள்ளுவார்கள். சுதந்திரமுள்ள பெண்களுடன் பிறவி முதல் பழகி வரும் ஆண் குழந்தைகள் திமிருடனும் பொய்க் கௌரவத்துடனும் வளரமாட்டார்கள். ஏனெனின் குழந்தைகளை வளர்ப்பவர்கள் நாங்கள் தானே? மேலும் தகாத கௌரவம் அவர்கள் கொண்டால், அவர்களை அடக்க எங்களுக்குத் தெரியும். மேலும் சுதந்திரத்தையும் பொறுப்பையும்

உணர்ந்து நடக்கும் பெண்களை ஆடவர்கள் வெறுக்கமாட்டார்கள், ஆனால், கொண்டாடுவார்கள். இதை அனுபவத்தில் நாங்கள் கண்டு கொண்டிருக்கிறோம்.

"இந்த நாட்டிலே முதலாவதாக, ஆண்களுக்கும் பெண்களுக்கும் கட்டாயமாகச் சமையல் பழக்கம் தெரிந்திருக்க வேண்டும். ஜெர்மனியில் மூன்று ஆண்டுகளுக்கு ஆண்களுக்குக் கட்டாய ராணுவப் பயிற்சி இருக்க வேண்டுமென்று இருந்தது போல, இந்த நாட்டில், முக்கியமாக ஆண் பிள்ளைகளுக்கு ஓராண்டு கட்டாயச் சமையல் பயிற்சி போதிக்கப்படுகின்றது. சமையல் தெரிந்தால் தான், அவர்களின் கல்வி பூர்த்தியாகிவிட்டதாக இந்த நாட்டில் கொள்ளப்படும். வயதொத்த ஆண்களும் பெண்களும் மரியாதையுடனும் கூச்சமில்லாமலும் பேசிக் கொள்ளுவார்கள். சம்பாஷணை அவரவர்கள் ருசியைப் பொருத்ததாகும். பெண் வயதில் முதிர்ந்தால், அவளை ஆண் மரியாதையாகப் பேச வேண்டும். அது போலவே பெண்ணும். அதிலே வேற்றுமை கிடையாது. கட்டாயச் சமையல் பயிற்சி இருக்க வேண்டுமென்பது போல, கட்டாயப் பயிர்த் தொழில் பயிற்சி இரண்டு இனங்களுக்கு முண்டு. போர்ப் பயிற்சியும் அப்படியே. தேகப் பயிற்சி கட்டாயமாயிருத்தல் வேண்டும். ஆண்டுதோறும் இவைகளில் தேர்ச்சி பார்த்து, சமர்த்தர்களுக்குப் பரிசு கொடுக்கப்படும். நன்றாக நீந்தத் தெரிந்திருக்க வேண்டும். பதினெட்டு வயதுக்கு மேல் இருபத்திரண்டு வயதுக்குள் மேற்கூறிய பயிற்சிகள் யாவும் முடிவு பெற்றவுடன் தனித்தனியாக இவர்கள், பவளமலைக்கு கண்ணைக் கட்டி அழைத்துக் கொண்டு போகப்பட்டு, அங்கு விடப்படுவார்கள்.

"அவர்கள் அங்கு மூன்று நாட்கள் தங்கியிருந்து, மீண்டும் திரும்புதல் வேண்டும். அவர்களுக்காக, ஒரு துப்பாக்கியும சில சில்லறைச் சாமான்களும் மலையில் வைக்கப்பட்டிருக்கும். அவர்கள் ஏய்த்துவிட்டு வர முடியாது. பவளமலைக்கும் நாரிபுரிக்கும் ஒரே ஒரு பாதை தான் உண்டு. அங்கே காவலாளிகள் காத்துக் கொண்டிருப்பார்கள். மேலும் இது வரையிலும் கோழைகளாகப் பயந்து கொண்டு திரும்பி வந்தவர்கள் இல்லை. ஓரிருவர் கொடிய மிருகங்களால் அடித்துக் கொல்லப்பட்டும்,

அவர்கள் பக்கத்திலேயே இந்தக் கொடிய விலங்குகள் செத்துக் கிடப்பதையும் நாரிபுரியார் மிக்க கர்வத்துடன் பார்த்திருக்கிறார்கள்.

"கலியாணத்தில் நிர்ப்பந்தம், சீதனம் முதலியன இல்லை. கலியாணம் சுயம்வர முறையில் நடைபெற்று வருகின்றது. என்றாலும் பெற்றோர்களும் பெரியோர்களும் சம்மதம் கொடுத்தாலன்றி, குறித்த ஜோடி மண முடித்துக்கொள்ள முடியாது. மண முடிந்ததும், அவர்களிருவரும் தனிக்குடும்பமாகப் பிரித்து விடப்பட்டு, சிறிது பூமி துண்டாகக் கொடுக்கப்படுவார்கள். வீடுகட்ட சாமான்கள் கொடுக்கப்படும். அவைகளைக்கொண்டு அந்த ஜோடி பிறர் உதவியை நாடி தங்கள் குடியிருப்பு வீட்டை அமைத்துக்கொள்ள வேண்டும். விசாலமான ஜன்னல் இல்லாத வீட்டைக் கட்டினால், அது அரசியலாரால் அங்கீகரிக்கப்படமாட்டாது. வீடு ஏனைய வீட்டுப் பிளானைப்போலிருக்க வேண்டும். அதற்குத் தக்க பூமிதான் கொடுக்கப்படும். அவர்களுக்கு விடப்பட்ட பூமியை அவர்களே உழுது பயிர் செய்துகொள்ள வேண்டும். குழந்தைகளின் கல்விச் செலவைப்பற்றி, பெற்றோர்கள் கவலைப்பட வேண்டியதில்லை.

"புகையிலை சம்பந்தமான எந்த சாமானும், எத்தகைய லாகிரி வஸ்துக்களும் இந்த நாட்டில் வரக் கூடாது. எவரேனும் இந்த நாட்டை விட்டுப் போகவேண்டுமானால், அரசாங்க அனுமதிச்சீட்டு வேண்டும். வந்தாலும் அப்படியே. வந்த சமயத்தில் வரும் வழியிலேயே அவர்கள் சோதிக்கப்படுவார்கள். புகையிலை முதலிய தடுக்கப்பெற்ற சாமான்களைக் கொண்டுவரும் பேர்வழிக்கு மூன்று நாள் பட்டினி சிட்சை கொடுக்கப்படும். எத்தனை நாள் பட்டினி என்பது அந்தப் பேர்வழியின் உடல் கூறைப் பொருத்தாகும். அன்னியர்கள் இங்கு வந்து இந்த நாட்டிலே தங்குவதற்கு அனுமதி பெற்றாலொழிய, ஐந்து நாட்களுக்கதிகமாக தங்கவிடப்படமாட்டார்கள். எந்த வீட்டிலும் ஆணுக்குத் தோதில்லாத சமயத்தில் பெண்ணும், பெண்ணுக்குத் தோதில்லாத சமயத்தில் ஆணும் சமைக்கவேண்டும். ஒருவரும் முணுமுணுக்கலாகாது. முக்கியமாக ஆண் முணுமுணுத்ததாக ருசுவானால், அவனுக்கு அதிக தண்டனை

விதிக்கப்படும். தண்டனையெல்லாம் அநேகமாய் பட்டினி யாகவே யிருக்கும். அவர்களிடம், விடுதலையடைந்த மூன்று நாட்கள் வரையிலும் வேறு எவரும் பேசமாட்டார்கள்.

" இது கடுமையான தண்டனையாக இருக்கலாம். ஆனால் இதற்கு இதுவரையிலும் சந்தர்ப்பம் நேர்ந்ததில்லை. சில சமயங்களில் அன்னிய நாடுகளிலிருந்துவரும் ஆண்பிள்ளைகள் இந்த நாட்டுக்கு வந்து, பாவனை பெண் விடுதலையில் ஆழ்ந்து, பின்னர் சூழ்ச்சி செய்தால், அவர்களை இரண்டு காதுகளையும் அறுத்து, சிகிச்சை செய்து, பிறகு நாட்டை விட்டுத் துரத்திவிடுவது வழக்கம். இந்தமாதிரி கேஸ்கள் ஜாஸ்தி. இதுவரையிலும் ஐம்பதுக்கு அதிகமாயிருக்க லாம். இந்த நாட்டில் வியபசாரக் குற்றத்துக்குக் கடுமை யான தண்டனை. வியபசாரம் செய்த ஜோடி 15 நாட்கள் பட்டினி கிடக்க வேண்டும். அவர்கள் உடம்பு தேறிய பின்னர் பவள மலையில் தனித் தனியே 10 நாட்கள் வாழவேண்டும். அவர்கள் மரிக்க வேண்டும் என்பதே இந்தச் சட்டம் வகுத்தவர்களின் நோக்கமாகும். இந்தமாதிரி இதுவரையிலும் ஒரே ஒரு கேஸ் தான் இந்த ஐம்பது ஆண்டுகளுக்குள் நேர்ந்திருக்கிறது."

அத்தியாயம் - 14

(தொடர்ச்சி)

மாணிக்கக் கோதையார் மீண்டும் சொல்லுகிறார்:— " இந்த நாட்டின் ஆண்களும் பெண்களும் தனித்தனிப் பள்ளிகளில் படிக்கும் வழக்கம் கிடையாது. சேர்ந்துதான் படிப்பார்கள். ஆண் குழந்தைகள் விளையாட்டுக்கேனும் பெண் குழந்தைகளைக் கௌரவக் குறைவாகப் பேசினாலும், அது கடுமையான குற்றமாய்க் கருதப்படும். ஏன் என்று கேட்பீர்கள். சட்டத்தால் மனிதர்களை அடக்கிவைக்க முடியாது. மருந்தால் மட்டும் நோயைப் போக்க முடியுமா? மருந்து என்பது ஒரு சரக்கு. அதுபோல மக்களின் மனோபாவம் நேராக இல்லாவிட்டால், எத்தனை சட்டங்கள் செய்தாலும் அவைகளின் மூலமாக அவர்களுடைய விகார மனோபாவத்தை மாற்றிவைக்க முடியாது. எனவே, இளம்

பிராய முதற்கொண்டே குழந்தைகளின் மனோபாவத்தை சரிப்படுத்தி குற்றத் தூண்டுதலுக்கு அவர்களை இரையாக் காமல் பார்த்துக்கொள்ள முயலுவதுதான் . கல்வியின் நோக்கமாகும்.

"நாங்கள் அதிகமாகச் சட்டம் செய்வதில் பிரியப் படுவதில்லை. சட்டங்களை எவ்வளவு தூரம் குறைத்துக் கொண்டு, கல்வி வசதிகளைப் பெருக்க வேண்டுமோ, அந் தத் துறையிலேதான் நாங்கள் பாடுபட்டு உழைத்து வரு கின்றோம். எதையும் மூளையிலே சீர் செய்ய வேண்டு மென்பது எங்கள் நோக்கம். அந்த நம்பிக்கையுடனே தான், நாங்கள் எங்கள் வாழ்க்கையை நடத்திவர முயலு கின்றோம். தும்பை விட்டுவிட்டு, எருதின் கொம்பைப் பிடிக்க முயலுவது எவ்வளவு மதியீனம் என்று உங்களுக் குத் தெரியாதா? இந்த நாட்டில், நாங்கள் பஞ்சத்தைப் பார்த்ததில்லை. ஏனெனின், எங்கள் உழைப்போடு, பருவங் களும் எங்களை அதிகமாகச் சோதனை செய்யவில்லை. நாட்டின் மொத்த தானியத்தைக் கணக்கெடுத்து ஜனத் தொகையையும் கணக்குப் பார்த்து, எங்களுக்கு இரண்டு ஆண்டுகளுக்குத் தேவையான தானியங்களை வைத்துக் கொண்ட பின்னர் தான், மீதத்தை நாங்கள் விற்போம். விற்பதிலும் வியாபாரம் செய்வதிலும் தனித்தனியே எவ ரும் தொழில் செய்யக்கூடாது. அரசாங்க வியாபார இலாக்கா இந்த வேலையை மேற்கொண்டு நடத்தி, கிடைக் கும் பணத்தை எடுத்துக் கொள்ளலாம்.

"எவரிடமும் பணம் குவிந்து போகும்படி நாங்கள் விட்டுவிடுவதில்லை. மேலும் பணம் குவிந்து போவதற்குக் காரணமுமில்லை; ஏனென்றால், எல்லோருக்கும் பூமி சம மாகத் தானே பிரித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது? நாடு சிறிதாயும் ஜனத்தொகை குறைவாயும் மக்கள் ஒருமனப் பட்டு வாழ்வதாலும் கொடுங்கோன்மையை யொத்த இந்தத் திட்டத்தை அதிக நரநரப்பின்றி எளிதிலே அமுலுக்குக் கொண்டுவர முடிகின்றது. மன வேறுபாடுடைய மக்களி னிடையே, இத்தகைய திட்டம் கொடுமையாகத் தோன்றும். இந்த நாட்டில் ராணுவம் என்றும் போலீஸ் என்றும் நாங்கள் பிரித்து வைக்கவில்லை. மாறிமாறி ஒவ்வொரு வரும் மூன்று மூன்று வருஷம் போலீஸிலும் ராணுவத்

திலும் சேவகம் செய்யவேண்டும். அவர்களுக்குத் தனிச் சம்பளம் கிடையாது. அவர்கள் போலீஸில் சேவகம் செய்யும் பொழுது, அவர்களுடைய நிலம் ஏனையோரால் பயிர் செய்யப்பட்டுத் தானியங்கள் அறுவடை செய்யப்படும்.

"எங்களுக்குத் தேவையான உடைகளை நாங்களே எங்கள் நாட்டில் செய்து கொள்ளுகிறோம். இந்த நாட்டில் உள்ள உத்தியோகஸ்தர்களுக்கு ஊதியம் கிடையாது. பதவி மட்டும் உண்டு. உத்தியோகஸ்தர்களும் நிர்வாகிகளும் பொது ஜன வாக்கால் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இருபது வயதிற்கு மேற்பட்ட ஆண்களுக்கும் பெண்களுக்கும வோட் உரிமை உண்டு. ஆனால் கலியாணமாகிவிட்டால், புருஷனோ அல்லது மனைவியோ அந்த உரிமையை உபயோகித்துக் கொள்ளலாம். இருவரும் வோட்டை உபயோகிக்க முடியாது. இது உங்களுக்கு வியப்பாக இருக்கலாம். எல்லா மூளிகளுக்கும் மோழைகளுக்கும் வாக்குரிமை உண்டு. இருபது வயதிற்கு மேலே தான் மணம் முடித்துக்கொள்ள வேண்டும். மூளியும் மோழையும் கலியாணம் செய்து கொள்ளலாம. பெரும்பாலும் இது நேருவதில்லை. ஏனெனின் இந்நாட்டில் அகால மரணம் வெகுவாக நேருவதில்லை. அப்படி நேருமாயின், அனேகமாக மூளி ஒரு மோழையைத்தான் மணமுடித்துக் கொள்ளுவாள். தங்கள் தங்கள் குழந்தைகள் யாவரையும் ஒன்றுசேர்த்து அவர்கள் தனிக் குடும்பம் நடத்துவார்கள்.

"இரண்டு குழந்தைகளுக்கு அதிகமாகப் பெற்றிருக்கும் மூளியாவது மோழையாவது கலியாணம் செய்து கொள்ளலாகாது. மேலும் அவர்கள் மணமுடித்துக் கொள்ள விருப்பமும் கொள்ளுவதில்லை. தங்கள் குழந்தைகளைக் காப்பாற்றிக்கொண்டு, பொதுஜன ஊழியத்தில் அவர்கள் கலந்துகொண்டு மிகவும் ஊக்கத்துடன் வேலை செய்து உழைத்து வருவார்கள். அவ்வாறு செய்பவர்களுக்கு தனிக் கௌரவமும் பட்டமும அரசாங்கத்தாரால் அளிக்கப் பெறும். மூளிகளும் மோழைகளும் இந்த கௌரவப்பட்டத்தை அதிகமாக மதிக்கிறார்களே யல்லாமல், சுயநலத்தைக் கருதி மணம் முடித்துக் கொள்ளுவதில் தங்கள் கருத்தைச் செலுத்துவதில்லை.

"நாரிபுரியைத்தவிர, எங்கள் நாட்டில் 25 கிராமங்கள் இருக்கின்றன. கிராமங்களில் கலியாணம்ஏற்பட்டால், ஊரார் எல்லோரும் சேர்ந்து கலியாண தம்பதிகளுக்கு விருந்தளிப்பார்கள். கலியாணம் செய்து கொள்ளுபவர்களுக்கு யாதொரு செலவும் கிடையாது. கலியாணச் செலவு, ஊராரின் செலவு. நாரிபுரியில், இந்தக்கடமை ஒவ்வொரு வீதியையும் சேர்ந்ததாகும். யாரேனும் இறந்து போனால், வீட்டுக்கு ஒரு பேர்வழி, இறந்த வீட்டுக்கு வந்து ஆகவேண்டிய காரியங்களைச் செய்து, இறந்த வீட்டுக்கு, அன்றையதினம் ஊரார் அன்னம் அளிப்பார்கள். சாவு செலவும் ஊராரைச் சேர்ந்தது. ஊரார் அடிக்கடி ஒன்று சேர்ந்து கலந்து கொள்ளக்கூடிய சந்தர்ப்பங்களை நாங்கள் வளர்க்கப் பார்க்கின்றோம். களிப்பையும் துயரத்தையும் நன்மையையும் தீமையையும் எல்லோரும் பங்கிட்டுக்கொள்ள வேண்டுமென்பது எங்கள் அவா. எந்தக் கிராமத்தில் 20 வீடுகளுக்கு அதிகமா இருக்கின்றனவோ, அவைகளைப் பல துண்டுகளாக வகுத்து, அந்தந்த துண்டுகள் நன்மை தீமையில் கலந்து கொள்ளுமாறு செய்து வருகிறோம். சில கிராமங்களில் எல்லோரும் கலந்து கொள்ளுவார்களானால், அந்தக்கலப்பை அரசாங்கத்தார் தடை செய்வதில்லை. காரிய நிர்வாகத்துக்குச் சாதகமான, தேவையான துண்டுகளாகப் பிரிக்கவேண்டுமென்பது எங்கள் நோக்கமேயொழிய, ஜனங்களை எவ்வகையாலும் ஒன்று சேரவிடக் கூடாது என்பது எங்கள் நோக்கமல்ல.

"ஒவ்வொரு ஊரிலும் ஒரு பராசக்தி கோவில் உண்டு. அந்தக் கோவிலில் யாரும், விரத அனுஷ்டானத்துடன் செல்லுவார்களாயின் பூசை செய்யலாம். மாறிமாறி ஒவ்வொருவரும் பூசைசெய்ய வேண்டும். பூசை நிற்கலாகாது. கோவிலுக்குப் பக்கத்தில் ஒரு பெரிய மண்டபமிருக்கும். அங்கே வீரர்களின் செயல்களை விஸ்தாரமாகக் கூறும் புராணங்கள் படிக்கப்படும். ராமாயணம், பாரதம், இவைகளிரண்டும் படிப்பார்கள். ஏனைய புராணங்களை நாங்கள் இந்த நாட்டில் படிப்பதில்லை. ஏனென்றால், அவைகளில் பெண்ணினத்தை இழிவுபடுத்திக் கூறப்பட்டிருக்கிறது. தவிர, பெண்ணுக்கு உயர்ந்த பதவி கிடையாது என்று கூறும் நூல்களும் புராணங்களும் இந்த நாட்டில் தலை

காட்ட முடியாது. பாரதியாரின் புதிய ஆத்திச் சூடியை ஆரம்பத்தில் குழந்தைகள் படிப்பார்கள். இந்த நாடு அமையப்பெற்ற ஆரம்பத்தில், ஔவைக்கும் ஆண்டாளுக்கும் நாங்கள் ஆண்டு விழாக் கொண்டாடி வந்தோம். இப்பொழுது சுப்பிரமணிய பாரதியார்விழாவையும் ஆண்டு தோறும் கொண்டாடுகின்றோம்.

"பட்டினத்துப் பிள்ளையார் பாடல்களை இந்த நாட்டில் எவரும் படிக்கலாகாது என்பது கண்டிப்பானஉத்தரவு. கம்பன், புகழேந்தி, தாயுமானவர் எழுதிய நூல்கள் பரிசோதிக்கப்பெற்று, புதிய பதிப்புகள் இயற்றப்பட்டு வருகின்றன. நாட்டுக்கு ஆபத்து வருமாயின், எல்லோரும் போருக்கு ஆயத்தமா யிருக்கவேண்டும். தாய்மார்களான எங்களுக்கு, எங்கள் குழந்தைகளான உலகமக்களைக் கொன்று, ரத்தம் சிந்தவேண்டும் என்ற ஆசை கிடையாது. நாங்கள் காந்தியின் தத்துவத்தை வெகுதூரம் வரையில் ஒப்புக்கொள்ளுகிறோம், ஆனால் எங்கள் சுதந்திரமும் மானமும் பறிபோதல் ஆகும்படியான நிலைமைக்கு வருமாயின், அதற்காக எவ்வளவு ரத்தம் சிந்தவேண்டுமாயினும் தயாராயிருக்கின்றோம். எங்களைச் சுற்றியிருக்கும் மக்களின் மனோபாவம் மாறுமாகில், போரும் ரத்தம் சிந்தவேண்டிய சந்தர்ப்பமும் ஏற்படமாட்டா. அத்தகைய மனப்பக்குவத்தை அவர்களிடம் ஆவலுடன் நாங்கள் எதிர்நோக்கி நிற்கின்றோம்.

"அன்னியர்களுடன் நாங்கள் பகைமை நோக்கம் கொண்டு வாழவில்லை. வாழப்போவதுமில்லை. ஆனால் அவர்கள் எங்களிடம் பகைமை கொண்டு எங்களைத் தாக்குவார்களாகில், அதைக்கண்டு பயந்து,புறமுதுகு காட்டி ஓட மாட்டோம். ஓடப்போவதுமில்லை. நாட்டின் நிலவரங்களை நேரே தெரிந்து கொள்ளவும், அயல் நாட்டுச் செய்திகளை அறிந்துகொள்ளும் பொருட்டும், நாரிபுரியிலிருந்து வாரப்பத்திரிகை யொன்றை அரசாங்கத்தார் வெளிப்படுத்துகின்றார்கள். வீதிக்கு ஒரு பத்திரிகை இனாமாக அனுப்பப் பெறும். இதற்கான செலவு பொதுப் பணத்திலிருந்து ஈடு செய்யப்படும். தேவையான நூல்களை நாங்களே அச்சிட்டுக் கொள்ளுகிறோம்.

"எங்கள் நாட்டில் இரண்டு நாடகசாலைகள் உண்டு. ஒன்று நாரிபுரியில்; மற்றொன்று மத்தியஸ்தமாக இருக்கும் ஒரு இடத்தில். விழாக் காலங்களில், மூன்று நாட்களுக்கும் சில சமயங்களில் ஒரு வாரத்துக்கும் நாடகங்கள் நடத்திக் காண்பிக்கப்படும். பெண் விடுதலையைப் பற்றிய நாடகங்கள் என்றுமட்டும் எண்ண வேண்டாம். மனித வர்க்கத்தின் உயரிய உணர்ச்சிகளை எடுத்துத் தெளிவாகக் காட்டும் நாடகங்கள் நடத்திக் காண்பிக்கப் பெறும். அயல் நாட்டில் பெண்கள் தவிக்கும் நிலையை நன்ருகக் காண்பிக்கும் நாடகம் ஒன்று மட்டும் சிறப்பாக ஆண்டுதோறும் காண்பிக்கப்பட்டு வருகின்றது. ஒவ்வொரு வீதியிலும் ஒரு குஸ்திக் கூடமிருக்கும். பயிர்த்தொழில் வேலையில்லாத நாட்களில், யாவரும் குஸ்தி செய்ய வேண்டும். ஆண் ஆணோடு; பெண் பெண்ணோடு. சில சமயங்களில் ஆணும் பெண்ணும் குஸ்தி போடுவதுண்டு.

"இந்த நாட்டிலே நூறு போலீஸ் சேவகர்களும் நான்கு அதிகாரிகளு மிருக்கிருர்கள். நாட்டின் தலைமை நிர்வாகம் நடத்துவதற்கு ஒருவர் (பெண்). அவருக்கு உதவியாக ஆறு பேர்கள். இந்தக் கூட்டத்தில் ஆண்களும் உண்டு. இந்த ஏழு பேர்களும் பொது ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். ஏழு பேர்கள் தங்களுக்குள் ஒருவரைத் தலைமையாகத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுவார்கள். இவர்களுடைய நிர்வாக காலம் ஐந்து வருஷம். ஐந்து வருஷங்களுக்கு ஒரு முறை தேர்தல் நடைபெறும். இருபது வீடுகளுக்கு ஒரு பஞ்சாயத்து. பஞ்சாயத்து அங்கத்தினர்கள் மூன்று பேர்கள். அவர்களும் அந்த இருபது வீட்டுக்காரர்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்கள். எல்லா சச்சரவுகளும் அனேகமாய் வீதி பஞ்சாயத்திலேயே தீர்ந்து விடும். இல்லாவிட்டால் பொது பஞ்சாயத்தில் தீர்ந்துவிடும். பொது பஞ்சாயத்துக்கள் (நாடக சாலைகளைப் போல) இரண்டு உண்டு. அவைகளுக்கு அப்பீல் செய்து கொள்ளலாம். அங்கும் தீராவிட்டால், நிர்வாகக் கூட்டத்தார் தீர்த்து வைப்பார்கள். இவர்களுடைய தீர்ப்புத்தான் உறுதி.

"கடைசி வரையிலும் வருகிற வழக்கை நாங்கள் பார்த்ததில்லை. ஏனெனில், கோணல் புத்தியுடன் ஒருவர்

மற்றவருடன் சண்டை பிடிக்க வேண்டும் என்ற துர்ஆசை இந்த நாட்டில் அதிகமாகக் கிடையாது. எங்களுடையது புதிய ஆட்சி முறையாதலின், நாங்கள் அவ்வப்போது நேரும் தவறுதல்களை கண்டுகொண்டு, எங்கள் வாழ்க்கையைத் திருத்தி அமைத்துக் கொண்டு வருகின்றோம். விஸ்தாரமாக இருக்கும் நாடுகளில் எங்கள் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வர முடியாது என்பது எங்களுக்குத் தெரியும். ஆகையால் எங்கள் வாழ்க்கையையும் திட்டத்தையும் உலகத்தாருக்குப் பிரசாரம் செய்ய எங்களுக்கு ஆசை கிடையாது. எங்களைச் சுற்றியிருக்கும் உலகம் மாறுதலையடைந்து, முன்னேறி வருமாகில், நாங்கள் எங்கள் திட்டத்தில் சில பகுதிகளை மாற்றிக் கொள்ள நேரும் என்பதை நங்கள் அறிவோம். அத்தகைய மாறுதல் காலத்தை மிக்க ஆசையுடன் எதிர்பார்க்கின்றோம். நான் சொல்ல வேண்டியது முடிந்து போய்விட்டது. நீங்கள் இனிமேல் உறங்கலாம. உங்களிஷ்டம் போல, நாளை விடியற் காலமே முதல், இந்த நாட்டைச் சுற்றிப் பார்த்து, உங்கள் அனுபவத்தையும் யோசனையையும் என்னிடம் சொல்லுவீர்களாகில், அதற்காக நான் உங்களுக்குப் பெரிதும் கடமைப் பட்டவளாவேன்.''

அத்தியாயம் - 15

களிப்பு

கோதையார் தாம் சொல்ல வேண்டியதைச் சொல்லி முடித்துக் கொண்டார். எங்களுக்கு உறக்கம் வரவும் இல்லை. கோதையார் சொல்லியது எங்களுக்கு மிகவும் இனிப்பாயிருந்தது. குழந்தை அரசு தனது அனுபவத்தை வளர்த்து வரும் வகையைக் கேட்ட எங்களுக்கு மிகவும் ஆனந்தமுண்டாயிற்று. இந்த நாட்டை முழுவதும் சுற்றிப் பார்த்து, அதன் பலவித விமரிசைகளையும் அனுபவிக்க வேண்டும் என்ற ஆவல் எங்களைக் கவ்விக் கொண்டது. எங்கள் ஆவல் பூர்த்தியாகுமளவும், எங்களுக்கு மனத் திருப்தியும் உறக்கமும் உண்டாகுமா? எனவே, சிறிது நேரம் ஒன்றும் பேசாமல் மௌனமாயிருந்தோம். பின்னர், எங்களுக்கு படுக்கை வசதிகள் அளிக்கப்பட்டன.

தூக்கம் வராமல், நாங்கள் படுக்கைகளில் படுத்துக் கொண்டோம். எல்லாச் சங்கதிகளும் ஒரு சமயம் முடிவடைய வேண்டாமா? அது போல, எங்கள் விழிப்பும் முடிவடைந்து, நாங்கள் தூங்கிப் போனோம்.

விடியற்காலமே, நாங்கள் கண் விழித்துக் கொள்வதற்கு முன்னர், மாணிக்கக் கோதையாரும் அவரது தாயாரும் எழுந்திருந்து வீட்டு வேலைகளைச் செய்து கொண்டிருந்தார்கள். நாங்கள் எழுந்திருந்ததும், முகங்களைக் கழுவிக் கொண்டு, வீட்டைச் சுத்தமாகப் பெருக்கி மெழுகினோம். கோதையார் அதை ஆட்சேபிக்கவேயில்லை. பின்னர், தண்ணீர் கொண்டு வந்து கொட்டினோம். "ஊருக்கு வெளியே போய், நீராட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் ஆழமான குளத்தில் ஸ்நானம செய்யலாம்; அங்கே நன்றாக நீந்தலாம்" என்று கோதையார் சொன்னார்.

அவ்வாறே அங்கு சென்றோம். அந்தக் குளத்தில் சிறுர்களும் மற்றவர்களும் அநேயாசமாய் மீன் குஞ்சுகளைப் போல நீந்திக் கொண்டிருப்பதைக் கண்டோம். இதைப் பார்த்தவுடனே, பூபதி கொம்மாளம் அடைந்தான். பொத்தென்று குளத்தில் குதித்தான். நானும் கூடக் குதித்தேன். ஒரு சமயத்தில், தோழன் ஒருவன் ஒரு காரியம் செய்ய, மற்றவன் சும்மாயிருத்தல் அழகாமா? இருவரும் நன்றாக நீந்தினோம். பூபதி, பலரும் வியக்குமாறு நீரிலே பல வேடிக்கைகள் செய்தான். ஆசை தீரும் வரையில் நாங்கள் நீந்தினோம். பிறகு கரை சேர்ந்து, கோதையார் வீட்டுக்கு வந்து சேர்ந்தோம். நல்ல, சுத்தமான பழைய சாதம் எங்களுக்காகக் காத்துக்கொண்டிருந்தது. நல்ல தயிரும் சேர்த்து நேர்த்தியான ஊறுகாய் உள்பட, நாங்கள் எங்கள் உள்ளம் திருப்தி யடையுமாறு சாப்பிட்டோம். பிறகு, கோதையாரின் அனுமதியைப் பெற்றுக் கொண்டு, நாரிபுரித் தெருக்களில் சுற்றப் புறப்பட்டோம்.

தெருக்களில் ஆடவர்களும் பெண்டிர்களும் சிறுர்களும் குழந்தைகளும் திட சரீரத்துடனும் உற்சாகத்துடனும் தங்கள் தங்கள் அலுவல்களின் பேரில் செல்லுவதைப்

6

பார்க்க, எங்கள் கண்கள் குளிர்ந்தன. வாழ்க்கையில் இவ்வளவு உற்சாகம் இருந்தாலொழிய, அந்த வாழ்க்கை எதற்குப் பயன்படும ?

• தெருக்களைச் சுற்றிக் கொண்டே வந்தோம். அந்த நாட்டின் மக்களைக் காணக்காண எங்கள் உடலும் உள்ளமும் ஒருங்கே பூரித்தன. தேக சௌக்கியம் ஒன்றே மக்களுக்குப் போதுமான தாகும். அந்த ஒன்றைக் குறிக் கொண்டு, அவர்களுடைய வாழ்க்கைத் திட்டம் அமைக்கப் பட்டிருப்பதின் நற்பயனை, நாங்கள் பார்த்த பின்னரும், அந்தத் திட்டத்தின் பேரில் எங்களால் குறைகூற முடியுமா ? தேக சௌக்கிய முள்ளவர்களின் பேச்சுத் தோரணையே வேறு. அற்பத்தில் அவர்கள் புத்தி எளிதிலே செல்லுவதில்லை. நலல ரத்த முள்ளவர்கள் காய மடைந்தாலும, அவர்களுடைய காயம் எவ்வளவு எளிதிலே குணமடைந்து விடுகிறது ! இதை நாம் பார்த்திருக்கிறோமல்லவா ? உடமபிலே நோயில்லாமல், உடம்பிலே தெம்பும், செய்வதற்கு வேலையும், உண்பதற்கு உணவும், சல்லாபத்துக்கு ஜனங்களும் இருந்துவிட்டால், ஜன சமூகம் எவ்வளவு நேர்த்தியாக, கட்டுப்பாட்டுடன் முன்னேறிச் செல்லும் ! கோடைக்கானலிலும் உதகமண்டலத்திலும் மலையிலே விளையாடும் வெள்ளைக்காரக் குழந்தைகளின் கன்னங்களில் ரோஜாச் சிவப்பு கொம்மாளம் போடுகிறதே ! ஏன் ? தேக சௌக்கியத்தினுலும் நிர்ப்பயமாய் வளர்வதினுலும், சாப்பிடப் போதிய நேர்த்தியான ஆகாரமிருப்பதனுலேயே. குழந்தைகள் இவ்வாறு வளராவிட்டால், பின் ஆயுளில் அவைகள் தவித்துப்போக மாட்டாவா ?

நாங்கள் குழந்தைகள் காண்பிக்கும் உற்சாகத்திலே ஈடுபட்டுப் போனேம். இவ்வாறு போய்க்கொண்டிருக்கையில், கோதை நாட்டு அரசியல் நிர்வாகி ஆபீஸ் வந்து அடைநதோம். அங்கு ஒரு வழக்கு அப்பீலுக்கு வந்திருப்பதாகக் கேள்விப்பட்டோம். பார்ப்பதற்கு ஆசை. விசாரணையை பார்க்க விடமாட்டார்களோ என்று சந்தேகம். இந்த சமயத்தில் மாணிக்கக் கோதையார் அவ்விடம் வருவதைக் கண்டோம். எங்கள் நோக்கத்தை அறிந்தவராய் அவர்

எங்களையும் ஆபீஸினுள்ளே அழைத்துச் சென்று எங்களுக்கு இருப்பிடம் தந்தார். நிர்வாகச் சபையாரை வணங்கிய பின்னர், நாங்கள் எங்கள் ஆசனத்தில் அமர்ந்தோம்.

வழக்கு பின்வருமாறு:—இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்னர், இருபது வயதுள்ள ஆண்பிள்ளை ஒருவன் அன்னிய நாட்டிலிருந்து கோதைத் தீவுக்கு வந்தான். அந்தக் காலத்திலும் சரி, இக்காலத்திலும் சரி, அவன் பெண் விடுதலையில் மிகுதியும் நாட்டங்கொண்டு திட நம்பிக்கையுடன் உழைத்து வருபவன். இந்த நாட்டுக்கு வந்து இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர், அவனுக்குக் கலியாணமாயிற்று. அவன் குடும்பம் நடத்தி வந்தான். இவ்வாறு அவன் வாழ்வு நடத்தி வருகையில், ஒரு நாள் அவனிருக்கும் வீதியில், பத்து வயதுள்ள ஒரு பையனுக்கும் அதே வயதுள்ள பெண்ணுக்கும் ஏதோ சிறிய சங்கதியில் மனஸ்தாபம் ஏற்படவே, அவர்களிருவரும் சண்டை போட்டுக்கொண்டு, மண்ணில் புரண்டு கொண்டிருந்தார்கள். அதை அந்த மனிதன் பார்த்துக்கொண்டு இருந்தும், சண்டையை விலக்கி விடாதது மல்லாமல், "இந்த நாட்டிலே தான் பெண்ணுக்குச் சலுகை. பெண்கள், கட்டை துளிர்த்துப் போய், ஆண் சிங்கங்களோடு மல்யுத்தம் செய்யப் புறப்பட்டு விடுகின்றன. அடே பையா, அவளைத் தலை மயிரைப் பிடித்து, நன்ருக உதை கொடு" என்று சொன்ஞனும்.

இந்தக் குற்றம் வீதிப் பஞ்சாயத்திறல் விசாரிக்கப்பட்ட பொழுது, அவன் சரியாகப் பதில் சொல்லாமல், திமிருடன் இருந்தானும். அந்தக் குற்றமும் சேர்ந்து, நிர்வாகிகளின் சபைக்கு வந்துவிட்டது. அவன் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டான். அவன் ஒப்புக்கொண்டாலும், தயையுடன் விட்டுவிடப் படவில்லை. அவன் செய்த குற்றம் கோதைத் தீவின் அரசியல் வாழ்க்கைத் தத்துவத்தின் ஆணி வேரை, கோடாலி கொண்டு வெட்டத் துணிவதான ஒன்று என்று நிர்வாகிகள் அபிப்பிராயப்பட்டு, அவனை ஒரு காதை அறுத்து ஒரு வருஷம் சமையல் வேலையை, நடுவிலே கத்தரிப்பில்லாமல் அவன் வீட்டிலேயே செய்துவர வேண்டும் எனத் தீர்ப்புச் சொன்னுர்கள்.

விரைவில் அவன் சிட்சை பூர்த்தி செய்யப் பட்டது. பெண்களை சிறிது கெளரவக் குறைவாகப் பேசினுலும்

அந்த நாட்டார் அனைவரும் அதைப் பெரிதாகக் கொண்டு விடுகிறார்கள். அவர்களுடைய வாழ்க்கைத் தத்துவமே பெண் சுதந்திரத்தைச் சுற்றி நின்றுகொண்டிருக்கும் பொழுது, அவர்கள் மேற்கூறிய குற்றத்தைப் பெரிதாகக் கொள்ளாமலிருக்க முடியுமா? மேலே கூறப்பட்ட சம்ப வத்தை, கோதை நாட்டுச் சொற்களிலேயே நான் சொல்லி யிருப்பேன். ராமா! அது உனக்கு எளிதிலே விளங்காது என்று எண்ணி, சாதாரண நடையில் சொன்னேன். பின் னர் நாரிபுரி முழுதையும் சுற்றிப் பார்த்தோம் எங்கள் மன துக்கு வெறுப்பா யிருக்கக் கூடியது ஒன்றையும் நாங்கள் காணவில்லை. பள்ளிக்கூடங்களுக்குச் சென்றோம்; மற்றும் சிறிய தொழிற்சாலைகளுக்கும் போனோம். எங்கும் உற் சாகம் நிலவிற்று. எங்கும் வேலை சுறுசுறுப்புடன் நடை பெற்று வந்தது. இவ்வளவு நேர்த்தியாக வேறு எங்கும் காரியங்கள் ஒழுங்காக நடைபெற்று வருவதை நாங்கள் பார்த்ததில்லை. ஒரு ஸ்தாபனத்தில் சிப்பந்திகள் நிர்வாகி களின் பேரில் பொறாமை கொள்ளுவதும் நிர்வாகிகள் ஏனை யோரின் பேரில் வெறுப்படைவதும் சாதாரண நிகழ்ச்சி யாகும். அத்தகைய நரநரப்பை நாங்கள் துளிக்கூட இந்த நாட்டில் பார்க்கவே யில்லை.

நாங்கள் தொழுவிலிருந்து அவிழ்த்து விடப்பட்ட காளைகளைப்போல, கண்டவிட மெல்லாம் திரிந்தோம். எங்கே போனால் என்ன? நாங்கள் நாரிபுரிக்குப் புதிது என்று எங்களைப் பார்த்தவர்களுக்கு எல்லாம் நன்றாகத் தெரியும். ஆனால், அவர்கள் எங்களை வெறித்துப் பார்க் கவே இல்லை. எவ்வித பரபரப்பையும் அவர்கள் தங்கள் முகங்களில் காண்பிக்கவே இல்லை. நம்முடைய கிராமங்க ளில் ஒரு புதிய ஆள் வந்தால், அவனைச் சுற்றிக் கூடிக் கொள்ளுகிறார்களே! அதுவும் வெள்ளைக்காரனாக இருந் தால், சொல்லி வைத்ததுபோல, திருவிழாக் கூட்டத்தைப் போல கூடிவிடுமே! இத்தகைய அநாகரிகத்தை நாங்கள் நாரிபுரியில் காணாததால், கோதைத்தீவின் கல்விமுறை, மிகுதியும் கண்ணியமானதாகவும் நாகரிகமுள்ளதாகவும் இருக்கவேண்டும் என்று முடிவுக்கு வந்தோம்.

சோர்ந்த முகம், குழிந்த கண்கள், குச்சிபோன்ற கைகள், சோடு தட்டும் கால்கள், அசடு வழியும் பேச்சு,

ஆசையும அற்பத்தனமும் நிறைந்திருக்கும் பார்வை, உடலைப் பதறச் செய்யும் பயம்—இவைகளை நாங்கள் நாரி புரியில் காணுததது, எங்கள் உள்ளத்தில் குதூகலத்தை உண்டாக்கிற்று. இந்த நாட்டில திமிர் பிடித்த அன்னி யர்களும் எமனும் ஆட்சி செய்ய முடியாது போலிருக்கி றதே என்று பூபதி, மிக்க களிப்போடு சொன்னன். அப்ப டித்தான், எனக்கும் தோன்றுகிறது என்றேன்.

வாழ்க்கையில் ருசியும், செய்யும் காரியங்களில் சிரத் தையும், முன் யோசனையோடு திட்டம் போட்டு, ஒவ் வொன்றையும் கிரமமான முறையில் ஆக்கும் தன்மையும, சுதந்திரதாகமும், சந்தேகம் துளியும் உட்புகாத அறிவும் அல்லவா, இவர்களை இப்படி அழகாக மாற்றியிருக்கின் றன என்று தனது வாய்க்குள்ளாகவே சொல்லிக்கொள் ளுவதைப் போல, பூபதி சொன்னன். ஆனல் அவன் சொன் னது பக்கத்து வீதிக்குக்கூட தாராளமாகக் கேட்கும். நாங்கள் பார்த்த காக்ஷிகளெல்லாம், களி வெறியைப் போன்ற மயக்கத்தை அவனுக்கு உண்டாக்கியிருக்கவேண் டும். இலலாவிட்டால், அவன் வாய்க்குள்ளே சொல்லிக் கொண்டது மாதிரி இருந்தது, பக்கத்து வீதிக்கு கேட்கும் படியான அவ்வளவு சத்தத்தில் வந்திருக்குமா?

உண்மையிலேயே, நாரிபுரியை துளைத்துத் துளைத்துப் பார்ததுவந்த நாங்கள் உன்மத்தர்களாக (பைத்தியம் பிடித் தவர்களாக) ஆகிவிட்டோம் என்று கூடச் சொல்லலாம். ‘ வாழ்ந்தாலும் இப்படி ஒழுங்காகவும் இவ்வளவு சந்தோ ஷத்தோடும் இப்பேர்ப்பட்ட ஒற்றுமையோடும் வாழ வேண்டும். இல்லாவிட்டால் வாழ்வைக் கேலி செய்வது மாதிரி எதற்காக வாழவேண்டும்? ஆறிலும் சாவு, நூறி லும் சாவு என்று படாடோபமாகப் பேசிவிட்டு, ஆறிலே சாக அஞ்சும் மனிதப் பதர்களைப்போல வாழவது மனிதன் என்ற சொல்லுக்கு எவ்வளவு அவமானத்தைக் கொண்டு வந்து வைக்கிறது. இந்த அவமானம கண்ணில் படாமல் வாழும் மனிதக்கூட்டத்தை என்னென்று சொல்வது ’ என்று பூபதி, நொந்துகொண்டே சொன்னன்.

அவனுக்கு நமது நாட்டின் அடிமை நிலைமை நினைவு வந்துவிட்டது என்று தெரிந்துகொண்டேன். ‘என்ன செய்

வது என்று எனக்கும் தெரியவில்லை. ஆண்டவனிடத்தில் எல்லா பொறுப்புகளையும் ஒப்படைத்துவிட்டு அவர்கள் உறங்குகிறார்கள். அவர்களுடைய ஆண்டவனோ, பால் கடலில் பள்ளிகொண்டு, ஆனந்தமான நித்திரை புரிகின்றார். ஆண்டவனும் மனிதனும ஏக காலத்தில் தூக்கத்தில் ஆழ்ந்துவிட்டால், அசுரர்களின் பாடு கொண்டாட்டம் தான்' என்று நான் சொன்னேன்.

'இந்த நாட்டில், நாங்கள் அப்படி உறங்குவதில்லை' என்று மாணிக்கக் கோதையார் சொன்னது, எங்கள் காதில் விழுந்தது. நானும் பூபதியும அசட்டுச் சிரிப்புச் சிரித்தோம். நாரிபுரியைச் சுற்றிப் பார்த்தீர்களா என்று கோதையார் கேட்டார். இன்னும் பூர்த்தியாகவில்லை என்றோம். நாங்கள் மூவரும் கோதையார் வீட்டுக்குப் போனோம்.

அத்தியாயம் - 16

ஆண்டாள் பெருநாள்

இரவில், நாங்கள் எதையெல்லாமோ பற்றி வம்பளந்து கொண்டிருந்தோம். கோதைத்தீவில் வம்பு அளப்புக்கூட இருக்க முடியுமா என்று சந்தேகப்படவேண்டாம். மனிதர்கள் என்ற ஜீவராசிகள், எங்கே இருந்தாலும் சரி, அங்கே வம்பளப்பு இருக்கத்தான் செய்யும். எப்பொழுதும், இடைவிடாமல், மூதுரைகளையும் ஆராய்ச்சிப் பேச்சுகளையும் மட்டும் பேசிக்கொண்டிருக்க முடியாது. நரம்புகள் முறுக்கேறிப்போய், உயிருள்ள உடம்பையும் சவத்தைப்போல செய்து விடும்.

மேலும் மாணிக்கக் கோதையாரிடம் எனக்கு, பிரியத்துக்கு மீறிய உணர்ச்சி துவக்கத்திலேயே உண்டாயிற்று என்று சொன்னேனே! காதலர்கள் இருவர் சேர்ந்தால், நாகரிகத்தின் ரஸத்திரட்டைப் போன்ற கனிமொழிகளைத் தான் தங்கள் சமபாஷணையில் உபயோகிப்பார்கள் என்பது இல்லை. காதலி, தனக்கு குதூகலம் உண்டாக்கக் கூடிய ஒன்றைச் சொல்லிவிட்டால், காதலன் அவளைக் கன்னத்தில் இடித்து, 'சீ, நாயே' என்று ஹத்து மீறி உளறுவான்.

இதைப்போலவே, காதலியும், காதலனைப் பார்த்து, 'பைத்தியமே' என்று பரிகசிப்பாள். இந்த சந்தர்ப்பங்களில், நாய் பைத்தியம் என்ற சொற்களை, நாகரிகத்தராசில் வைத்து எடைபோட முடியாது. இவைகள், காதலர்களின் உள்ளப் பூரிப்பையும் குதூகலத்தையும வெளிக்காண்பிக்கும் சொற்களானபடியால், அவைகள் விலையில்லாத மாணிக்கங்கள்.

இவ்வாறு நான் சொல்லிவருவதால், ராமா! தவறாக எதையும் எண்ணிக்கொள்ளாதே. எனக்கும் கோதையாருக்கும் இடையே இருக்கும் காதல், மேலே சொன்ன நிலைமைக்கு வந்துவிட்டதாக எண்ணிக்கொள்ளாதே. கோதையாரிடம் எனக்கு அலாதியான உணர்ச்சி என்றேன். அவருக்கும் என்னிடம் இதேமாதிரியான உணர்ச்சி, இதே அளவில் இருக்கிறதா என்பதை திட்டமாகத் சொல்லமுடியாது. இந்த நாட்டில், பெண்கள் கூச்சப்பட்டுக்கொண்டு, ஆண்பிள்ளைகளோடு பழகாமலிருப்பதில்லை. சில சமயங்களில், அவர்கள் ஆண்பிள்ளைகளின் கைகளைத்தொட்டுக்கொண்டுகூட பேசுகிறார்கள். இந்த நெருக்கம் சகஜமான நெருக்கமாக இந்த நாட்டில் இருக்கும் பொழுது, அதை, காதலின் சின்னம் என்றும் ஆசையின் அறிகுறி என்றும் கொள்ளுவது தவறாகும்.

இருந்தாலும், எந்நிலைமையிலும், பழகின கண்ணுக்கு, உண்மை கண்டிப்பாகத் தெரிந்துபோகும். எவ்வளவு படாடோபத்தோடு பேசினாலும் பக்காத்திருடனை, பழகின போலீஸ்காரன் தெரிந்து கொள்ளுவான். வைரமோதிரம், விசிறி மடிப்பு சரிகை வேஷ்டி, மோட்டார் கார் சகிதமாக (பக்கத்திலே லோட்டாக்கள் புடைசூழ) இன்ஸால்வெண்ட் மைனர் வந்து இறங்கினாலும், பருந்துப் பார்வை கொண்ட, பழகின லேவாதேவிக்காரனுக்கு, வெளிச்சம் போட்டதுபோல, சட்டென்று உண்மை துலங்கி விடும். பெண்களுக்கே இந்த நாட்டில் கூச்சமில்லாத பொழுது, எனக்கு ஏன் கூச்சம் இருக்கவேண்டும்? நான் கண்டதை ஏன் சொல்லக்கூடாது?

கடைக்கண்பார்வை தான் மனசின் முழு நோக்கமாகும். ஒரு பெண்ணோ, பணக்காரனோ, கடைக்கண்ணால் பார்ப்பது

தான், மற்றவருக்கு பாக்கியம். வெறிபிடித்தால் தான் மனிதர்கள் முழுக்கண்ணோடு பார்ப்பார்கள். அப்படிப் பார்ப்பதுகோபத்துக்கும அலுப்புக்கும் அடையாளமாகும். கோதையார் என்னைக் கடைக்கண்ணால் பார்த்து, தனது முகத்தை வைத்துக்கொள்ளும் தன்மையிலிருந்தது, அவர் என் விஷயத்தில், தேவைக்கு மேலான கவனம் செலுத்துகிறார் என்று தெரிந்து கொண்டேன். பார்வைக்கு முழு முட்டாளைப்போலத் தோன்றும் பூபதியும் இதை எப்படியோ தெரிந்து கொண்டுவிட்டான். அப்பொழுது தான், எனக்கு, ஒரு உண்மை புலனாயிற்று. காதல் என்பது ரகசியமாக இருக்கமுடியாது என்றும் அது சமயசந்தர்ப்பத்தை உணராமல், பொத்துக்கொண்டு வெளியே வரும என்றும் நான் தெளிவாகத் தெரிந்துகொண்டேன். புதையலைக் கண்டெடுத்ததுபோல. காதலர்கள் ஒருவரையொருவர் அடிக்கடி, திடுதிப்பென்று பார்ப்பது கண்கொள்ளா வசீகரக் காக்ஷியாகும்.

கதையை வளர்த்துவது எதற்காக? எனக்கும் மாணிக்கக் கோதையாருக்கும் இடையே, அழகான நெருக்கம் உண்டாகிவிட்டது. ஆகவே, நாங்கள் வம்பளக்காமல் இருக்கமுடியுமா? பூபதி பிரசன்னமாயிருந்தால் என்ன, கோதையாரின் தாயார் பக்கத்திலே இருந்தால் என்ன?

காதல் நர்த்தனம் செய்தால் என்ன, கவிதை உணர்ச்சி வழிந்தோடினால் என்ன, குதூகலம் காட்டாற்று வெள்ளத்தைப் போல கரைபுரண்டு ஓடினால் என்ன? தூக்கம் மட்டும் எப்படியோ, சந்தடி செய்யாமல் வந்து விடுகிறது. நாங்கள் தூங்கிப் போய்விட்டோம்.

காலையில் நாங்கள் கண் விழித்துக்கொள்ளும் சமயத்தில், திடீர் திடீரென்று பீரங்கி வெடிச் சத்தம் கேட்டது. பட்டாளம் ராணுவப் பயிற்சி செய்கிறதா? அப்படியானால் அதைப் போய்ப் பார்க்க வேண்டும் என்று பூபதி சொன்னான். 'இது ராணுவப் பயிற்சி வெடி அல்ல; இன்றைக்கு, ஆண்டாள் பெருநாள். கோதைத்தீவு என்ற கருத்துக்கும் கற்பனைக்கும ஆண்டாளின் மூர்த்தியே முக்கிய காரணமாகும். பெண் விடுதலைக்கு, மூல ஆவேசமாக விளங்கும் ஆண்டாளின் பெருநாளை, கோதைத் தீவில்,

நாங்கள் கொண்டாடி வருகிறோம். இன்று மாலை, நகர மண்டபத்தில் கூட்டம் நடைபெறும். அப்பொழுது பூங்காவன மல்லிகை ஆண்டாளின் பெருமையை எடுத்துப் பேசுவார். நிர்வாகிகளில் ஒருவரான ஷண்பக ஔவையார் தலைமை வகிப்பார்கள். நீங்களும் அந்தக்கூட்டத்துக்கு வரலாம்' என்று மாணிக்கக் கோதையார் சொன்னார்.

பூங்காவன மல்லிகை பேசப்போகிறார் என்று மாணிக்கக் கோதையார் சொன்னதும் நான் பூபதியின் முகத்தைப் பார்த்தேன். சந்தோஷச் செய்தியைக் கேட்டவனுடைய முகம் பொலிவும் மலர்ச்சியும் அடைவது இயற்கை. அத்தகைய பொலிவையும் மலர்ச்சியையும் அவனது முகத்தில் அப்பொழுது நான் கண்டதாக எனக்குத் தோன்றிற்று. இதைத்தவிர வேறு எவ்வித குதூகலச் சின்னத்தையும் அவன் வெளிக் காண்பிக்கவில்லை.

பகல் பொழுதை எப்படியோ கழித்தோம். மாலை எப்பொழுது வரப்போகிறது என்று ஆவலுடன் எதிர் பார்த்துக் கொண்டிருந்தோம்.

மாலையும் வந்தது. நாங்களும் நகரமண்டபத்துக்குப் போனோம். கூட்டம் ரொம்ப ஜாஸ்தி. எள் போட்டால், எள் கீழே விழாது. ஆனால் கூட்டத்தில், அமைதி குடி கொண்டிருந்தது. கூட்டத்திலிருந்த எல்லாரும் தங்கள் மூச்சை அடக்கிக்கொண்டு யோகாப்பியாசம் செய்வது மாதிரி தோன்றிற்று. நாரிபுரத்தில், விந்தைகளுக்கு குறைவில்லை. எதைப் பார்த்தாலும், ஆச்சரியமாகத்தான் இருக்கிறது. ஆச்சரியம், ஆச்சரியம் என்று அடிக்கொருதரம் சொல்லுவதில் என்ன லாபம்?

உயர்ந்த பீடத்தில் ஷண்பக ஔவையார் வீற்றிருந்தார். அவருக்கு வயது இவ்வளவு ஆயிற்று என்று சொல்ல முடியவில்லை. மூப்பு தட்டாத அவருடைய முகத்திலிருந்து, எவ்வாறு வயதைக் கணிப்பது? தலைக் கூந்தலும கன்னங்கரேல் என்று இருந்தது. எமனைத் தோலவியடையச் செய்த நாரிபுரி என்று என் மனதில சொல்லிக் கொண்டேன். இருந்தாலும, ஷண்பக ஔவையாருக்கு எண்பது வயதுக்கு மேல் ஆகிவிட்டது என்று பிறகு கேள்விப்பட்டேன்.

குறித்த நேரத்தில், ஔவையார் எழுந்திருந்து, 'பெண்களுக்கு குலவிளக்காகத் திகழும் ஆண்டாள் திரு அவதாரம் செய்த நாள், இந்த நாள். இந்தப் பெருநாளை, நாம் இன்று கொண்டாடுகிறோம். இப்பொழுது, பூங்காவன மல்லிகை, ஆண்டாளின் வாழ்க்கையைப் பற்றி பேசுவார்' என்று கணீர என்ற குரலில் சொன்னார். குரல் கணீர் என்று இருப்பதற்கு கேட்பானேன்? பல் போனால் தானே, சொல் போகும், குரலும் அவலக்ஷணமாகும்? ஔவையாரின் பல் வரிசைகளின் 'பாலிஷ்' இன்னும் கெட்டுப் போகவில்லையே!

பூங்காவன மல்லிகை எழுந்திருந்தார். கூட்டத்துக்கு வணக்கம் செய்தார்; அவர் பேசினதாவது:— 'நிர்வாகிப் பெரியோர்களே! சகோதரிகளே! சகோதரர்களே! இன்றைய தினம், ஆண்டாள், பெண் விடுதலையின் பொருட்டே, மண்ணில் தோன்றிய திருநாள். இதுவே, கோதைத் தீவாருக்கு, பெருநாள் ஆகும்.

'ஆண்டாள் அவர்களைப் பற்றி கர்ண பரம்பரையாக வுள்ள கதையை முதலில் சொல்லுகிறேன். அந்தக் கதையை நாம் அப்படியே ஏற்க முடியாததற்கு காரணத்தைக் குறிப்பிட்டுவிட்டு, ஆண்டாளின் உண்மையான வாழ்க்கை வரலாறு இதுவாக இருக்கலாம் என்று என் கருத்தையும் சொல்லுகிறேன்.

'கர்ண பரம்பரைக் கதை இதுதான். பாண்டிய நாட்டிலே, ஸ்ரீ வில்லிபுத்தூர் என்று ஒரு ஊர். அந்த ஊரில் விஷ்ணு சித்தன் என்ற பெரியாழ்வார் வாழ்ந்துவந்தார். அவர் மிகச் சிறந்த விஷ்ணு பக்தன். அவர் தம்மை தாயாக பாவித்துக்கொண்டு, கண்ணனைப்பற்றி, அருமையான கவிகளை பாடியிருக்கிறார்.

'ஸ்ரீ வில்லிப்புத்தூர் பெருமாளுக்கு, விஷ்ணு சித்தன் நாள்தோறும், மாலை கட்டிக் கொண்டுபோய்க் கொடுப்பார். மாலைகளுக்கு மலர்கள் வேண்டாமா? அதற்கென்று, நந்தவனமொன்றை அமைத்தார்.

'அந்த நந்தவனத்தில், ஒரு நாள் மலர் எடுத்துக் கொண்டிருக்கிற சமயத்தில், விஷ்ணு சித்தன், அடர்ந்து

படர்ந்து கிடந்த துளசிச் செடியொன்றின் கீழ், பெண் குழந்தை ஒன்று இருப்பதைக் கண்டார். பெருமாளின் கட்டளைப்படி, அந்தக் குழந்தையை வீட்டுக்குக்கொண்டு போய் வளர்த்து வந்தார். குழந்தைக்கு, கோதை என்று பெயர் வைத்தார். கோதை அமானுஷ்யமான பெண்ணாக வளர்ந்தாள்.

'மாலைக் கைங்கர்யம் செய்து கொண்டிருந்த விஷ்ணு சித்தன், ஒருநாள், மாலையொன்றில், கூந்தல் இழை இருப்பதைக் கண்டு, பதைத்துப்போனார். இதைப்பற்றி ஏதாவது தெரியுமா என்று அவர் கோதையைக் கேட்டார். 'பெருமாளின் மாலையைத் தினந்தோறும் நான் அணிந்து கொண்டு, நான் அழகு பார்த்துக்கொள்ளுவது வழக்கம். அதனால், இந்தக் கூந்தலிழை மாலையில் தங்கிப் போயிருக்கலாம்' என்று கோதை சொன்னாள்.

'பாபி என்றார் ஆழ்வார். மகா பாதகமான காரியம் செய்து விட்டாயே என்று ஏசினார். 'பெருமாள் எனக்கு காதலன். அவனுடைய மாலையை நான் அணிந்துகொண்டு, அழகு பார்த்து, அவன் அழகுக்கு என் அழகு நேராயிருக்குமா என்று தெரிந்துகொள்ள எனக்குப் பாத்தியமுண்டு' என்று கோதை துடுக்காக, பதில் சொன்னாள்.

'பெரியாழ்வார் பதை பதைத்துப்போனார். கோதை செய்தது தமக்கு உவப்பு என்று பெருமாள், ஆழ்வாருக்குத் தெரிவித்தாராம். கோதைக்கு, ஆண்டாள் என்றும், சூடிக்கொடுத்த நாச்சியார் என்றும் பெருமாள் பெயரும் பட்டமும் அளித்தாராம்.

'நாளுக்குநாள் கோதை உடல் மெலிவுற்றாள். ஸ்ரீரங்கத்தில், ரங்கநாதனுடைய சன்னதிக்கு, பல்லக்கில் அழைத்துச்செல்லப்பட்ட கோதை, சன்னிதியிலேயே இரண்டறக் கலந்துவிட்டாளாம்,

'இவ்வாறு பரம்பரைக் கதையை சொல்லுகிறார்கள். கதையை, இந்த மாதிரியான முறையில் நம்புவதாயிருந்தால், அநேக இம்சைகள் இருக்கின்றன.

'ஒன்று. பெருமாள், பெரியாழ்வாருக்கு கட்டளையிட்டிருக்கா விட்டால், பெரியாழ்வார், தான் கண்டெடுத்த,

பிறந்தவகை இன்னதென்று தெரியாத குழந்தையை, வளர்க்க துணிந்திருக்கமாட்டார். எனவே, குழந்தை வளர்வதற்காக, பெருமாள் பேசினார் என்ற அற்புதத்தைக் கொண்டுவரவேண்டி யிருக்கிறது.

'இரண்டு. பிறந்தவகை இன்னதென்று தெரியாது என்று சொன்னால், கள்ளக் காதலால், ஜன சமூகக் கட்டுப்பாட்டுக்கு பொருத்தமில்லாத சம்பவத்தின் மூலமாக, குழந்தை பிறந்திருக்கிறது என்றுதான் முடிவுகட்ட வேண்டி வரும். இந்த அபவாத அச்சான்யத்தை நீக்குவதற்காக, கோதை, அயோனிஜத முகமாய்ப் பிறந்தாள் என்று சொல்ல வேண்டியிருக்கிறது. அதாவது, தாயின் வயிற்றில், கர்ப்பமூலமாக கோதை பிறக்கவில்லை என்ற அற்புதத்தை துணைக்கொள்ள வேண்டியிருக்கிறது.

'கர்ப்ப மூலமாக குழந்தை பிறக்கவில்லை என்று சொல்லுவது முழு முட்டாள்தனமாகும். குழந்தை பிறப்பதற்கு, கர்ப்பம் தான் ஆதாரம் என்பது இயற்கையின் கண்டிப்பான சட்டம். இந்தச் சட்டத்தை யாரும் ஏய்க்க முடியாது. இரண்டாவது அற்புதமும் தவறு.

'மூன்று. கோதை, கலியாணமாகாமல், கன்னியாக இறந்தாள். இதற்கு காரணம், என்ன என்று சொல்லுகிறது கர்ணபரம்பரைக் கதை! கடவுளிடம் கோதைக்கு ஏற்பட்ட பக்தியின் காரணமாக, அவள் மனிதர்களில யாரையும் கலியாணம செய்துகொள்ளவில்லை என்று பரம்பரை சொல்லுகிறது. இதுவும் தவறு. வில்லிபுத்தூர் கோதை பாடிய பாட்டை பாடுபவர்கள், குழந்தை குட்டிகளோடு வாழ்வார்கள் என்று கோதை அடிக்கொருதரம் மக்களை வாழ்த்தியிருக்கிறார். பிறரை வாழ்த்தியிருக்கும் கோதை தனக்கு குழந்தையும் கலியாணமும் வேண்டாம் என்று தீர்மானம்கொண்டதற்கு வேறு காரணம் வேண்டும். ஆகவே கோதையைப்பற்றிய மாமூல் கதையை நம்பினால், பல இடஞ்சல்கள் ஏற்படுகின்றன. கோதையின் வாழ்க்கை வரலாற்றை, வேறு விதமாக, நான் சொல்லத்துணிகிறேன்' என்று பூங்காவன மல்லிகை சொன்னதாவது:—

கோதை பிறந்த ஊர் ஸ்ரீவில்லிபுத்தூர்; பிறந்த காலம் சுமார் 1500 வருஷங்களுக்குமுன். நாம் கோதை பிறந்தகாலத்தையும் நன்றாக கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். காலம், ஆண்பிள்ளைகள் தங்கள் இஷ்டப்படி தரும சாஸ்திரத்தை வகுத்து, எதேச்சதிகாரம் செலுத்தின காலம். இட மாகாத்மீயமும் அப்படியே. ஆண்பிள்ளை சிங்கம் என்று மீசையை முறுக்கும் மறவர்கள் வாழ்ந்து வந்த பாண்டிய நாட்டிலே, ஸ்ரீ வில்லிபுத்தூர் இருக்கிறது.

இடமும் காலமும் ஆண்பிள்ளைகள் எதேச்சாதிகாரம் செய்ய, மிகவும் தோதானவை. அந்தக்காலத்தில் ஜாதி கொடுமை தாண்டவமாடிற்று. அந்தக்காலத்தில், கலியாணம் உண்டு; ஆனால் காதல் தெரியாது. வகுப்புப் பிரிவினைக்கும் காதலுக்கும் வெகுதூரம்.

சட்டதிட்டங்களாலும் ஜனசமூகக் கட்டுப்பாட்டினாலும், கலியாணம் என்பது வெறும் சடங்காக மாறிவிட்டது. வாழ்க்கையை இன்பமயமாக்க ஏற்பட்ட கலியாணம் என்ற சாதனம், குடும்பத்தில் சாசுவத துயரத்துக்கு விதையாக ஏற்பட்டுவிட்டது.

ஜாதிப்பிரிவினை, கலியாணத்தை, ஆண் பெண் சேர்க்கைக்காக ஏற்பட்ட தந்திரமாகச் செய்துவிட்டது. கலியாணத்தின் உயிரையும் சத்தையும் அது அடியோடு வாங்கிவிட்டது. இளங்கைம்பெண்கூட கலியாணம் செய்துகொள்ளக்கூடாது; ஜாதிவிட்டு வேறுஜாதியில் மணமுடித்துக்கொள்ள முடியாது.

ஆனால், இயற்கையோ, ஜாதிப்பிரிவினைகளையும் சமூக கட்டுப்பாடுகளையும் சுயநலங்கொண்ட சட்டதிட்டங்களையும், ஏய்த்து, அவைகளை மாய்க்கும் வல்லமை கொண்டதாகும். கணவனை அறியாத கைம்பெண்ணுக்கு காதல் என்பது இருக்கப்படாதா? (கேளுங்கள், கேளுங்கள்) ஜாதி விட்டு ஜாதியில், கள்ளக்காதல் ஏற்படக்கூடாதா? (கூடும்; கூடும்)

இயற்கை, இந்தவகையில் தந்திரம் செய்திருக்கக்கூடும். அந்த தந்திரத்தின் பயனாக, ஏன் கோதை தோன்றியிருக்கக்

கூடாது? (கூட்டத்தில் பெருமூச்சு) நான் யூகம் செய்வது தவறாக இருக்கமுடியாது. ஏன் என்கிறீர்களோ? சட்டத்துக்கும் கட்டுப்பாட்டுக்கும் இழுக்கு வராதமுறையில், கோதைதோன்றியிருந்தால், அந்தக் குழந்தையை, யாருக்கும் தெரியாமல், நந்தவனத்தில், தனியாக போட்டுவிட்டுப் போகவேண்டும் என்ற நிர்ப்பந்தம் யாருக்கும் ஏற்படாது. (ஆமாம்; ஆமாம்)

சட்டத்தின் மூலமாக ஏற்பட்ட பொய்யான மானத்தைக்காத்துக் கொள்ளவே, கள்ளக்காதலர்கள் இந்த திருட்டுவேலை செய்திருக்கலாம். (கூட்டத்தில் மீண்டும் பெருமூச்சு) நான் இதுவரையிலும் சொன்னதை நீங்கள் ஏற்றுக்கொண்டால், அடுத்தபடியாக ஒரு கேள்வி பிறக்கிறது பெரியாழ்வாரின் நந்தவனத்தில் இந்தத் தங்கக் குழந்தையை ஏன் போட்டு வைக்கவேண்டும்?

பெற்ற தாய்க்கு, தான் இந்தக் குழந்தையை வளர்க்க முடியாது என்பது தெரியும். அது எவ்வித விபரீதத்தாலும் சாகக்கூடாது என்பது அவளுடைய பிடிவாதமான ஆசை. ஆகவே, குழந்தையை, ஊராரின் அவதூறையும் அவமதிப்பையும் லக்ஷியம் செய்யாமல் வளர்க்கக் கூடியவர்யார் என்று அவள் யோசித்து, அவ்வாறு செய்யக்கூடியவர் பெரியாழ்வார் ஒருவர்தான் என்ற முடிவுக்கு வந்திருக்க வேண்டும். (பூபதி, 'சபாஷ்' என்றான்) ஆகவே, அவருடைய நந்தவனத்தில் கொண்டு போய், குழந்தையை போட்டிருக்கவேண்டும். (இருக்கலாம்; இருக்கலாம்)

பெரியாழ்வார் கோதையை வளர்த்து வந்தார். ஊராரோ, கோதையை எல்லா வகைகளிலும் இம்சை செய்திருக்கவேண்டும். ஆனால், கோதையோ மனிதப்பதர்களாக இருக்கும் ஆண்பிள்ளைகளை அடிபணிவர் அல்ல. ஆண்களின் சிறுமைக்குணம், நாளுக்கு நாள், அவர் கண்ணில் கொடுமையாகப்பட்டது. எனவே, இந்த மனித அசடுகளுள் எவரையும் மணக்க அவருக்கு விருப்பமில்லை.

கோதையோ, உடல் தேய்ந்து மாய்ந்துபோன உயிரற்ற சோகை அல்ல. அவர் ஆரோக்கிய, திடசரீரத்தை பெற்றவர்; அவர் கற்பனைக் களஞ்சியம்; அவர் கவி

தைக்குந் தங்குமிடம். எனவே, கடவுளை, தனது காதலனாக கருதினார்.

தனக்கு ஈடாக இருக்கக் கூடிய காதலன், கடவுள் ஒருவராகத் தான் இருக்க முடியும் என்று கோதை எண்ணியது, ஒரே அடியில் இரண்டு குருவிகளை அடித்தது போல ஆகிவிட்டது ஆண் உருவம் தாங்கிய, ஆனால் ஆண்மை சிறிதும் இராத மனிதப்பதர்களிடம் தனக்கு இருந்த அலக்ஷியத்தை அவர் தெளிவாகக் காண்பித்து விட்டார். கடவுள் என்றால், பயங்கரமான ஒன்று அல்ல என்பதையும் அவர் சுட்டிக்காட்டி விட்டார்.

கடவுளை, ஆண் பிள்ளை கும்பிடுவான்; ஆனால் கடவுளோடு தோழமை கொண்டாட, ஆண்பிள்ளை பயப்படுவான். ஏன்? ஆண் பிள்ளை, சந்தர்ப்பத்தால் வீரனே யொழிய, அவன் பிறவிக் கோழை; அவன் பிறவி சுய நலக்காரன். கடவுளிடமிருந்து நன்மைகளை, தன் நலத்துக்காக அவன் வேண்டுவதால், அவன் கடவுளைக் கும்பிட்டு ஏய்க்கப்பார்க்கிறான். (பூபதி—சபாஷ்)

ஆனால், பெண்ணோ சுயநல மற்றவள். எனவே, அவளுக்கு யாரிடத்திலும எதைப் பற்றியும் அச்சம் கிடையாது. அதனாலே தான், கடவுளை, தனது தோழனாகவும் காதலனாகவும எண்ணத் துணிந்தாள். (கூட்டத்தில்... பலே)

கோதை திடசித்த முள்ளவராகவும் திடகாத்திர முள்ளவராகவும் இருந்திருப்பின், அவர் ஏன் இளம்பிராயத்திலேயே, அகால மரணம் அடைந்திருக்க வேண்டும் என்ற கேள்வி எழலாம். கவிதை உணர்ச்சியையும் சுதந்திர தாகத்தையும் அளவு கடந்து தாங்குபவர்கள் பெரும்பாலும் அகால மரணம் அடைகின்றார்கள். இது இயற்கையின் கொடுமை. இதற்கு நாம் என்ன செய்ய முடியும்? (ஆமாம்! ஆமாம்!)

பெண்களின் சுதந்திரத்தை, வானத்தை முட்டும்படியாக, கவிதையில் காண்பித்த கோதையின் பெயரையே, நமது நாடு தாங்கி நிற்கிறது.

கோதையே நமது குல தெய்வம்; கோதையே, கொடுங் கோலனை விளையாடும ஆண் மகனுக்கு, கோடரி போன்ற வர். கோதைதான், பெண் இயற்கையின் ஜீவநாடி. கோதை தான் காதலின் எல்லை, கவிதையின் திரு உருவம்.

கோதையின் பெயரைக் கொண்ட நமது நாடு நீடூழி வாழ்க.! நீடூழி வாழ்க.!

(நீண்ட கர கோஷம்)

பூங்காவன மல்லிகையார் இவ்வாறு பேசினார். அவர் பேசியபொழுது, கூட்டம் அதை ரசித்து அனுபவித்த விதமே வியக்கத்தக்கதாகும். பின்னர் ஷண்பக ஔவையார் எழுந்திருந்தார். அவர் சொன்னதாவது :—

'நமது மல்லிகை இன்றைக்கு வெகு அழகாகவும் ஆராய்ச்சியுடனும திறமையோடும் பேசினாள். இளங் கன்று பயமறியாது என்பதைப போல, அவள் பேசிவிட் டாளோ என்று உங்களில் சிலர் ஆத்திரப்பட்டாலும் பட லாம். அவள் பயமறியாமல் பேசினது உண்மை தான். அது அவளுடைய இளம்பிராயத்தை பொறுத்து அல்ல, அந்த பயமின்மை, அவளது ஆராய்ச்சியின் பயன். அது அவள் தர்க்க சாஸ்திரத்துக்கு கொடுத்த சூடு ஆகும்.

தர்க்க வாதத்துக்கு பொருந்தாத எதையும் ஏற்கக் கூடாது என்று அறிவு சொல்லுவதைத் தான், பூங்காவ னம் தனது ஆராய்ச்சியின் மூலமாக எடுத்துக் காண்பித் தாள். நம்முடைய வந்தனங்கள், அதற்காக, அவளுக்கு உரித்தாகுக!

கோதையின் பெருமை புகழ் நாள்தோறும் ஓங்கி, உலகி லுள்ள பெண்கள் அனைவரும் சுதந்திரம் பெறுவார் களாக!'

கூட்டமும் கலைந்தது. நாங்களும் மாணிக்கக் கோதை யாரின் வீட்டுக்குப் போனோம். 'பூங்காவனத்தின் ஆராய்ச்சி தர்க்க சாஸ்திரத்தின் பயனாயின், அதை நாம் ஏற்றுக் கொள்ளத்தானே வேண்டும்' என்று பூபதி சொன்னான்.

அத்தியாயம் - 17

குற்றவாளி யார் ?

நான், பூபதி, மாணிக்கக் கோதையார், மூவரும் கோதையாரின் வீட்டுக்குப் போனோம். போய்க்கொண் டிருக்கும் பொழுதே, எனக்கும் பூபதிக்கும் கடுமையான வாக்குவாதம் உண்டாயிற்று. 'பூங்காவன மல்லிகையின் பிரசங்கம் உனக்குப் பிடிக்கவில்லை போலிருக்கிறது; அதை ரசித்ததாக, நீ காட்டிக்கொள்ளவில்லையே" என்று பூபதி, என்னை வம்புக்கு இழுத்தான்.

'ரசிப்பதற்கு என்ன அடையாளம்? ஏதாவது கூச்சல் போடணும் அல்லது கையைத் தட்டவேண்டும்! இவை களைச் செய்யாவிட்டால், ரசிக்கவில்லை என்று அர்த்தமா' என்று பூபதியைக் கேட்டேன். 'சரிதான். நீ அந்தப் பிரசங்கத்தை மௌனமாக ஜீரணம் செய்து கொண்டிருந் தாய் போலிருக்கிறது' என்று அவன் குத்தலாகப் பேசி னான். 'நீ சற்று முன், தர்க்க சாஸ்திரத்தைப் பற்றிப் பேசினாயே, அதைப் பற்றி ஒன்று சொல்ல விரும்புகிறேன். பெற்றோர்களின் அன்பு, சகோதரியின் வாஞ்சை, காதலர் களின் உள்ள நெகிழ்வு, பயம், ஆச்சரியம் போன்றவை தர்க்க சாஸ்திரத்துக்கு, கொஞ்சங்கூட அடங்கியவைகள் அல்ல. ஆயிரம் ஆண்டுகளுக்கு அதிகமாக, புனிதமாகக் கருதப்பட்டு வரும் ஆண்டாள், விபரீத முறையில் பிறந்த குழந்தை என்று சொல்லுவதற்கு, ஏராளமாக அசட்டுத் துணிச்சல் வேண்டும். உலகத்திலே, புனிதம் என்று சில உண்டு. அவைகளை, தர்க்க சாஸ்திர முழக் கோலால் அளப்பது தவறாகும்' என்றேன்.

'சட்ட முறைப்படி, விவாக ரீதிப்படி குழந்தை பிறந்திருக்குமாயின், அது ஏன் நந்தவனத்தில், யாருக்கும் தெரியாதபடிக்கு குளிரில் விறைக்க, கிடக்க வேண்டும்? ஜோதி மயமான குழந்தை என்று பரம்பரைக் கதை சொல்லுகிறது. அப்பேர்ப் பட்ட குழந்தையை கைவிட்டு விட்டதற்கு, பெற்றோர் கள், தாங்கள் யார் என்று உலகத்துக்குத் தெரிவித்துக்

கொள்ள பயப்பட்டதற்கு, தக்க காரணம் சொல்லு. ஜன சமூகத்தின் கொடிய கட்டுப்பாட்டால் உண்டான பொய்யான மானத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காகத்தானே, பெற்றோர்கள், யாருக்கும் தெரியாமல், குழந்தையை நந்தவனத்தில் விட்டுவிட்டுப் போக நேர்ந்தது? தங்கள் குழந்தை அல்ல என்று பெற்றோர்கள் சொல்லிக்கொள்ளும்படியான நிர்ப்பந்த நிலைமை எப்பொழுது ஏற்படும்? குழந்தை கோரப் பிறவியாகப் பிறந்திருந்தால், அந்த நிலைமை ஏற்படலாம். தங்களுடையது என்று சொல்லிக் கொண்டால், ஜன சமுதாயத்தில் தங்களுக்கு இருக்கும் பதவியும் மரியாதையும் போய், தாங்க முடியாத ஏளனத்துக்கும் அவமானத்துக்கும் ஆளாக வேண்டி வருமே என்றபொழுது, நிர்ப்பந்த நிலைமை ஏற்படலாம் இந்த இரண்டைத் தவிர, வேறு காரணம் எனக்குத் தெரியவில்லை. ஆண்டாள், கோரப் பிறவியாக பிறக்கவில்லையாதலால், மற்றொன்றுதான் காரணமாக இருக்கவேண்டும்' என்று பூபதி சற்று அழுத்தமாகச் சொன்னான்.

'மல்லிகையாரிடம் உனக்கு ஏற்பட்டிருக்கும் காதலால், அவரை ஆதரித்துப் பேசும்படி, உனக்கு நிர்ப்பந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்று நான் சொன்னால்...... என்று நான் முடிப்பதற்குமுன், 'அற்பத்தனம் நிறைந்த மனிதப் பதர்கள் பேசத் துணிவது மாதிரி, நீயும் பேசத் துவக்கி விட்டாயா' என்று பூபதி என்பேரில் சீறி விழுந்தான்.

'முடிவாக, உங்கள் கருத்துத்தான் என்ன' என்று மாணிக்கக் கோதையார் என்னைக் கேட்டார். 'கோதைத் தீவில் பதியமங்கிக் கிடக்கும் எனக்கு, மல்லிகையாரின் பிரசங்கம், காதில் தேன் வந்து பாய்வதைப்போல இருந்தது. இன்றைய வெறி பிடித்த உலகத்தை மனதில் வைத்துக்கொண்டு, பூபதியோடு நான் கக்ஷி பேசினேன' என்றேன்.

இரவில் நாங்கள் நன்றாகத் தூங்கினோம். காலையிலே எழுந்ததும், 'எங்கள் கல்லூரியில், ஒரு விசாரணை நடக்கப் போகிறது. அதை, நீங்கள் பார்க்க வருகிறீர்களா' என்று மாணிக்கக் கோதையார் எங்களைக் கேட்டார். 'கல்லூரி

யில் விசாரணையா? நீதிஸ்தலத்தில் இல்லையா' என்று கேட்டு விட்டு சிரித்தேன். 'நாடகமுறையில் இந்த விசாரணை நடைபெறும். மாணவர்களும், மாணவிகளும் இதில் பங்கெடுத்துக் கொள்ளுவார்கள் ஒரே, ஸீன்தான். மாலை ஐந்து மணிக்கு, இது நடக்கும்' என்றார் கோதையார். 'இதைப் பார்ப்பதைக்காட்டிலும், கோதைத் தீவில் எங்களுக்கு வேறு என்ன வேலையிருக்கிறது' என்று நான் சொன்னேன். 'உங்களுக்குள் விவாதம் நடத்துவது, இதைக்காட்டிலும உயர்ந்ததாக உங்கள் கண்ணில் காணப்பட்டால்...' என்று கோதையார் சிரித்தார். 'மாலையில் வருகிறோம்' என்றான் பூபதி.

மாலை நான்கு மணி இருக்கும். கல்லூரிக்குப் போனோம். பிரமாதமாக கட்டிடம் எதுவும் கண்ணில் படவில்லை. ஆனால், எங்கு பார்த்தாலும், ஒரே சுத்தம். ஒழுங்கு தவறி எதுவும் இருக்கவில்லை. நாடகம் கட்டிடத்துக்குள் இல்லை. பரந்த வெளியிலேதான். ஒரு மேடைமட்டும் இருந்தது. மேடைக்கு முன்புறத்தில், திரை தொங்கிற்று. இரண்டு உயரமான கம்புகளுக்கிடையே பொருத்தப்பட்ட திரை.

நாடக மேடைக்கு நான்கு பக்கங்களிலும், மணங் கமழும் மலர்ச் செடிகள். பூஞ்சோலைக்கு நடுவே நாடகமேடை இருந்தது எனலாம். நாடகம் பார்க்கவந்தவர்கள் ஆயிரக் கணக்கில் இருக்கும். எல்லோரும் பசும்புல் தரையில் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். மணி ஐந்து அடித்தது. திரையும் தூக்கப்பட்டது. சூத்ரதார் தோன்றினார்.

அவர் அறிவித்ததாவது:— 'முதன் முதலாக உங்கள் முன் காக்ஷி அளிக்கப்போகிறவர் நீதி தேவி'

மேடையில் நீதி தேவி தோன்றினார். நீதி தேவி, முதுமைப் பருவம் எய்தியிருப்பார் என்று எண்ணியிருந்தேன். நான் எண்ணியது தவறு. நல்ல இளம்பிராயம். அவர் ஆசனத்தில் அமர்ந்தார்.

நீதி தேவி: குமாஸ்தா! இன்றைய விசாரணைக்கு, ஜூரிகள் யார்? அவர்கள் வந்து விட்டார்களா?

குமாஸ்தா: ஜூரிகள் சீதாப்பிராட்டி, விதுரன்; மேரி மாக்டலேனே, ஆண்டாள், பாரதியார். இவர்கள் ஐவ ரும் பிரசன்னமாயிருக்கிறார்கள்.

நீதி தேவி: அவர்களுக்கு சத்தியப் பிரமாணம செய்து வை.

குமாஸ்தா: அப்படியே. (நேர்மையான முறையில், உண்மை யைக்கண்டு, நாங்கள் யாருக்கும் அஞ்சாமல் தீர்ப்பு சொல்லுவோம், சத்தியம் என்று பிரமாணம் செய் தார்கள்)

நீதி தேவி: எதிரியை, எதிரே கொண்டுவந்து நிறுத்து. (எதிரி வருகிறார்) உமது பெயர் என்ன?

எதிரி: கௌதமன்

நீதி தேவி: நீர் எதற்காக, இன்றைக்கு விசாரிக்கப் படுகிறீர்?

கௌதமன்: எனது மனைவி அகல்யை, இந்திரனோடு வியப சாரம் செய்த குற்றத்துக்காக நான், அவளை கல்லாகப் போகக்கடவது என்று சபித்தது தவறு என்றும் அகல்யை செய்ததாகக் கூறப்படும் குற்றத்துக்கு நான் தான் காரணம் என்றும் என்பேரில் குற்றச் சாட்டு.

நீதி தேவி: நீர் குற்றவாளி அல்லவா?

கௌதமன்: நான் நிரபராதி.

நீதி தேவி: அப்படியானால், உமதுகக்ஷியை சொல்லிக் கொள்ளும்,

கௌதமன்: நான் நியம நிஷ்டை தவறாமல் தவம் செய் யும ரிஷி. காட்டிலுள்ள கந்த மூலங்களைப் புசித்துக் காலம் தள்ளி வந்தேன். ஆத்ம ஞானபக்குவம் பெற்ற வன் என்று எனக்கு பெயரும் கீர்த்தியும் கிடைத்தன. ஆத்ம விசாரத்தில் நான் ஈடுபட்டிருக்குங் காலையில், சிருஷ்டி கர்த்தாவான பிரம்மா, ஒன்றை சகல லோகங் களுக்கும், பிரகடனப்படுத்தினார். அவருக்கு அகல்யை என்று ஒரு புத்திரியாம். அழகில் எத்தனை வகைகள் உண்டோ, அவைகளில் ஒவ்வொன்றிலும் சிறிது சிறிது எடுத்து, பேரழகியான அகல்யையை, பிரம்மா.

சிருஷ்டி செய்தாராம். எவனொருவன் முகூர்த்த காலத்துக்குள் ஈரேழு பதினான்கு உலகங்களையும் சுற்றி வந்து தம்மைப் பார்த்தாலும், அவர் அந்தக் கட்டழகியை அவனுக்கு பத்தினியாக கொடுப்பதாக பிரகடனம் செய்தார்.

எனது பர்ணசாலையில் சுசுருஷைக்காக ஒரு பெண் இருந்தால் நல்லது என்று நான் ஆசைப்பட்டதுண்டு. இந்த பிரகடனத்தைக் கேட்டபின், அந்த ஆசையை ஏன் பூர்த்தி செய்து கொள்ளக்கூடாது என்று எண்ணினேன்.

பிரம்ம லோகத்துக்குப் போய், பிரம்மாவைக் கண்டேன். பெண்ணைத் தருகிறீரா என்று கேட்டேன். முகூர்த்த காலத்துக்குள், பதினான்கு லோகங்களையும் சுற்றி வந்தால், கொடுக்கிறேன் என்றார். அவருக்கு முன்னாலேயே, பத்மாசனம் போட்டு உட்கார்ந்து, மூன்று தடவை, என்னை நானே சுற்றி வந்தேன். ஏன் என்றார், மனுஷ்யனது தேகத்தில் அண்டபிண்ட சராசரங்களும் பதினான்கு லோகங்களும் இருப்பதாக வேதத்தின் உபதேசம். ஒருவன் தன்னைத் தானே சுற்றினால், பதினான்கு லோகங்களையும் சுற்றி வந்தால் போல ஆகும். வேதத்தில் பொதிந்து கிடக்கும் இந்த பரம ரகசியம் எனக்குத் தெரியும்.

இவ்வாறு சுற்றிவிட்டு, பிரம்மாவிடம், பெண்ணைக் கேட்டேன். அவரே திகைத்துப் போனார். பிறகு, வேதசூத்திரத்தை அவருக்கு எடுத்துக் காண்பித்தேன். அவர் அதை ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று. வேறு வழி இல்லை. அவர் அகல்யையை எனக்குக் கொடுத்தார். அவளை நான் அழைத்துக்கொண்டு, பூலோகத்துக்குப் போனேன். நாங்கள் இருவரும் சிறிது காலம் வாழ்ந்து வந்தோம். காமவெறி கொண்ட இந்திரனுக்கும், இவள் பேரில் ஆசை என்று எனக்குத் தெரியாது. இவள் சாது என்று எண்ணி யிருந்தேன். ஏமாந்து போனேன். என் மனது உடைந்து போகும்படியாக, இந்த மாயக்காரி காரியம் செய்தாள். ஆகவே இவளுக்கும் இந்திரனுக்

கும் சாபம் கொடுத்தேன். ஆத்மஞான பரிபக்குவம் பெற்ற எனக்கு, ஸ்திரீ சபலம் உண்டாகி, கலியாணத்தில் ஆசை ஏற்பட்டதனுலே தான், அவள் எனக்கு துரோகம் செய்ய நேர்ந்தது. விதி யாரை விடும்?

நீதிதேவி : குமாஸ்தா! பிரம்மாவைக் கூப்பிடு.

(பிரம்மா வருகிறார்)

(கௌதமன் ஏதோ உருப்பிரியாமல் முனகிக்கொண்டிருக்கிறார்)

நீதிதேவி : பிரம்மா! நீர் கௌதமனுக்கு அகல்யையை கொடுத்த வரலாற்றைச் சொல்லும். அவர் சொன்னதைப் படிக்கிறேன். கேளும். பிறகு நீர் சொல்லலாம்.

(படிக்கிறார்)

பிரம்மா : கௌதம மகரிஷி சொன்னது அவ்வளவும் உண்மை. வேதத்தில், கௌதமன் குறிப்பிட்ட சூத்திரம் இருந்தது எனக்கு ஞாபகம் இல்லாமல் போய் விட்டது. ஆனால், நான் ஏற்படுத்திய பிரமாணத்துக்கு நான் கட்டுப்பட்டுத்தானே ஆகவேண்டும்? நான் என்ன செய்கிறது? வேறு வழியில்லாமல் நான் எனது அபூர்வ கற்பனையால் படைத்த பெண்ணை, கட்டழகியை, ஆத்ம விசாரத்தில் ஈடுபட்டிருந்த ஒருவருக்குக் கொடுக்க நேர்ந்தது. நான் மன வருத்தத்தோடுதான் அவளை கௌதமனுக்கு கொடுத்தேன். கௌதமன் தபஸ்வி; அவர் ரசிகன் அல்ல. ஆகவே, அகல்யை என்ற அன்று மலர்ந்த மலரை அனுபவிக்கத் தெரியாமல், கசக்கி முகர்ந்து விட்டார். சொன்னசொல் தவறக்கூடாது என்பதாலும நானே வகுத்த வேதத்தில் நான் நம்பிக்கை காண்பிக்கவேண்டும் என்ற நிர்ப்பந்தத்தாலும், நான் மனமறிந்த தவறைச் செய்தேன். அகல்யைக்கு கௌதமன் ஏற்ற ரசிகர் அல்ல.

நீதி தேவி: பிரம்மா! உண்மையை ஒளிக்காமல் சொன்னதற்காக, வந்தனம். குமாஸ்தா! அகல்யையை, போய் அழைத்து வாரும

(அகல்யை, துக்கம் குடிகொண்ட முகத்தோடு வருகிருள்.)

அம்மா! நீதான் அகல்யையா?

அகல்யை: ஆமாம்! அதோ, என் தகப்பஞர் இருக்கிருரே!

நீதி தேவி: இன்னொருவரும் இருக்கிருரே, அவரை உனக்கு அடையாளம் தெரியவில்லையா?

அகல்யை: என் வாழ்வை பாழாக்கிய பாபியை நான் எவ்வாறு மறக்க முடியும்?

நீதி தேவி: அவர் இந்திரன் என்று எண்ணி, இவ்வாறு தடுமாற்றமாகப் பேசுகிருயா?

அகல்யை: என்னையும் இந்திரனையும் ஏககாலத்தில் சபித்த மகான் இவர்தான்! எனக்கு எவ்வித மயக்கமும் இல்லை. புத்தி சுவாதீனத்துடன் தான் இருக்கிறேன்.

நீதி தேவி: அப்படியாஞல் உனது வாழ்க்கை பாழான வகையை, விவரமாகச் சொல்லு. நீதி தேவியின் முன்ஞல் நிற்கிருய் என்பது உனக்குத் தெரியுமா?

அகல்யை: தெரியும். என்றைக்காவது, ஒருநாள் நான் நிரபராதி என்பது ருசுவாகும் என்று நீண்டகாலமாக, நான் ஆவலுடன் காத்துக்கொண்டிருக்கிறேன்.

நீதி தேவி: பொறுமையும் நம்பிக்கையும் வாழ்க்கைக்கு மூலாதாரமான சக்திகள் தான், சரி! நீ உன் கதையைச் சொல்லு.

அகல்யை: என்னுடைய இளம்பிராயத்தில், என்னைப் பார்த்துப் பார்த்து, என் தகப்பஞர் (பிரம்மா) தமது படைப்புத் திறனைப்பற்றி, பெருமை அடித்துக்கொள்வார். "குழந்தை! ரதிகூட, உனக்கு ஈடாகமாட்டாள்' என்று அப்பா சொல்லுவார். தேவர்களில் முக்கியமானவர்கள் எல்லோரும், என்னைப்பார்த்து கண்பூத்துப்போனதுமாதிரி, இருப்பார்கள். என்னை கலியாணம செய்துகொள்ளவேண்டும் என்பது தேவேந்திரனுக்கு ஆசை. நான் ஏன் இந்திராணியாக

ஆகக்கூடாது என்று என்னையே, நான்கேட்டுக் கொள்ளுவேன். வாழ்வை ருசியாக அனுபவிக்கவேண்டுமானால், இந்திரபோகம் தான் வேண்டும் என்று எனக்குள்ளாகவே தீர்மானித்துக்கொண்டிருந்தேன். இந்த ஆசையிலேயே வளர்ந்த நான் என்ன அழகாக வளர்ந்தேன்! திடீரென்று ஒருநாள், எதிரே நிற்கிறாரே முனிபுங்கவர், என்னை தனக்குக் கொடுக்கவேண்டுமென்று என் தகப்பனாரிடம் வாதாடிக்கொண்டிருந்தார். தாம் இக்கட்டில் அகப்பட்டுக் கொண்டதை உணர்ந்து, சொல் தவறக்கூடாது என்று, மனமில்லாமல், என்தகப்பனார் என்னை அவருக்குக்கொடுத்தார். கிளியை வளர்த்துப் பூனையின்கையில் கொடுக்கலாமா என்று அப்பாவைக் கேட்டேன். வேறுவழியில்லையே என்று தகப்பனார் ரொம்பவும் வருத்தப்பட்டார். அந்த சடை முனியைக் கண்டதும், எனக்குப் பகீர் என்றது. அவருடன் போவதற்கு எனக்கு மனமே இல்லை. தகப்பனாரோ என்னை அவருக்கு கொடுத்துவிட்டார் தர்ம சாஸ்திரமோ, என் புருஷன் கூப்பிட்ட இடத்துக்கு நான் போகவேண்டும் என்று கட்டாயப்படுத்துகிறது. நான் என்ன செய்வேன்?

நான் அந்தப் பேர்வழியோடு போனேன். முனிபுங்கவருக்கு தவமும் சிசுருஷையும் தான் தெரியும். அவருக்கு என்னோடு சல்லாபம்செய்ய மனமும் இல்லை, பொழுதுமில்லை. காதலை அனுபவிக்கத் தெரியாத ஒருவர் ஏன் கலியாணம் செய்துகொள்ளவேண்டும் என்று நான் அவரை, இரண்டொருதரம கேட்டதுண்டு. 'காதலாவது! அதுதான் காமம். காமத்துக்குப் பலியாகுபவன் ஆத்ம விசாரம் செய்ய முடியாது. நீ இங்கே, எனக்குச் சிசுருஷை செய்ய வந்திருக்கிறாய். அதற்கு மீறிய எதுவும் என்னிடம் பேச வேண்டாம்' என்று தவமுனி திருவாய் மலர்ந்தார்.

நான் அவருடைய பணிப்பெண்ணாம்! என்ன அநியாயம்! எங்கேயாவது ஓடிவிடலாமா என்று எண்ணினேன். உரிமையை நிலைத்துக்கொள்ளாமல், ஓட்டம் எடுப்பதில் என்னலாபம்? ஒரு நாள் இரவு இந்திரன்

வந்தான். நான் குதூகல மடைந்தேன். முனிவருக்கு கோபம். இருவருக்கும் சாபம் கொடுத்தார். முனிவருடைய ஆசிரமத்தில் கல்லைப்போல இருந்த நான் கல்லாகப் போனதில் வருத்தமே இல்லை.

பெண் ஜன்மத்தைப் பாழாக்கிக்கொண்டு, பெண்மாதிரி இருப்பதைக்காட்டிலும் எப்பொழுதுமே கல்லாக இருப்பதில் எனக்குப் பிரம்மானந்தம். ஆனால் ஸ்ரீ ராமன் பாததூளிபட்டு, நான் மீண்டும் பெண்ணானது தான் எனக்குப் பிடிக்கவில்லை. நான் என் தகப்பனுரிடம் போய்ச் சேருவதா? தவமுனிவரோடு தங்குவதா? அல்லது இந்திரனோடு வாழ்ந்து இன்பம் அனுபவிப்பதா? விதாயம் எதுவும் ஏற்படாமல், கல்லாயிருந்த நான் ஏன் பெண்ணாகவேண்டும்?

சாபம் கொடுத்த முனிவர் என்னைக்கல்லாய்ச் செய்ததால், நான் பயந்துபோய் விடுவேனா? அல்லது என் மனமும விருப்பமும் தான் மாறிவிடுமா? இன்பத்தில் நாட்டங்கொண்ட கலைஞர்களுக்குத்தானே கவலை? தவத்தில் ஆழ்ந்துகிடக்கும் முனிவருக்கு இன்பம் ஏது? ஆத்ம சொரூபத்தைக் காணுவது அவருக்கு இன்பமாயிருக்கலாம். எனக்கு அது இன்பம் தருவதல்ல. கலைக்கும் தவத்துக்கும் தீராத பகைமை என்பதைத்தெரிந்து கொண்டேன். அந்தப்போர்வழி இருக்கிற இடத்திலே நான் இருக்க, எனக்கு இஷ்டமில்லை. நான் வெளியே போகட்டுமா?

நீதி தேவி: பொறு. குமாஸ்தா! இந்திரனைக் கூப்பிடு
(இந்திரன் வருகிறான்)
இந்திரா! இங்கே இருப்பவர்களை உனக்குத்தெரியுமா?

இந்திரன்: அதோ வீற்றிருக்கிறார் பிரம்மா. நின்று கொண்டிருப்பது கௌதமன். என் பக்கத்தில் இருப்பது அகல்யை.

நீதி தேவி: அகல்யை சாப சம்பந்தமாக, உனக்குத் தெரிந்ததைச் சொல்லு.

இந்திரன்: எனக்கு அகல்யையின் பேரில் காதல்....

நீதி தேவி: உனக்கு ஏற்கனவே கலியாணம் ஆகவில்லையா?

இந்திரன். நான் புதிதாக இந்திரப்பட்டத்துக்கு வந்தவன். அகல்யையை இந்திராணியாகச் செய்து, இந்திர போகத்தை பரிபூரணமாக அனுபவிக்கவேண்டும் என்பது என் இச்சை. அந்த இச்சை பூர்த்தியாவதற்கு வழிஇல்லாமல் போனதற்கு, கௌதமனே காரணம். இவருக்கு எதற்காக கலியாணம? அப்படி அவருக்கு மணத்தில் விருப்பம் ஏற்பட்டாலும், பரலோக சிந்தனையுள்ள பெண்ணைப்பார்த்து கலியாணம் செய்து கொள்ளக்கூடாதா? இன்ப சொரூபியாக இருக்கும அகல்யையை துன்பத்தில் தள்ளி அந்தக்காக்ஷியை அனுபவிக்க வேண்டும என்று கௌதமன் நினைத்தார் போலும! அவருக்குத் தவம்தான் பெரிது. அவருக்கு வாழ்க்கையைப்பற்றி கவலைகிடையாது. தவம் என்ற ஒக்கேடாலியைக்கொண்டு, அவர் எங்கள் வாழ்வைச் சிதைத்து விட்டார், பாபி!

நீதி தேவி: கௌதமரே! நீர் அகல்யையை மணந்து கொள்ள ஆசைபட்டது நியாயமாகுமா?

கௌதமன்: சட்டப்படி என் பாத்தியம் செல்லக்கூடியது தானே? அதை இல்லை என்று யாரும் சொல்ல முடியாது.

நீதி தேவி: எதற்கும, பொருத்தம் என்ற லக்ஷணம் கிடையாதா?

கௌதமன்: பிரமமா, யோசனையில்லாமல், ஏன் அந்த பிரகடனம் செய்தார்? சிருஷ்டிகர்த்தா தவறு செய்தால், அது எவ்வளவு கொடுமை கொண்டது என்பதை விளக்குவதற்கும் அவருக்குத் தக்கபாடம் கற்பிப்பதற்காகவும்தான், நான் அகல்யையை மணக்க விரும்பியது. அகல்யைக்கு நேர்ந்த துன்பங்களுக்கு பிரம்மாவே ஜவாப்தாரியாவார். அகல்யையின் மனம திரிந்துபோய், தவறான காரியம் செய்யத்தூணிந்த சந்தர்ப்பங்களை நான் உண்டாக்கினேன். ஆனால் நான் எதற்கும் மூல கர்த்தா இல்லை. வேண்டுமானால், என் பேரில், உடந்தைக்குற்றம சாட்டலாம். பிரம்மாவின் தவறை எடுத்துக்காண்பிக்க வேண்டிய பொறுப்பு

என் தலையிலே விழுந்தது. அதனாலே, நான், ஒரு வகையில் குற்றவாளி என்று ஜூரிகள் அபிப்பிராயப் படலாம். ஜூரிகள், பிரமமாதான் குற்றவாளி என்று தீர்ப்பு சொல்ல வேண்டும் என்பது எனது பிரார்த்தனை.

நீதிதேவி : ஜூரிகள் என்ன அபிப்பிராயப்படுகிறார்கள்? விதுரரே! சொல்லும்.

விதுரர் : நாங்கள் எல்லோரும் ஒரே முடிவுக்கு வந்தோமாயினும், எங்களுக்குள்ளே சில்லறை வித்தியாசங்கள் இருக்கின்றன. தண்டனை விதிப்பதில் தான் அபிப்பிராய பேதம் இருக்கிறது. கௌதமன் தான் குற்றவாளி என்பது நாங்கள் வந்திருக்கும் முடிவு.

'கௌதமனுடைய இகலோக அனுபவம் குறை கொண்டது. அவர் செய்தது அறியாப் பிழை. அதை குற்றமாகப் பாவிக்கலாகாது. எனவே, அவர் செய்தது அசட்டுக்காரியம். ஆன்ம ஞான பக்குவம் பெற்ற கௌதமரை, இந்த நீதி ஸ்தலத்தில் விசாரித்ததே, அவருக்கு தகுந்த தண்டனை' என்று சீதாப் பிராட்டி கருதுகிறாள். 'கௌதமன் வாழத் தெரியாதவன். வாழ அதாவது, இன்பத்தை அனுபவிக்க, அவனுக்கு கற்றுக் கொடுக்கவேண்டும். கந்தர்வ லோகத்திலே, கந்தர்வ ஸ்திரீகளின் மத்தியில், அவன் கோடி வருஷம் இருந்து, கலை அழகையும் காதலின் மாண்பையும் அவன் தெரிந்து கொள்ளவேண்டும்' என்று ஆண்டாள் சொல்லுகிறாள். இதையே ஆமோதித்து மேரி சொல்லுகிறாள்.

ஆண் உலகத்துக்கு அவமானத்தைத் தேடிக் கொடுத்த கௌதமனை என்ன செய்தாலும் தகும். தாடியும் மீசையும் வைத்துக் கொண்டு, தவம் செய்யும் ஒருவனுக்கும் அழகுக்கும் என்ன சம்பந்தம்? கலை விநோதத்தை அறிய முடியாத கசடன், கலியாணத்தில் ஆசை கொள்ளலாமா? கௌதமன் லௌகீகம் தெரியாத முழு மூடன். கௌதமன் செய்தது மாதிரியே தன்னைச் சுற்றி வந்து, தெய்வயானையை

அடைந்த கணபதி, இங்கிதம் தெரிந்து, அவளை தனது தம்பியாகிய சுப்ரமணியத்துக்கு கொடுத்து விட வில்லையா? அந்த மாதிரி, கௌதமன் ஏன் செய்யக் கூடாது? ஆகவே, உண்மையாகவே, கௌதமன் பதினான்கு லோகங்களையும் சுற்றிப்பார்த்து அனுபவம் பெற வேண்டும் என்று தண்டனை அளிக்க வேண்டும்" என்று பாரதியார் சொல்லுகிறார்.

'எனது கருத்து, சீதாப் பிராட்டியின் கருத்தைத் தழுவியதாகும். தவ சிரேஷ்டரான கௌதமரை, விசாரணைக்கு கொண்டு வந்ததே, போதுமான தண்டனை என்பது எனது தாழ்மையான கருத்து.'

நீதிதேவி: விதுரர் கொடுத்த தண்டனையே போதும் என்று எண்ணுகிறேன். இந்த விசாரணையே, மனித வர்க்கத்துக்கு, எதிர் காலத்தில் எச்சரிக்கையாக இருக்கும் என்று நம்புகிறேன்.

அகல்யை: என்கதி என்ன ஆகிறது?

நீதிதேவி: நீ உன் இஷ்டப்படி செய்யலாம். விசாரணை முடிந்துவிட்டது. கோர்ட்டும கலைந்து விட்டது.

(எல்லோரும் கலைந்து போனார்கள்)

விசாரணையைப் பார்க்க வந்தவர்கள் அனைவரும் யாதொரு சந்தடியும் செய்யாமல், கலைந்து போனதைப் பார்த்ததும், என்னை அறியாமலே, என் மனம் குதூகல மடைந்தது. எந்த தேசத்திலும், எக்காலத்திலும் சரி, கூட்டம் என்றால் கூச்சல் என்று அர்த்தம். கோதைத் தீவில் அதுவும் பெண்கள் கூடிக் கொண்டிருந்த கூட்டத்தில் இவ்வளவு அமைதியும் ஒழுங்கும் நிலவியதும் கூட்டம் சந்தடியின்றி, இமைப்பொழுதில் கலைந்து போனதும் எனக்கு ஆச்சரியமாகவே இருந்தது. ஆனந்தமடைந்தேன்.

'சற்று நேரம் இந்த பசும் புல் தரையிலேயே உட்கார்ந்திருப்போமே' என்று நான் சொன்னது தான் தாமதம், எழுந்து நின்று கொண்டிருந்த பூபதி, சட்டென்று அங்கேயே உட்கார்ந்து கொண்டான்.

'வைரத்தில் இவர்கள் சாணக்கியன் மாதிரி இருக்கிறார்களே! புல் தடுக்கி விழுந்த சாணக்கியன், அதை ஆணி வேரோடு கெல்லினது மாதிரி, கோதைத் தீவில், இவர்கள் எத்தனையோ ஆயிர வருஷங்களுக்கு முன் நடந்ததாகச் சொல்லப்படும் சம்பவத்தைக் கூட சந்திக்கு இழுத்து, விசாரணை என்ற சாக்கிலே, ஆராய்ச்சி செய்கிறார்களே' என்றேன்.

"இதைப்பற்றிச் சிறப்பாகச் சொல்லுகிறேன் என்று நினைக்காதே. பொதுவாகப் பேசுகிறேன். சிறு பொய் என்று துவக்கத்தில் அதை அலக்ஷியம் செய்தால், அது காலம் போகப் போக, பெரிய உண்மையைப் போல உருவம் எடுத்து விடுகிறது. எப்படி என்று கேட்கிறாயோ? 'அது பொய் என்றால் அது தோன்றும் பொழுதே, அதை மண்டையில் அடித்து, அதை தலை தூக்காமல் செய்திருக்க மாட்டார்களா? அது நிஜமாக இருக்கத் தொட்டுத் தான், அதை ஒன்றும் செய்யாமல் விட்டு விட்டார்கள் என்று ஜனங்கள் கதையை ஆரம்பிக்கிறார்கள். பிறகு அதை உண்மை யென்றே ஸ்தாபித்து விடுகிறார்கள். கடைசியாக, இத்தனை ஆயிரம் வருஷமாக இருந்து வந்த ஒன்று எப்படி பொய்யாக இருக்க முடியும்? பொய் என்று தெரிந்து கொள்ளாமல் வாழ்ந்த அத்தனை தலை முறைப் பேர்களும் முட்டாள்களா' என்று கேட்டு, வாயை அடக்கப் பார்க்கிறார்கள். ஆகவே, சந்தர்ப்பம் நேர்ந்த பொழுதெல்லாம், பொய்யை நையப்புடைப்பது மிக்க அவசியம். கோதைத் தீவார், இந்தக் கொள்கையை கைக்கொண்டிருப்பது என் மனதுக்கு சந்தோஷத்தைத் தருகிறது" என்று பூபதி சொன்னான்.

'உண்மை தான். இந்தத் தீவிலேதான், நியாயமும சுதந்திரமும் சத்தியமும் வளர முடியும். குடி கெடுக்கிற, நல்ல குணத்தைப் போல நடிக்கிற, தாக்ஷிண்யம் என்ற கோழைத்தனம் இந்த நாட்டில் இல்லாதிருப்பதைக் கண்டு, நான் களிப்படைகின்றேன். தாக்ஷிண்யத்தின் பெயரால் வண்டி வண்டியாகத் தவறுகளை செய்ய வேண்டியதாயிருக்கிறது' என்றேன்.

இதற்குள், மாணிக்கக் கோதையாரும் பூங்காவன மல்லிகையும் நாங்கள் இருந்த இடத்துக்கு வந்து சேர்ந்தார்கள்.

'நேற்றைக்கு, நீங்கள் ஆண்டாளைப்பற்றிப் பேசினது ரசமாயிருந்தது. ஆனால், கோதைத் தீவுக்கு வெளியே அதை நீங்கள் சொல்லியிருக்க முடியாது. உங்களை அவ்விடத்திலேயே பிண்டமாகப் பிடித்து, உயிரை வாங்கியிருப்பார்கள்' என்று மல்லிகையைப் பார்த்து, பூபதி சொன்னான்.

மல்லிகை அதற்குப் பதில் சொல்லாமல், 'இன்றைக்கு விசாரணை எப்படி இருந்தது' என்று கேட்டாள்.

'விசாரணை வாசகங்களை தயார் செய்தது யாரோ, அவரை, நான் மிகுதியும் பாராட்டுகிறேன். இரண்டு தரப்பு கக்ஷி வாதங்களையும் நேர்மையாக எடுத்துக் காண்பித்திருக்கிறார். விசாரணை என்றால் இப்படித் தான் இருக்க வேண்டும்' என்றான் பூபதி.

'அப்படியானால், பாராட்டப்பட வேண்டியவர் மாணிக்கக் கோதையார் தான். நாட்டு ரகசியத்தை வெளியிட்டதற்காக, நீங்கள் என்னை காவலில் வைக்க மாட்டீர்களே' என்று மல்லிகை சிரித்துக் கொண்டு கோதையாரைப் பார்த்து, சொன்னார்.

'அப்படியா' என்று நான் மாணிக்கக் கோதையாரை, கையைப் பிடித்து, என்னை அறியாமலே குலுக்கி விட்டேன். என் நினைவு எனக்கு வந்ததும், 'மன்னிக்கவேண்டும்' என்று கோதையாரைக் கேட்டுக் கொண்டேன்.

'ஒழுங்கீனமான முறையில் இல்லாமல், உள்ளத்தில் இயற்கையாக எழும் உணர்ச்சியை, கை குலுக்குதல் போன்ற வகைகளில் காண்பிப்பதில் தவறு ஒன்றுமே இல்லை. நீங்கள் செய்தது தான் சரி. அதைப் பாராட்டுகிறேன்' என்றார் கோதையார்.

'அப்படியானால், உங்களை நான் கை குலுக்குகிறேன் என்று மல்லிகையைப் பார்த்து, பூபதி சொன்னான். 'காலப்

பிற்பாடு' என்று சிரித்துக் கொண்டு, மல்லிகை, தன் கையைக் கொடுக்க மறுத்து விட்டார்.

'இயற்கைக்கும் கோதைத் தீவுக்கும் பொருந்தாத தன்னடக்கத்தால், நான் தவறு செய்து விட்டேன்' என்றுன் பூபதி.

'மன்னித்தேன்' என்று மல்லிகை, பூபதியின் கையைப் பிடித்துக் குலுக்கினார்.

நால்வரும் குதூகல மடைந்தோம்.

அத்தியாயம் - 18

சாவித்திரியின் சாகஸம்

என்ன காரணத்தால் மாணிக்கக் கோதையார் அவ்வாறு செய்தார் என்று தெரியவில்லை. அவர் எங்களிடம் சொல்லவும் இல்லை. பூங்காவன மல்லிகை, அன்றிரவு, எங்களோடு மாணிக்கக் கோதையாரின் இல்லத்தில் சாப்பிட்டார். இரவில் பொழுதுபோனதே தெரியவில்லை. நடுராத்திரி பன்னிரண்டுமணிக்கு குண்டு போட்டதைக் கேட்டு, நாங்கள் திடுக்கிட்டுப்போனோம். நோயாளி இருந்தாலொழிய, இதற்குமேல், கோதைத் தீவில, எந்த வீட்டிலும விளக்கு எரியக்கூடாது. ஒவ்வொருவரும் குறைந்தது ஆறுமணி நேரமாகிலும, தூக்கம் இருக்கவேண்டும் என்பது கோதைத்தீவில் கட்டுப்பாடு.

காலையில் எழுந்திருந்ததும், 'இன்றைக்கு ஒரு விசேஷம் இருக்கிறது. அதை நீங்கள் பார்க்கிறீர்களா' என்று பூங்காவன மல்லிகை கேட்டார் மல்லிகை, இரவில் கோதையார் வீட்டில்தான் இருந்தாரா, அல்லது தன் வீட்டுக்குப் போய், விடியற்காலையில் வந்திருக்கிறுரா என்பது தெரியவில்லை.

'விசேஷம் என்றுல் அதைப் பார்க்காமல், இருக்க முடியுமா? அந்த விசேஷத்துக்கு பெயர் உண்டா' என்று கிண்டலாக, நான் கேட்டேன். 'விசேஷத்துக்கு, சாவித்திரியின் சாகஸம் என்று பெயர். நீங்கள்தான் சாவித்திரி

சத்தியவான் கதையைக் கேட்டிருப்பீர்களே! சத்தியவானை எமபுரியிலிருந்து மீட்டுவந்த வரலாற்றைச் சாவித்திரி, தனக்குள்ளாகவே சொல்லிக் கொள்ளுவதாகச் சம்பிரதாயம். பைத்தியப் பேச்சு என்று எண்ணிவிடாதீர்கள்' என்று மல்லிகை சொன்னார்.

'நீங்கள், என்னமோ, கோதைத் தீவில் செய்கிறதெல்லாம், வேண்டுமென்றே ஆண்பிள்ளைகளை அவமானப்படுத்துவது மாதிரி இருக்கிறது' என்று நான் சொன்னேன்.

'பெண்களின் தியாகத்தையும் தீரத்தையும் காதல் மாண்பையும் சொன்னால், அது ஆண்பிள்ளைகளை அவமானப்படுத்துகிறதுமாதிரி ஆகிவிடுமா? பெண் இனத்துக்கு உற்சாகமும் தைரியமும் கொடுக்கக்கூடியவைகளை எடுத்துக் காண்பிப்பது பொருத்தமும் தேவையும் கொண்டதுதானே' என்று மல்லிகை சொன்னார்.

வாதம் சம்பந்தப்பட்ட வரையில், கக்ஷியை, மல்லிகை சரியாகச் சொல்லிவிட்டதால், அதை நான் ஒப்புக்கொண்டேன். 'விசேஷத்துக்கு வருகிறோம்' என்றான் பூபதி.

பெண்ணுக்கு, பின்புத்தி என்று உங்கள் நாட்டில் ஏளனமாகச் சொல்லுகிறார்களே, அது நியாயமா' என்று மல்லிகை கேட்டார். நியாயமில்லை என்றேன். 'சரி! நாங்கள் போய்வருகிறோம்' என்று கோதையாரும் மல்லிகையும் போய்விட்டார்கள்.

'பூபதி! விசேஷம் எங்கே நடக்கிறது என்பதை கேட்க மறந்துவிட்டோமே! இப்பொழுது, யாருக்கு பின்புத்தி? ஆணுக்கா, பெண்ணுக்கா' என்றேன்.

'நிச்சயமாக, ஆணுக்குத்தான்' என்று சொல்லிச் சிரித்துக்கொண்டே, கோதையாரும், மல்லிகையும் திரும்பி வந்தார்கள். 'அதைச் சொல்லுவதற்காகவா, திரும்பி வந்தீர்கள்' என்று நான் அவர்களைக் கேட்டேன். 'அதற்காக அல்ல; விசேஷம் எங்கு நடக்கிறது என்று உங்களுக்குச் சொல்லிவிட்டுப்போக' என்றார் கோதையார். 'அப்பொழுதே சொல்லியிருக்கலாமே! உங்களுக்குப் பின்புத்தி தான் போலிருக்கு' என்றான் பூபதி.

'நீங்கள் இப்படி சாமர்த்தியமாகப் பேசக்கூடும் என்பதற்காகவேதான், நான் போகுமுன், பின்புத்தியைப்பற்றி குறிப்பிட்டேன்' என்று சிரித்துக்கொண்டு, மல்லிகை சொன்னார். 'தோல்வியை ஒப்புக்கொள்கிறேன்' என்றான் பூபதி. 'தோல்வி என்று சொல்ல வேண்டாம். உண்மையை ஒப்புக்கொள்கிறேன் என்று சொன்னால் போதும்' என்றார் மல்லிகை. 'உண்மையை ஒப்புக்கொணடேன்' என்றான் பூபதி. 'அப்படியானால், விசேஷம், சக்தி கோவிலுக்குமுன்னே நடைபெறும். சக்தி கோவில் நகரமண்டபத்துக்கருகே இருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும்' என்றார் மல்லிகை. தெரியும்என்றேன். விசேஷம், மாலை ஆறுமணிக்கு என்றார் மல்லிகை.

சரி என்றோம். 'இவர்கள் எவ்வளவு முறையாகவும் சுருக்கமாகவும் பேசினீர்கள், பார்த்தாயா, கணபதி' என்றான் பூபதி.

'பார்த்தேன், பார்த்தேன், பார்த்தேன்' என்றேன். ஏன் மூன்று தரம் என்றான். குதூகலம் என்றேன்.

அன்று சாயங்காலம் வரையில், நாரிபுரியில் நாங்கள் இதுவரையிலும் பார்க்காத இடங்களையெல்லாம் சுற்றிப் பார்த்தோம். எந்தக்காரியமாயிருந்தாலும், அதை மிகுந்த கவனத்தோடும் முன்யோசனையோடும் கோதைத்தீவில் செய்கிறார்கள் என்பதை ஒவ்வொன்றும் எங்களை கூப்பிட்டுச் சொல்லுவதுபோல் தோன்றிற்று. 'இறுதிப் போராட்டம் மனிதனுக்கும் மனிதனுக்கும் அல்ல; ஒரு நாட்டுக்கும் இன்னொரு நாட்டுக்குமல்ல; ஆணுக்கும் பெண்ணுக்குமல்ல; கடைசிப் போராட்டம் மனிதவர்க்கத்துக்கும் எமனுக்கும் தான். காலன் கரவினில் வந்து உயிர்க்குலத்தினை அழிப்பவன். ஆகவே, எதிலும் முன் எச்சரிக்கையுடன், இருந்தால்தான், மனிதவர்க்கம் காலனை வெல்லமுடியும்' என்பதை விளம்பரப்படுத்துவவைப் போல, கோதைத் தீவில் ஒவ்வொன்றும் காக்ஷி அளித்தது.

மாலையில் ஆறு மணி அடிக்குமுன், நானும் பூபதியும் சக்திகோவிலுக்கெதிரே வந்து சேர்ந்தோம். பெரியதொரு கூட்டம். கோவிலுக்கெதிரே, பத்தடி உயரமுள்ள ஸ்தூபி

ஒன்று இருந்தது. அந்த ஸ்தூபியில், நான்கு பேர்கள் தாராளமாக நின்றுகொண்டிருக்கலாம். இன்றைக்கு, அந்த இடத்தில் ஒரு பெண் நின்றுகொண்டிருந்தாள். நல்ல வாட்ட சாட்டமான தேகம்; கம்பீரமான தோற்றம். எடுத்த காரியம் யாவினும் வெற்றி என்று முரசு கொட்டுவதைபபோல, இருந்தது அவளுடைய முகம்.

ஆறு மணி அடித்தது. எங்கும் மௌனம் நிறைந்து, பரந்துகிடந்தது. அந்தப்பெண் சொல்லுகிருள்:—

'நான்தான் சாவித்திரி. எனது புருஷன் சத்தியவான். நாங்கள் இருவரும் இன்பமயமான வாழ்வு வாழ்ந்துகொண்டிருந்த காலத்தில், அதை பாழ்படுத்தத் துணிந்தான் எமன்.

'நரரிபுரியில் வாழும் நன்மாணிக்கங்களே! அந்தக் கதையைச் சொல்லுகிறேன், கேளுங்கள்.

இன்பத்துக்கு எல்லே இல்லே. எனினும், இன்பத்துக்கு எல்லே ஏற்பட்டுவிடுமோ, எனும்படியாக, நானும் சத்தியவானும் வாழ்ந்தோம். சத்தியவான் அகத்தூய்மை படைத்த ஆண்மகன். வஞ்சகம் சூது எதுவும் அறியாதவன். அப்பேர்ப்பட்ட காளேயோடு, கருத்து ஒருமித்து, நான் வாழும்காலேயில், காலன் தோன்றினுன், சத்தியவானுக்கு காலம் ஆகிவிட்டது என்றுன்.

நான் அழுதேன், புரண்டேன், புலம்பினேன், கெஞ்சினேன், காலில் விழுந்து கேட்டுக்கொண்டேன். காலனுடைய இதயம் இளகவில்லே. காலத்துக்கு மீறிய பொருள் எதுவும் கிடையாது என்று எமன் என்னிடம் சட்டம்பேசினுன். தர்க்கம் பேசினுன். 'தர்க்கம் வேண்டாம். தயை புரியுங்கள்' என்றேன். 'எமனுக்கு தர்மம்தான் தெரியும், தயை தெரியாது' என்று அவன் கையை விரித்தான்.

'உடனே, நான் புலம்பலே நிறுத்தினேன். கெஞ்சுவதை விட்டேன். சத்தியவானேக் கொண்டுபோ என்றேன். காலன் சத்தியவானேக் கொண்டு போனுன். நான் பார்த்துக்கொண்டு நிற்கவில்லே. கூடவே போனேன்.

'ஏன் வருகிறாய் என்றான். என்னிஷ்டம் என்றேன். அந்தமாதிரி பதில் சொல்லக்கூடாது என்றான். உண்மையைச் சொல்லவேண்டுமானால், அதுதான் பதில் என்றேன். போகும்பாதை கரடு முரடான பாதை என்று சொல்லி, அவன் என்னை பயமுறுத்தப் பார்த்தான். எந்தப் பாதையில் என் சத்தியவான் போகின்றானோ, அது கரடாயிருந்தால் என்ன, முரடாயிருந்தால் என்ன என்றேன்.

'செத்தபிறகு, அவன் உன் சத்தியவான் அல்ல என்பதைத் தெரிந்துகொள் என்றான். என் சம்பந்தப்பட்டவரையில் சத்தியவான் சாகவில்லை என்பதை நீ தெளிவாகத் தெரிந்துகொள் என்றேன்.

'காதலோ என்று சொல்லி, அவன் இடிஇடித்ததைப் போல நகைத்தான். காதல் பெரிதா அல்லது காலன் பெரியவனா என்பதை ருசிப்படுத்திவிடுகிறேன் என்றேன்.

'அப்படியானால், நீ உடன்கட்டை ஏறுகிறதுதானே என்று குத்தலாகப் பேசினான். 'செய்திருக்கலாம்; செய்திருந்தால் காதல் பெரிது என்பது ருசுவாகியிருக்கும். அதோடுகூட, காதலைக்காட்டிலும் காலன் பெரியவன் என்பதும் ருசுவாயிருக்கும். அதனாலேதான் நான் உடன்கட்டை ஏறவில்லை என்றேன். தர்க்கம் தேர்ந்தபெண் என்றான். அவனுக்கு அப்பொழுதே சுடச்சுட கொடுத்திருப்பேன். வேண்டுமென்றே மௌனமாய் இருந்தேன்.

'இன்னும் கொஞ்ச தூரம் போனோம். 'எமபுரியை அடைந்த உயிர் திரும்பிப்போக முடியாது; நீ திரும்பிப் போ' என்றான் காலன். மாட்டேன் என்றேன். ஏதாவது ஒரு ஆணை விடாமல் பிடித்துக்கொண்டு தொங்குவது உன் சுபாவம் போலிருக்கிறது! அப்படித்தான் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் என்னை நீ தொடர்ந்துவந்து எனக்கு தொந்தரவு கொடுப்பதின் பொருள் என்ன' என்று காலன் கர்ஜித்தான்.

"ஏ! அகம்பாவம் கொண்ட ஆண் மகனே! உன் இறுமாப்பை, நான் அடக்குகிறேன். உன் குடும்ப வாழ்க்கையின் ரகசியம் இப்பொழுதுதான் எனக்குத் தெரிந்தது. உனக்கு உன் மனைவியினிடத்திலும் உன் மனைவிக்கு

உன்னிடத்திலும் மருந்துக்குக்கூட பிரியம் இல்லை என்பது வெட்ட வெளியாகிவிட்டது. பிரியம் இருக்குமாகில், கேலிக்காகக்கூட, என் சுபாவத்தைப் பற்றிப் பேச, நீ துணிந்திருக்க மாட்டாய், நீ மனங் கொண்டிருக்கமாட்டாய். இதை, என் சகோதரியான உன் மனைவியிடம் சொல்லிவிட்டு வருகிறேன். உங்கள் நல்லறம் தழுவிய இல்வாழ்க்கைக்கு, நான் செய்யக்கூடிய தொண்டு, இது தான்' என்றேன்.

'நான் இவ்வாறு சொன்னதுதான் தாமதம். அவனுடைய முகம் அப்படியே வெளுத்துப் போய்விட்டது. நடப்பதை நிறுத்திக்கொண்டான். 'உன்னை வராமல் தடுப்பதற்காக, நான் அந்த யுக்தி செய்து பார்த்தேன். அது உண்மையல்ல. அதை உண்மை என்று நீ கொள்ளுவாயானால், அது உன் பொறுப்பு. நான் சத்தியவானைத் திருப்பிக் கொடுக்க முடியாது' என்றேன்.

'நீ சொன்னது உண்மையா, யுக்தியா என்பதை உன் மனைவியிடமிருந்து கேட்டுத் தெரிந்துகொள்ளுகிறேன். சத்தியத்தைக் காட்டிலும் சாமர்த்தியம் பெரிது என்று எண்ணும் ஆண் பிள்ளையை நான் நம்ப மாட்டேன். நிற்காதே. மேலே செல். நீ இங்கேயே நின்றுவிட்டாலும், நான் மேலே போகப் போகிறேன்' என்றேன்.

'காலனை நடுநடுங்க விழிப்போம் என்று பாரதியார் அருளியிருக்கிறாரே, அதை மெய் என்று நம்புங்கள். நான் மொழிந்தது, காலனை நடுநடுங்கச் செய்துவிட்டது. எந்த உலகிலும், எந்த சந்தர்ப்பத்திலும் செல்வாக்குடன் இருப்பவள் சத்தியமும் சீலமும் தவறாத, பொறுமைக்குப் பிறப்பிடமும் இருப்பிடமுமாக இருக்கும் பெண்மணி என்பதை நான் அப்பொழுது தெரிந்துகொண்டேன்.

'காலன் பணிந்தான். உனது முரட்டுத்தனத்தால், என் இல்வாழ்க்கையைப் பாழ்படுத்தி விடாதே என்றான். அதையே தான், உன்னை, திருப்பிக் கேட்கிறேன் என்றேன். காலன் விழித்துக்கொண்டான். எமன் கர்வம் கொண்டவனாதலால், இரண்டாவது தடவை, தனது சொல் குறையைப் பற்றி மன்னிப்பு கேட்பதைப் போல, என்னிடம் எதுவும் பேச, மனங்கொள்ளவில்லை.

'இதோ, உன் சத்தியவானை உனக்கு உயிருடன் தந்து விட்டேன்; அழைத்துக்கொண்டு போ என்ருன். 'பெரு மகிழ்ச்சி. என்னை நீ குறும்பாகக் கேட்டதுபோல, மறந்தும் எந்தப் பெண்ணையும் கேட்டு விடாதே. எச்சரிக்கை! இப்பொழுது சொல்லு, காதல் பெரிதா, காலன் பெரியவஞ என்று. காதலின் மாண்பு காலனுக்குக்கூட கிடையாது' என்றேன்.

'உண்மை என்ருன் காலன். நாரிமணிகளே! இறந்த பெண்ணின் உயிரை, எந்த ஆணுவது மீட்டுக்கொண்டு வந்திருக்கிருஞ? கற்பனைக்கடங்காத காரியங்களை, பெண்கள்தான் செய்ய முடியும். பெண் வாழ்க! கோதை தீவு ஓங்குக! காதல் ஆக்ஷி புரிக!'

இவ்வாறு பேசிவிட்டு, அந்தப் பெண் மறைந்தாள். அவள் பேசியபொழுது, அதைக் கேட்கக் கேட்க, நாங்கள் பரவசமாஞேம். மனித வர்க்கம் நடத்த வேண்டிய இறுதிப் போராட்டத்தை, பெண்ணுகிய சாவித்திரி ஏற்கெனவே நடத்திக் காண்பித்து விட்டாளே என்று நாங்கள் சொல்லிக்கொண்டு, மாணிக்கக் கோதையாரின் வீட்டுக்குத் திரும்பி வந்தோம்.

பெண்ணுகி வந்ததொரு மாயப் பிசாசு என்று வாய் கூசாமல் சொல்ல, பட்டணத்தாருக்கு எப்படித்தான் மனம் துணிந்ததோ என்றேன். 'அப்படிச் சொல்லிச் சொல்லி, ஆண் மகன் பெண்ணைக் கேவலப்படுத்திஞன், தானும் கேவலமாஞன். முடிவில், நமது நாடு பாழாய்ப் போனதுதான் மிச்சம். சாவித்திரியின் சாகஸத்தைப் பார்த்தாயா' என்று பூபதி என்னைக் கேட்டான். 'பார்க்கவும் பார்த்தேன்; கேட்கவும் கேட்டேன்' என்றேன்.

நாங்கள் கோதையாரின் வீட்டுக்கு வந்ததும், சாகஸம் எபபடி யிருந்தது என்று மாணிக்கக் கோதையார் கேட்டார். உடல் பூரித்துப் போஞேம் என்றேன். இதை எழுதியது யார் என்று பூபதி கேட்டான். இது பலபேர் வேலை என்ருர் கோதையார்.

'கோதைத் தீவில் பார்க்கவேண்டிய தெல்லாம் பார்த்தாகி விட்டது. ரொம்ப நாள் இங்கு தங்கிவிட்டோம். நாளைக்குக் காலமே ஊருக்குத் திரும்பலாம் என்பது எங்கள் எண்ணம்' என்று சொன்னேன்.

பூமியைத் துளைத்துக்கொண்டு வந்ததுபோல, பூங்காவன மல்லிகை, எதிரே வந்து தோன்றினார். 'கலியாணம், காதல், காதலுக்கு அடையாளம் இவைகளை யெல்லாம் பற்றி உங்களுக்குள் பேசிக் கொண்டிருந்தீர்களே? அது என்ன ஆயிற்று? கனவாகப் போயிற்று' என்று மல்லிகை, கொஞ்சங்கூட கூச்சம இல்லாமல் கேட்டார்.

நாங்கள் எல்லோரும் கலகலவென்று சிரித்தோம். மல்லிகை மேலும் சொல்லுகிறார் :—'காதல் என்பது கதை கதைக்கிற பொருள் அல்ல. அதை வம்பால் அளக்க முடியாது; வீணர்கள் அடைந்து, அனுபவிக்க முடியாது. பிரபஞ்சத்தை தாங்கி நிற்பது காதல். பிரபஞ்சத்தை, பாமாக கொள்ளுபவர்களுக்கு காதல், தேவையில்லை. அதனாலே தான், உங்கள் நாட்டில் காதல் கிடையாது. கலியாணம் மட்டும் சடங்கைப் போல நடைபெறுகிறது. நீங்கள், காதலைப் பற்றி விளையாட்டாகப் பேசினீர்கள் என்று இப்பொழுது தெரிகிறது. மாண்புகொண்ட கருத்துகளோடு, பொறுப்பில்லாமல் இனி நீங்கள் விளையாடவேண்டாம்.'

நீங்கள் சொல்ல வந்தது, சொல்ல வேண்டியது முடிந்ததா என்றேன். ஆம் என்றார் மல்லிகை. எங்களைப் பற்றி கோதையாருக்கும இதே அபிப்பிராயம்தானோ என்று கேட்டேன். பிரித்தாலும் உபாயம் வேண்டாம் என்றார் மல்லிகை.

'அப்படியானல் கூடி வாழ்வோம், கூடி ஆள்வோம' என்று பூபதி, மல்லிகையின் கைகளைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டான். கடிக்கிற நாய் ஒரு நாளும் குலைக்காது என்று பூபதி முணு முணுத்தான். மல்லிகை, தன் கைகளை பூபதியின் கைகளினின்றும் பிரித்து எடுத்துக்கொள்ள முயலவே இல்லை.

'இப்படித்தான், பெண் எப்பொழுதும் ஆணின்பேரில் வெற்றி கொள்ளும போலிருக்கிறது. இயற்கை தன்

வேலையை எத்தனையோ வகைகளில் செய்கிறது. காதலுக்கு அடையாளமாவது, ஆடம்பரமாவது! காதல் தோன்றிய நிமிஷமே, அது எத்தனையோ வகைகள் கொண்ட விசித்திரங்களை செய்கிறது. கசடன் கனைக்கிறான்; கவிஞன் பாடுகிறான். அற்பன் வெறித்து வெறித்துப் பார்க்கிறான். ஆசாரக் கள்ளன் தத்துவம் பேசுகிறான்; ஆண்மை நிறைந்த மகனோ, பூபதியைப் போல, காதலியின் கைகளைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்ளுகிறான் துஷ்டனோ, தான் இச்சைகொண்ட பெண்ணின் வீட்டின் பேரில் கல்லை விட்டு எறிகிறான்; தூய மனத்தினனோ, மௌனமாக, பொறுமையுடன் காத்துக்கொண்டிருக்கிறான். காதல் செய்யும் சேஷ்டைகள் இத்தனைதான், இத்தன்மைத்துத்தான் என்று நிறுத்துக் கட்டிச் சொல்ல முடியாது' என்று நான் சிறு பிரசங்கம் செய்தேன்.

'உன் காதல் உன்னை என்ன செய்யத் தூண்டுகிறது' என்று பூபதி, என்னைப் பார்த்து நையாண்டி பண்ணினான். கோதையாரை இந்த நிமிஷமே, யாதொரு ஆடம்பரமின்றி, கலியாணம் செய்துகொள்ளத் தூண்டுகிறது' என்றேன். கோதையார் சிரித்தார்.

கோதைத் தீவில், இரவு ஒன்பது மணி வரையில், கலியாணம் ரிஜிஸ்டர் செய்யலாம். நானும் கோதையாரும் எட்டு மணிக்கு, ரிஜிஸ்டர் ஆபீஸுக்குச் சென்று, கலியாணத்தை பதிவு செய்துகொண்டோம். மறுநாள்தான், பூபதியின் கலியாணம் நடந்தது.

ஆனால், கலியாணம் ஆனால் என்ன? 'கலியாணம் ஆகியும் பிரம்மசாரி; கடன் வாங்கியும் பட்டினி' என்பார்களே, அந்த நிலைமைதான் எங்களுடையது.

கலியாணமான மறு நாளே, கோதைத் தீவின் நிர்வாகி, வெளி நாடுகளில் பிரசாரம் செய்வதற்காக எங்களை அனுப்பிவிட்டார். கோதைத் தீவின் அருமை பெருமைகளை, நாங்கள் வெளியுலகத்தாருக்கு எடுத்துச் சொல்லி வருகிறோம். இன்னும் சிறிது காலத்துக்குப் பின், நாங்கள் எங்கள் காதலிகளோடு போய்ச் சேர்ந்துவிடுவோம்.

'ராமா! கதை முழுதையும் கேட்டாயா? அல்லது நடுவே நடுவே தூங்குகிறாயா' என்று கணபதி ராயன் என்னைக் கேட்டான்.

விழித்துக் கொண்டுதான் இருந்தேன் என்றேன். அவன் கேட்காமலே, 'கோதைத் தீவு வரலாறு நன்றாயிருக்கிறது' என்று சிரித்துக்கொண்டு சொன்னேன். கேலி செய்கிறாயா என்றான். இல்லை என்று அழுத்தமாகச் சொன்னேன்.

கணபதிராயன் சொல்லுகிறான் :—'ராமா! கோதைத் தீவில், கவாத்துப் பழகுவதும், ஈட்டி எறிவதும், துப்பாக்கி சுடுவதும் தான் கலைப் பயிற்சிகள் என்று நினைக்காதே. சங்கீதம், சித்திரம், நடனம் முதலிய மிருதுத் தன்மை கொண்ட அருங்கலைகள் அமோகமாக செழித்து நிற்கின்றன. சுதந்திரத்தை காப்பது கவாத்தும் துப்பாக்கியும், சுதந்திரத்தின் நடுவேதான், அருங்கலைகள் பயிராகும்.

The B. N. Press, Madras.